பழனியப்பா பிரதர்ஸ்

# தந்தையின் காதலி

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# தந்தையின் காதலி

ஆசிரியர் :

மாக்ஸிம் கார்க்கி

தமிழாக்கம் :

ரகுநாதன்

பழனியப்பா பிரதர்ஸ்

சென்னை-5. :: திருச்சி-2.

இலக்கிய சிருஷ்டியில் முனைந்தார். 1892-ஆம் வருஷம் இவரது முதற்கதையான, 'மக்கர் சூத்ரா' வெளியாயிற்று. புரட்சிக் கட்சியில் சேர்ந்த காலத்திலிருந்து உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்களான லெனினோடும், ஸ்டாலினோடும் தோளோடு தோள் நின்று உழைத்திருக்கிறார். அதன் காரணமாக, பலதடவை கைதாகியிருக்கிறார். இடையருத உழைப்பினால் இவரது உடல் நலம் மோசமாகி விட்டது. தமது வாழ்க்கை லட்சியத்தின் வெற்றிச் சின்னமாக விளங்கும் சோவியத் நாட்டிலே, இவர் 18, ஜூன், 1936-ஆம் வருஷம் காலமானார்.

கார்க்கி பல சிறு கதைகளும், சில நாவல்களும் எழுதியிருக்கிறார். நாடகங்களும் எழுதியிருக்கிறார். 'அதல பாதாளம்' என்னும் இவரது நாடகம் உலகப்புகழ் பெற்றது. 'சுய சரித்திரம்', 'லெனினுடன் வாழ்ந்த நாட்கள்', 'அமெரிக்கா வில்' முதலிய பல நினைவுக் குறிப்புக்களையும் எழுதியிருக்கிறார். இவரது தலைசிறந்த நாவலான 'அன்னை' தமிழில் ஏற்கனவே வெளிவந்துள்ளது. இந்தக்கதை 'மால்வா' என்னும் தலைப்பில் 1897-ஆம் வருஷத்தில் எழுதியதாகும்.

ஏழைச் சமூகத்தைப்பற்றிக் கதைகள் எழுதும் இன்றைய எழுத்தாளர்கள் ஏழைகளைப் பாமரர்களாகவும், இருகால் பிராணிகளாகவுமே கருதி, அனுதாபத்தோடு எழுத முனைகிறார்கள். எப்படி முதலாளிகள் தொழிலாளிகளை மனிதர்களாகக் கருதவில்லையோ, அதுபோலவே இந்த எழுத்தாளர்களும் ஏழைகளை மனிதர்களாகக் கருதவில்லை என்பதுதான் உண்மை. ஆனால், ஏழைப்பட்ட மனிதனுக்கு எழுத்தாளனின் இரக்க சிந்தையோ, அனுதாபமோ தேவை இல்லை. எழுத்தாளனைப்போலவே அவனும் ஒரு மனிதன்; சுயநலத்தால் பாழ்பட்டுப்போன ஒழுக்கக்கேடும், பெரிய மனிதர்களின் உணர்ச்சி விகாரங்களும் அவனுக்குக் கிடையாது. ஏழையிடமே மனிதகுணங்கள் நிரம்பியிருக்கின்றன. ஆனால், அவன் சுதந்திரமற்றுக் கிடக்கிறான். அந்தச் சுதந்திரத்தை அவனுக்கு அளிப்பதற்காக எழுதுபவர்களே முற்போக்குக் கலைஞர்கள். பட்டினிச் சாவைக் கண்டு ஒப்பாரி வைத்து, கண்ணீரை வருவிப்பவன் முற்போக்காளனல்ல; உலகிலுள்ள அத்தனைபேரின் ரத்தக்கண்ணீரையும் துடைத்து, பட்டினிச் சாவைப் போக்க வழிகாட்டும், அந்தப் பாதையில் செல்ல நம்மைத் தூண்டிவிடும், தானே முன்சென்றும்

நடப்பவனே முற்போக்காளன். இந்த மாதிரியான முற்போக்காளனின் பிரதிபிம்பத்தைத்தான் நாம் கார்க்கியின் இலக்கிய சிருஷ்டிகளில் காண்கிறோம்.

விபசாரி, ஒழுக்கம் கெட்டவள் என்று உலகம் தூற்றும் ஒருத்திதான் தந்தையின் காதலியான மால்வா. ஆனால் அவளுக்கும் மனித இதயமில்லையா? அவளுக்கும் நல்லுணர்ச்சிகள் கிடையாதா? அவளுக்கும் தியாக புத்தி கிடையாதா?...

உண்டு!—என்கிறது இந்தக் கதை.

செப். '50. ரகுநாதன்

# 1

கடல் சிரித்துக் கொண்டிருந்தது. வெம்மை புரையோடிய இளங் காற்றினால் சமுத்திரம் கிளர்ச்சி யுற்றுச் சிலிர்த்தது; சிற்றலைகள் வளைந்து சுழிந்து பரந்தன; அந்த அலைகளில் சூரிய கிரணம் பட்டு, ஜோதிப் பிரகாசமாய் மினுக்கியது; வெள்ளி மயமான ஆயிரம் புன்னகைக் கதிர்களோடு வானவெளியின் நீலத்தை நோக்கி நகைத்தது. வானுக்கும், கடலுக்கும் இடையே உள்ள பரந்த ஆகாச வெளியில், குமுறித் தாவும் அலைகளின் நாதம் நிறைந்து ஒலித்தது. ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து தாவும் அலைக் கூட்டம் கடற்கரைச் சரிவை நோக்கிப் பாய்ந்தோடின. தெறித்துச் சிதறும் அலைகளும், சிற்றலைப் பரப்பில் பட்டுச் சிதறும் கதிரொளியும் இங்கிதம் நிறைந்து, முறிவற்ற லயத்தோடு கூடி முழங்கி, உற்சாகத்தோடும், உவகையோடும் பொங்கிக் கொண்டிருந்தன. சூரியனும் ஆனந்த மயமாயிருந்தது; ஏனெனில், அது பிரகாசித்தது. கடலும் அப்படித்தான்; ஏனெனில் அது சூரியனின் ஒளி வெள்ளத்தைப் பிரதிபலித்தது.

கடலின் பட்டுப்போன்ற மார்பகத்தை, காற்று அன்போடு தட்டிக்கொடுத்தது; சூரியன் தன் வெம்மைக் கதிர்களால் கடலின் உடம்புக்கு வெதுவெதுப்பு ஊட்டிற்று; இந்தச் சரச ஆலிங்கனத்தால், கடல் சொக்கிப்போய்ப் பெருமூச்செறிந்தது. அந்தப் பெருமூச்சில் உஷ்ணக் காற்றும், உப்பு வாடையும் நிறைந்திருந்தது. பசிய வர்ணம் படைத்த அலைப் பெருக்கு மஞ்சள் நிறமான கடற்கரையில் மோதிச் சிதறி, வெண்ணுரைத் துகள்களைச் சிந்தி மீண்டது. அந்த நுரைக் குமிழிகள் மணற் சூட்டில் கரைந்துருகி, மெதுவாக மூச்சு விட்டு மறைந்தன. எனினும் கரையில் ஈரம் பாய்ந்து விட்டது. நீண்டு குறுகலாக வளர்ந்து கடலுக்குள் தலை நீட்டிக்கொண்டிருந்த மேட்டுத் திடல் கரையிலிருந்து கடலுக்குள் இடி சாய்ந்துபோன ஒரு மாபெரும் கோபுரம் போலத் தோன்றியது. அந்தத் திடல் மேட்டின் குடாவளைவு, எல்லை காணாக் கடல் வெள்ளத்துக்குள் இறங்கியிருந்தது; அந்தக் குன்றின் அடிவாரம் ஊர்ப்புறத்தை மறைத்து நிற்கும்

தூரத்து மந்தார மூட்டத்தில் மறைந்து போய்விட்டது. நீலவான ஒளிப்பரப்பின் கீழே நிர்மலமாய் விரிந்து பரந்துள்ள கடலைநோக்கி, ஊர்ப்புறத்திலிருந்து தெளிவற்ற வெறுப்புத் தரும் நாற்றக் காற்று வீசியது.

கடற்கரையில் மீன் செதில்கள் சிதறிக் கிடந்தன. கால்கள் நாட்டிக் காயப் போட்டிருந்த மீன்வலை மணல் வெளியில் சிலந்தி வலைபோன்ற நிழல்களைப் பதிவு செய்தன. பல பெரிய படகுகளும் ஒரு சின்னத் தோணியும் வரிசையாகக் கிடந்தன. கடற்கரையைநோக்கி ஓடிவரும் அலைகள், அந்தத் தோணிகளைக் கை நீட்டி அழைப்பது போல் இருந்தன. தோணிக் கொக்கிகள், துடுப்புகள், கூடைகள், பீப்பாய்கள் எல்லாம் ஒழுங்கற்றுச் சிதறிக் கிடந்தன. அவற்றுக்கு மத்தியில் புல்லாலும், மரக்கிளைகளாலும் கட்டப்பட்டு, மரப்பட்டையால் மூடப்பட்ட ஒரு குடிசையும் காணப்பட்டது. அந்தக் குடிசையின் முகப்பு வாசலில், பதப்பட்டுப்போன ஒரு ஜோடி பூட்சுகள் தொங்கிக்கொண்டிருந்தன; அவை இரண்டும் கணுக்கள் நிறைந்த தனித்தனிக் கம்பிலே சொருகப்பட்டு, வானை அண்ணாந்து பார்த்துக்கொண் டிருந்தன; இதற்கெல்லாம் மேலாக உயரத்தில் ஒரு பாய்மரம் இருந்தது; அதன் உச்சியில் ஒரு சிவப்புக் கந்தைத்துணி காற்றில் படபடத்துக்கொண் டிருந்தது.

அங்குக்கிடந்த தோணிகளின் ஒன்றின் நிழலில்,வாஸிலி லிகோஸ்ட்யேவ் படுத்திருந்தான்; அவன் அந்தத் திடல் மேட்டின் காவல்காரன். கிரெபென்ஸீசிக்கோ மீன் பண்ணைக்கு அதுவே காவல் சாவடி. வாஸிலி குப்புறப்படுத்து,மோவாயை உள்ளங் கைகளில் தாங்கி இருந்தான். கரையை ஒட்டித் தூரத்தில் மங்கித் தெரியும் ஊர்ப்புறத்தின் பக்கமாக, கண்ணெட்டும் தொலைவரை கடலையே பார்த்துக்கொண் டிருந்தான். நீர்ப்பரப்பின்மீது தெரியும் சிறு கறும்புள்ளியின்மீது அவன் கண்கள் இமையாது நிலைகுத்தி நின்றன. அந்தப் புள்ளி அருகே நெருங்கி நெருங்கிப் பெரிதாகத் தோன்றத் தோன்ற, அவன் அளவற்ற ஆனந்தத்தோடு அதைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

தண்ணீரில் பட்டுப் பிரதிபலிக்கும் சூரிய ஜோதியை மறைப்பதற்காகக் கண்ணைச் சுருக்கிச் சுழித்தான்; மனநிறை

வோடு; அவன் புன்னகை புரிந்தான்—இதோ மால்வா வந்து கொண்டிருக்கிருள்; அவள் வருவாள்; சிரிப்பாள்; அவளது மார்பகம் ஆசையோடு துடிக்கும். தன் உருண்டு திரண்ட மென்மைக் கரங்களால் அவனைத் தழுவுவாள்; ஓசை கேட்கும்படியாக, அவனுக்கு முத்தம் கொடுத்து உபசரிப்பாள். அதைக் கண்டு, கடற் பறவைகள் எல்லாம் பயந்து ஓடும். அங்கே, ஊர்க்கரையில் நடக்கும் விஷயங்களை எல்லாம் அவனுக்கு எடுத்துச் சொல்லுவாள். இருவருமாகச் சேர்ந்து அருமையாக மீன் கறி சமைப்பார்கள்; ஓட்கா மது குடிப்பார்கள்; மணலிலே நீட்டி நிமிர்ந்து படுத்துப் பேசுவார்கள்; சரசமாடுவார்கள். பிறகு சந்தியா காலம் சாயும் நேரம், கெட்டிலைக் கொதிக்க வைத்து, தேநீர் குடிப்பார்கள்; ருசியான காரப்பண்டம் தின்பார்கள். பிறகு படுக்கப் போவார்கள்...இப்படித்தான் எல்லா ஞாயிற்றுக்கிழமையன்றும், விடுமுறை நாளன்றும் நடப்பது வழக்கம். வழக்கம் போல் மறுநாள் அதிகாலையில், கடல் அயர்ந்து தூங்கும் வேளையில் படகேற்றி, அருணோதயப் பொழுதின் பொன்னிறமான புத்தொளியில், அவளைக் கொண்டுபோய் ஊர்ப்புறத்தில் விட்டுவிட்டு வருவான். அப்போதெல்லாம் அவள் தோணியின் முனைப்புறத்தையே பார்த்துக்கொண்டிருப்பாள்;அவன் துடுப்புத் தள்ளியவாறு அவளையே பார்த்துக் கொண்டிருப்பான். அந்த மாதிரிச் சமயங்களில் அவளைப் பார்க்க எவ்வளவோ வேடிக்கையாய் இருக்கும். வேடிக்கை தான்! என்ருலும், ஊட்டி வளர்த்த பூனைக்குட்டி மாதிரி பார்ப்பதற்கு ஆசை தருவதாகவும் இருக்கும். சமயங்களில் அவள் தோணிப் பலகைமீது அமராமல், தோணியின் அடியில் போய் சுருட்டி மடக்கிப் படுத்து, நன்ருகத் தூங்கவும் ஆரம்பித்துவிடுவாள். அந்த மாதிரி அநேக தடவை அவள் தூங்கியும் இருக்கிருள்.........

அன்று கடற் பறவைகள்கூட, சூரிய உஷ்ணத்தால் சுண்டிப்போயின. சில பறவைகள் மணல் வெளியில், இறக்கைகளைத் தொங்கப் போட்டவாறும் அலகுகளைத் திறந்தவாறும் வரிசையாக உட்கார்ந்திருந்தன; மற்றவை அலைகளுக்கு மேலாக உற்சாகமற்று நீந்திப் பறந்தன; சத்தம்கூட போடவில்லை. இரை கொத்துவதற்காக வழக்கமாகப் பாய்ந்து தாவும் மூர்க்கச் செயலைக்கூடத் துறந்துவிட்டன.

தோணியில் மால்வாவைத் தவிர, வேறு யாரோ ஓர் ஆசாமியும் கூட இருப்பதாக வாஸிலிக்குத் தோன்றியது. பழையபடியும் ஸெர்யோஸ்காதான் அவளைத் தொங்கிக் கொண்டு திரிகிருனே? வாஸலி மணல்மீது புரண்டு எழுந்து உட்கார்ந்தான்; கையினுல் கண்ணுக்கு நிழல் தேடிக் கொண்டு, கடற் பரப்பை ஆர்வத்தோடு கூர்ந்து பார்த்தான். அதன் மூலம் படகில் இருக்கும் ஆசாமியை இனம் கண்டுகொள்ள முயன்ருன். மால்வா தோணிப் பலகைமீது அமர்ந்து, தோணியை வழி செலுத்தி வந்தாள். துடுப்புத் தள்ளும் மனிதன் ஸெர்யோஸ்கா அல்ல; அவனுக்குத் துடுப்புத் தள்ளிப் பழக்கமில்லை. ஸெர்யோஸ்கா அவள் கூட வந்தால், அவள் வழிசெலுத்தவேண்டிய தேவையில்லை......

*" அஹ், ஹோய்!" வாஸிலி பொறுமை இழந்து கத்தினுன்.

அந்தச் சத்தத்தைக் கேட்டு, மணலிலிருந்த கடற் பறவைகள் திடுக்கிட்டுப்போய்ப் பறப்பதற்குத் தயாராய் எழுந்து நின்றன.

" அஹ், ஹோய்!" மால்வாவின் கணீரென்ற குரல் படகிலிருந்து வந்தது.

" உன்னோடு இருப்பது யாரு?"

சிரிப்புத்தான் பதிலாக வந்தது.

" குறும்புக்காரி!" என்று வாய்க்குள்ளாக முணு முணுத்துக் கொண்டான்; எரிச்சலோடு காறித் துப்பினுன்.

மால்வாவோடு அந்தப் படகிலிருப்பது யார் என்று அறியத் துடித்தான், வாஸிலி. ஒரு சிகரட்டைச் சுருட்டி எடுத்துக்கொண்டே, துடுப்புத் தள்ளிவரும் மனிதனின் கழுத்தையும் முதுகையும் கூர்ந்து பார்த்தான். துடுப்பு தண்ணீரில் மோதும் சப்தத்தை அவன் தெளிவாகக் கேட்க முடிந்தது; அவன் காலடியிலுள்ள மணல் காலைப் பலமாக ஊன்றுவதால் பிதுங்கி நசுங்கியது.

* இப்படிச் சத்தமிடுவது ஏலேல ஓசை போன்றது.

" யாரது? உன்னோடே!" என்று சத்தமிட்டான் வாஸிலி. மால்வாவின் அழகிய முகத்தைக் கண்டு, வழக்கத்துக்கு விரோதமாக, விநோதமாகப் புன்னகை புரிந்தான்.

" காத்திருந்துதான் பாரேன்!" என்று அவள் சிரித்துக்கொண்டே பதில் சொன்னாள்.

அந்த மனிதன் கரையை நோக்கி முகத்தைத் திருப்பி வாஸிலியைப் பார்த்தான்; அவனும் சிரித்தான்.

காவல்காரன் வாஸிலிக்கு அந்த முகம் பழக்கப்பட்ட முகமாகத் தெரிந்ததே ஒழிய, ஆள் அடையாளம் தெரியவில்லை. எனவே முகத்தைச் சுழித்து யோசித்தான்.

" பலமா இழு " என்று உத்தரவிட்டாள் மால்வா.

கடற்கரையின் பாதி தூரம்வரை அலைகளே படகைத் தள்ளிவிட்டன. தரை தட்டியதும், படகு மணலில் பதிந்தது. அலைகள் மட்டும் மீண்டும் வடிந்துவிட்டன. அந்த மனிதன் படகிலிருந்து இறங்கிக் குதித்துக்கொண்டே குரல் கொடுத்தான்.

" அப்பா!"

"யாகோவ்!" என்று அடைபடும் குரலில் சொன்னான் வாஸிலி. சந்தோஷத்தைவிட அவன் குரலில் வியப்புத்தான் அதிகம் தொனித்தது.

அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் தழுவி, கன்னத்திலும் உதட்டிலும் மூன்று முறை மாறி மாறி முத்தமிட்டுக் கொண்டனர். வாஸிலியின் முக பாவத்தில் ஆனந்தமும், சஞ்சலமும் கலந்து பிரதிபலித்தன.

"......நானும் பார்த்தேன், பார்த்தேன். எம் மனசு கிடந்து துடியாய்த் துடிச்சுது. யாருடா அதுன்னு அதிசயிச்சேன்... கடைசியா, நீதானா? இதைப் பத்தி யார்தான் நினைச்சிருப்பா? முதல்லே, ஸெர்யோஸ்காவோன்னு பார்த்தேன். பின்னாலே அவன் இல்லேன்னு தெரிஞ்சுகிட்டேன். முடிவா, ஆசாமி யாருடான்னா —நீ!"

பேசும்போதே, வாஸிலி ஒரு கையால் தன் தாடியைத் தடவிக் கொடுத்தான். மறு கையால் வக்கணை காட்டினான்.

அவன் மால்வாவைப் பார்ப்பதற்காகத் துடித்தான். ஆனுல், தன் முகத்தையே பார்த்துக்கொண் டிருக்கும் தன் மகனின் களியும் ஒளியும் நிறைந்த கண்களைக் கண்டு அவன் மனம் குழம்பிப் போனுன். அழகான, கவர்ச்சிகரமான வாலிப மகனைக் காண்பதால் ஏற்பட்ட திருப்தியுணர்ச்சி தன் காதலியின் வருகையால் ஏற்பட்ட சஞ்சல உணர்ச்சியின் தலையீட்டால் குறைபட்டுப் போயிற்று. ஒரு காலை முன்னே எடுத்துவைத்து, அவன் யாகோவின் முன் நின்றுகொண்டு பதிலுக்குக் கூடக் காத்திராமல் கேள்விகளை அடுக்கினுன். அவன் மூளையே குழம்பிப் போய்விட்டது. அத்துடன் மால்வா கேலியாக ஏதோ சொல்வதைக் கேட்டவுடன் அவன் அதிர்ந்தே போய்விட்டான்.

"சந்தோசத்திலே ஓரேயடியா, கும்மாளம் போட்டுக் கிட்டு நிக்காதே. அவனைக் குடிசைக்குக் கூட்டிப் போய், ஏதாவது சாப்பாடு பண்ணு."

அவன் அவள் பக்கம் திரும்பினுன். கேலி நிறைந்த சிரிப்பு அவளது இதழ்க் கோணத்தில் விளையாடியது. அந்த மாதிரி அவள் புன்னகை புரிவதை அவன் இதற்கு முன் பார்த்ததே இல்லை. மேலும் அவளது முழு உடம்பு—உருண்டு திரண்டு புதுமையும் பொலிவும் நிறைந்த உடம்பு—முழுவதும் ஏதோ வேறுவிதமாகத் தெரிவதாக மனசில் பட்டது; அபூர்வமாகப் பட்டது. அவள் தனது சிறிய வெண்பற்களால், வெள்ளரிப் பருப்புக்களைக் கடித்துக் கொறித்துக்கொண்டே, தன் பசிய கண்களைத் தந்தையிடமிருந்து பிள்ளையின் பக்கம் திருப்பினுள். யாகோவும் அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்து, புன்னகை புரிந்தான். எத்தனையோ தடவை வாஸிலிக்கு இந்த இக்கட்டான நிலை தர்ம சங்கடமாகப் பட்டது. ஏனெனில், மூவரும் மௌனியாகவே இருந்தனர்.

"சரி, ஒரே நிமிஷம்!" என்று திடீரென்று வாஸிலி வாய்திறந்து சொல்லிவிட்டு குடிசையை நோக்கிப் புறப்பட்டான். "நான் போய்க் கொஞ்சம் தண்ணி கொண்டு வர்ரேன். அதுவரையிலே நீ வெயில்லே நிக்காதே..... பிறகு, நாம் கொஞ்சம் மீன்கறி சமைப்போம்...யாகோவ் உனக்கு மீன்கறி வச்சித் தாரேன்! இதுமாதிரி, நீ இதுக்கு

முன்னல் சாப்பிட்டிருக்கவே மாட்டே! அதுக்கிடையிலே, நீங்க ரெண்டு பேரும் கொஞ்சம் ஓய்வு எடுங்க, நான் ஒரு நிமிஷத்திலே வந்திடுறேன்."

குடிசைப் பக்கத்திலிருந்த கெட்டிலை எடுத்துக்கொண்டு, வலையை நோக்கி விரைவாக நடந்தான், வாஸிலி; சிறிது நேரத்தில் வலை மடிப்புகளுக்கப்பால் மறைந்து போனுன்.

மால்வாவும், யாகோவும் குடிசைப் பக்கம் வந்தனர்.

"என் அருமைப் பையா! நீ மட்டும் இங்கு வந்து சேர்ந்துட்டே. நான் உன் அப்பாவிடம் கொண்டுவந்து உன்னைச் சேர்த்தாச்சி" என்றுள் மால்வா. சொல்லும் போது அவளது கடைக்கண் வீச்சு, யாகோவின் கட்டு மஸ்தான தேக வனப்பை, சுருள் சுருளாக ரோமம் படிந்து, சிறு தாடி வளர்ந்த முகத்தை, ஒளி வீசும் கண்களை யெல்லாம் அளந்து பார்த்தது.

"ஆமாம், வந்து சேர்ந்துவிட்டோம்" என்று அவள் பக்கம் ஆர்வத்தோடு திரும்பிக்கொண்டே பதிலளித்தான் யாகோவ். "இங்கே எவ்வளவு நல்லாயிருக்கு! அதோ கடல்! பார்க்க அழகாயில்லே?"

"ஆமாம். இது பெரிய சமுத்திரம்......சரி, உன் அப்பா ரொம்பக் கிழடு தட்டிப்போன மாதிரி இருக்காரோ?"

"இல்லே, அப்படி ஒண்ணும் அதிகமாகத் தெரியலே. அவர் தலை ரொம்ப நரைச்சிப் போயிருக்கும்னு எதிர் பார்த்தேன். ஒண்ணு ரெண்டுதான் நரைச்சிருக்கு. இன்னும் அவர் எவ்வளவு திடாகாத்திரமா இருக்காரு!"

"அவரை நீ பார்த்து எவ்வளவு நாளாச்சு! சொல்லேன்!"

"அனேகமா அஞ்சு வருஷத்துக்கு மேலே இருக்கும்னு நினைக்கிறேன்... அவர் வீட்டை விட்டுப் புறப்பட்ட காலத்திலே, எனக்குப் பதினேழு வயசு நடந்துகிட்டிருந்துது..."

பிறகு அவர்கள் இருவரும் குடிசைக்குள் நுழைந்தனர். உள்ளே இருளடைந்து கிடந்தது; தரையிலே

கிடந்த சாக்குப் பைகளிலிருந்து மீன் நாற்றம் அடித்தது. அவர்கள் உட்கார்ந்தனர். யாகோவ் ஒரு கணுமுண்டான மரக்கட்டைமேல் உட்கார்ந்தான்; மால்வா ஒரு சாக்கு மூட்டைமேல் உட்கார்ந்தாள். அவர்களுக்கு மத்தியில் விளிம்பிழந்த பீப்பாய் ஒன்று கிடந்தது; அதைக் குப்புறக் கவிழ்த்திருந்ததால் அதன் மேல் பாகம் ஒரு மேசைப் பலகைப்போல் அமைந்துவிட்டது. அவர்கள் இருவரும் வாய் பேசாமல் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"சரி. எனக்கு ஒண்ணுமே ஓடலே...எனக்கு இங்கேயே ஒரு வேலே கிடைச்சா நல்லதுன்னு படுது."

"கிடைக்காமல் என்ன? நிச்சயம் கிடைக்கும்" என்று நம்பிக்கையோடு சொன்னாள் மால்வா. ஏதோ விளங்காத புதிர்போல் தனது பாதி மூடிய பசிய கண்களால் அவனைப் பார்த்தாள்.

யாகோவ் தன் பார்வையை அவளிடமிருந்து விலக்கினான்; தன் முகத்தில் அரும்பிய வியர்வையைச் சட்டைத் துணியால் துடைத்துக்கொண்டான்.

திடீரென அவள் சிரித்தாள்.

"உன் அம்மா, உன் அப்பாவுக்கு ஆசை நிறைஞ்ச சேதி ஏதாவது சொல்லி அனுப்பியிருப்பா, அப்படித் தானே!" என்றாள் மால்வா.

யாகோவ் அவளை ஒருபார்வை பார்த்தான்; முகத்தைச் சுழித்தான்; பிறகு கடுமையாகப் பதில் சொன்னான்:

"ஆமாம். அதை நீ ஏன் கேக்கறே?"

"சும்மாத்தான்!"

யாகோவுக்கு அந்தச் சிரிப்பு பிடிக்கவே இல்லை; அதில் அத்தனை வசிய சக்தி இருந்தது. அவன் தன் முகத்தை மால்வாவிடமிருந்து திருப்பிக்கொண்டான்; பிறகு தன் தாய் சொல்லியனுப்பிய செய்தியை நினைவு கூர முயன்றான்.

அவன் கிராம எல்லையை விட்டு நீங்கும்வரை, அவனது தாய் அவனையே பார்த்துக்கொண்டு வழியனுப்பி வைத்தாள். ஒரு மரவேலிமீது சாய்ந்துகொண்டே படபடவென்று பேசினுள்; தன் வறண்ட கண்களையும் படபடவென்று இமை கொட்டினுள்.

*" யாஷா, அவரிடம் சொல்லு. கிறிஸ்துவுக்காகச் சொல்லு, அவர் ஒரு தகப்பன் என்பதை அவரிடம் நீயே சொல்லு !...உன் தாய் தன்னந்தனியா இருக்கா—அதையும் சொல்லு. அஞ்சு வருச காலமா, ஒத்தைக் கட்டையா தவிக்கிருள்னு சொல்லு. வரவர அவள் கிழடு தட்டிகிட்டே வராள்னு சொல்லு, கடவுளுக்காக, இதையெல்லாம் சொல்லு, யாஷா ! உன் தாய் சீக்கிரமே கிழவியாயிருவா ......ஆமு, தனியாக கிடந்து நாயா உழைக்கிரு !...கிறிஸ்துவின் பேரால், இதையும் சொல்லு !..."

பிறகு அவள் தன் முகத்தை உடுப்புத்துணியில் மறைத்துக்கொண்டே, மௌனமாக அழுதுகொண்டிருந்தாள்.

யாகோவுக்கு அதைக் காணும்போது அத்தனை துக்கம் இல்லை; இப்போது அதை நினைக்க நினைக்கத்தான் துக்கம் உண்டாயிற்று.

அவன் மால்வாவைப் பார்த்து, முகத்தைச் சுழித்தான்.

" சரி. நான் வந்துவிட்டேன் " என்று சொல்லிக் கொண்டே வாஸிலி அங்கு வந்துசேர்ந்தான். அவனது ஒரு கையிலே மீனும், மறு கையில் ஒரு கத்தியும் இருந்தன.

அவன் தன் மனசில் ஏற்பட்ட சஞ்சலத்தைப் போக்கி விட்டான்; அதாவது, அதை நெஞ்சுக்குள்ளேயே ஆழப் புதைத்துவிட்டான். எனவே இப்போது அவன் அவர்களிருவரையும் அமைதியுடன் பார்த்தான்; என்ருலும் அவன் நடவடிக்கையில் மட்டும் என்றைக்குமில்லாத பசப்பும், பாசாங்கும் இருப்பது நன்ருகத் தெரிந்தது.

---

* யாஷா, யாஷ்கா என்ற பெயர்கள் யாகோவைச் செல்லமாக அழைக்கும் பெயர்கள்.

“ நான் போய், அடுப்பை பத்தவச்சிட்டு வாரேன். அப்புறம் நாம் எல்லோருமாக உட்கார்ந்து சாவகாசமாகப் பேசலாம். சரிதானே யகோவ்?” என்றான் அவன்.

இதைச் சொல்லிவிட்டு, அவன் அங்கிருந்து அகன்று சென்றான்.

மால்வா யாகோவைக் குறுகுறுவென்று பார்த்தவாறே வெள்ளரி விதைகளைக் கடித்து உடைத்துக் கொண்டே இருந்தாள்; அவளைப் பார்க்கவேண்டும் என்று அவன் துடியாய்த் துடித்தபோதிலும், வேண்டுமென்றே அவள் பக்கம் தன் கண்களைத் திருப்பாமல் இருந்தான்.

கொஞ்சநேரம் கழிந்தது; அந்த மோன வைராக்கியம் அவனையே அமுக்குவது மாதிரி இருந்தது; எனவே வாய் திறந்தான்.

“ஐயையோ! நான் என் மூட்டையைத் தோணியிலேயே வச்சிட்டேனே! போய் எடுத்துட்டு வாரேன்.”

அவன் சாவதானமாக எழுந்திருந்து குடிசையை விட்டு வெளியே போனான். அவன் போகவும், வாஸிலி திரும்ப வந்து சேர்ந்தான். மால்வாவின் பக்கம் குனிந்து நின்று கொண்டே, கோபமும் பரபரப்பும் கொண்ட குரலில் பேசினான்:

“நீ ஏன் அவனோடே வந்தே? உன்னைப்பத்தி அவன் கிட்டே நான் என்ன சொல்றது? நீ எனக்கு என்ன சொந்தம்?”

“ஆமாம் வந்தேன், அதுக்கென்ன இப்போ?” என்று முறித்துப் பேசினாள் மால்வா.

“நீ...நீ ஒரு துக்கிரிப் பொம்பிளை; இப்போ நான் என்ன செய்றது? அவன் முகத்தைப் பார்த்து என்ன சொல்றது? எப்படி வாயைத் திறக்கிறது? எனக்கு ஊரிலே ஒரு பொஞ்சாதி இருக்கா—அவனோட அம்மா!......உனக்கு அதெல்லாம் தெரியாமலா போச்சி!”

“அதைப் பற்றி எனக்கென்ன கவலை? அவனைப் பார்த்து நான் பயப்படணும்னு நினைக்கிறியா? இல்லே. உன்னைப் பார்த்தா?” மால்வா கசப்போடு கேட்டாள்;

அவளது பசிய கண்கள் ஏறச் சொருகின; "நீ அவன் முன்னாலே தாளம்போட்டு குதிச்சதை நினைச்சாலே வேடிக்கையா இருக்கு! என்னாலே சிரிப்பை அடக்கவே முடியலே!"

"உனக்கு வேடிக்கையாயிருக்கு. என் பாடு?"

"அதைப்பத்தி நீ முன்னாடியே யோசிச்சிருக்கணும்."

"இருந்தாலும், அவன் கடலைத் தாண்டி இங்கே வந்து சேருவான்கிறது எனக்கு எப்படி தெரியும்?"

மணல் வெளியில் சறுக்சறுக்கென்று கேட்கும் காலடியோசை யாகோவ் வந்துவிட்டான் என்று அறிவித்தது; அவர்கள் தமது பேச்சைச் சுருக்கிக்கொண்டார்கள். யாகோவ் ஒரு சின்ன மூட்டையைக் கொண்டுவந்து, ஒரு மூலையிலே எறிந்தான்; பிறகு கடைக்கண்ணோரத்தில் கோபம் தெறிக்க மால்வாவை ஒரு பார்வை பார்த்தான்.

அவளோ வெள்ளரி விதைகளைக் குஷாலாகக் கடித்துக் கொண்டே இருந்தாள். வாஸிலி மரக்கட்டைமீது அமர்ந்து, தன் முழங்கால்களைத் தடவிக்கொடுத்தான்; பிறகு சிரித்துக் கொண்டே பேசினான்:

"சரி. இங்கே வந்துட்டே—ம்... எதை நினைச்சி இங்கே வந்தே?"

"அதுவா? நாங்க உனக்குக் காயிதம் போட்டிருந் தோமே!"

"எப்போ? எனக்கு ஒரு கடுதாசியும் வரலே!"

"அப்படியா? ஆனா, நாங்க போட்டோமே."

"அப்படின்னா, அந்தக் கடுதாசி எங்கோ விலாசம் தவறிப் போயிருக்கும்" என்று சோர்ந்து போய்ச் சொன்னான் வாஸிலி. "நாசமாய்ப் போக! இதைப்பற்றி என்ன நினைக்கிறே? வரவேண்டிய காயிதம் தான் வழிதவறிப் போவுது."

"அப்படின்னா, ஊரிலே நடந்த விசயம் ஒண்ணும் உனக்குத் தெரியாதா, அப்பா?" என்று தன் தந்தையை நம்பிக்கையற்றுப் பார்த்துக்கொண்டே கேட்டான்.

"எனக்கு எப்படித் தெரியும்? கடுதாசிதான் கிடைக்கலியே."

பிறகு யாகோவ் ஊர் விவகாரங்களைப் பேச ஆரம்பித்தான். அவர்களது குதிரை செத்துப் போனது, பிப்ரவரி மாச ஆரம்பத்திலேயே அவர்களது கையிருப்புத் தானியம் காலியானது, பிறகு அவனுக்கு ஒரு வேலையும் கிடைக்காமற் போனது, வேறு வழியின்றி அவர்கள் வீட்டை விட்டு வெளியில் போக நேரிட்டது, பசுமாடு சாகும் நிலையில் கிடந்தது, எப்படியோ ஏப்ரல் மாசக் கடைசிவரை கஷ்டப்பட்டு ஓப்பேற்றிவிட்டு, யாகோவ் தன் தந்தையைப் போய்ப் பார்த்துவரத் தீர்மானித்தது, அதாவது உழவு முடிந்தபின் ஒரு மூன்றுமாச காலம், அப்பாவிடம்போய், ஏதாவது பணம் சம்பாதிப்பது எனத் தீர்மானம் செய்தது, இந்த முடிவை அவன் தன் தந்தைக்கு எழுதிப்போட்டது, அப்புறம் தங்கள் ஆடுகளில் மூன்றை விற்று, கொஞ்சம் உணவு தானியமும், வைக்கோலும் வாங்கியது......கடைசியாக இங்கே வந்து சேர்ந்தது எல்லாவற்றையும் சொல்லி முடித்தான் யாகோவ்.

" இப்படியா இருக்கு நிலைமை? ஹூம்...ஆனா அதெப்படி இருக்கமுடியும்? நான்தான் உங்களுக்குச் செலவுக்குப் பணம் அனுப்பி வச்சேனே, இல்லையா?" என்று கேட்டான் வாஸிலி.

" தொள்ளாயிரம் பணமா அனுப்பிவச்சிட்டே? வீட்டு ரிப்பேர் வேலை கொஞ்சம் செய்யவேண்டியிருந்தது. அத்தோடே, மரியாவுக்குக் கல்யாணமாச்சு, அதுக்குக் கொஞ்சம் பணம் நம் கைப்பிடித்தம்...ஒரு கலப்பை வாங்கினோம்...ஏன், நீயும் வீட்டைவிட்டு வந்து அஞ்சு வருசம் ஆச்சில்லே!"

" ஆ...மா...ஆமா, ஆச்சு! அந்தப் பணம் செலவுக்குப் பத்தலேன்னு சொல்லுதே?...ஐயையோ!...மீன் குழம்பு கொதிச்சுப் பொங்குது!..."

வாஸிலி குடிசையை விட்டு வெளியே தாவியோடினான்.

மீன்கறி வேகும் அடுப்பு முன்னால் குந்தி உட்கார்ந்து கொண்டான். எதையோ நினைத்தவாறே, கறியைக் கிண்டிக் கொடுத்துக்கொண்டு, மண்ணை அள்ளி அடுப்புக்குள் போட்

டான். ஏதோ ஆழமான சிந்தையில் அவன் தன்னையே இழந்துவிட்டான். யாகோவ் சொன்ன விஷயங்கள் அவன் உள்ளத்தை அப்படியொன்றும் அசைத்துவிடவில்லை; என்றாலும், தன் மனைவி மீதும் மகன்மீதும் அவனுக்கு இனம் தெரியாத ஒரு வெறுப்புணர்ச்சியைத்தான் தூண்டி விட்டது. இந்த ஐந்து வருஷ காலமாக, அவர்களுக்கு அவன் பணம் அனுப்பி வந்தும்கூட, அவர்கள் பண்ணையை நாசமடைய விட்டிருக்கின்றனர். மால்வா மட்டும் அங்கிருந்திராவிட்டால், அவனுக்கு வந்த கோபத்தில் யாகோவை மனசாரத் திட்டியிருப்பான். அவனுக்கு அப்பனுடைய உத்தரவு இல்லாமல் புறப்பட்டு வரமட்டும் தெரிந்தது; பண்ணையைப் பராமரித்துக் கொள்ளமட்டும் தெரியாமல் போயிற்று. இங்கே வந்து எந்தவிதக் கவலையும் இல்லாமல் சுகமாக சுதந்திரமாக வாழும் வாஸிலி, தன் பண்ணையைப்பற்றி நினைத்துப் பார்த்ததே அபூர்வம். ஆனால், இத்தனை நாளாய்த் தான் அனுப்பி வந்த பணமெல்லாம் அடித்தலம் தெரியாத அதல பாதாளக் கிடங்குக்குள்தான் விழுந்திருக்கிறது என்ற எண்ணம் அவன் மனசில் திடீரெனக் கிளம்பியது. அந்தப் பணம் வீணாய், விருதாவாய்ப் பயனற்றுப் போய்விட்டது... அவன் மீன் கறியை அகப்பையால் கிண்டிக்கொடுத்துக் கொண்டே, பெருமூச்சுவிட்டான்.

அடுப்பின் மஞ்சள் நிறத் தீக்கொழுந்துகள் சூரிய ஒளியின் பிரகாசத்தால், மங்கி வெளுத்து ஒளியற்றுப் போய்விட்டன. மெல்லிய நீலநிறப் புகைச்சுழல்கள் அடுப்பிலிருந்து கிளம்பிக் கடலை நோக்கிச் சென்றன. அந்தப் புகையை நோக்கியவாறே, தன் வாழ்வில் நேரவிருக்கும் கஷ்ட காலத்தைக் கசந்த மனத்துடன் எண்ணிப்பார்த்தான்; அவனது சுதந்திர வாழ்வு பறிபோய்விடும். மேலும், சந்தேகத்துக்கு இடமில்லாமல் யாகோவ் மால்வாவைப் பற்றி......

மால்வா குடிசைக்குள் அமர்ந்திருந்தாள். அந்த வாலிபனைக் கேலிசெய்து திணர அடித்தாள்; எப்போதும் சிரிப்பு குமிழிடும் தன் காந்தக் கண்களால் அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தாள்.

"ஊரிலே உன் காதலி ஒருத்தியை விட்டுட்டுத்தான் வந்திருப்பேன்னு நினைக்கிறேன்" என்று திடீரெனச் சொல்லிவிட்டு, யாகோவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

" ஆமா, ஒருத்தி இருக்கா " என்று நிர்விசாரமாய்ச் சொன்னான் யாகோவ்.

" அவள் அழகாயிருப்பாளா ?" என்று அக்கறையற்ற குரலில் கேட்டாள் மால்வா.

யாகோவ் பதில் கூறவில்லை.

" ஏன் பதில் சொல்லலே?...அவள் என்னைவிட அழகாயிருப்பாளா ?"

தன்னையுமறியாமல் அவன் நிமிர்ந்து அவளை முகத்துக்கு முகம் நேராகப் பார்த்தான். அவளது கறுத்து உருண்ட கன்னங்கள், ஈரம் பாய்ந்து துடிதுடிக்கும் வாட்டமில்லாத உதடுகள், புன்சிரிப்பினால் அவை லேசாகப் பிரிந்து நின்ற கோலம்—எல்லாவற்றையும் பார்த்தான். அவள் அணிந்திருந்த பழுப்பு நிற ரவிக்கை அவள் உடம்புக்கு ரொம்பப் பொருத்தமாக, அமைப்பாக இருந்தது; அவளது உருண்டு வளைந்த புஜங்களையும், மெதுவும் உயர்வும்கொண்ட மார்பகங்களையும் அளவிட்டுக் காட்டியது. என்றாலும், கள்ளமும் பசிய நிறமும் கொண்ட, அந்தப் பாதி மூடிய கண்களைப் பார்ப்பது மட்டும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் பெருமூச்சுவிட்டான்.

" நீ ஏன் இம்மாதிரியெல்லாம் பேசுறே ?" என்று இரங்கிய குரலில் கேட்டான்; என்றாலும், அவளோடு பேசுவதைமட்டும் அவன் விரும்பத்தான் செய்தான்.

" பின்னே வேறெ எப்படிப் பேசுறதாம்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் மால்வா.

" சிரிக்கவா செய்றே...ஏன் சிரித்தே ?"

" உன்னைப் பார்த்துத்தான் சிரித்தேன் !"

" ஏன்? நான் உனக்கு என்னத்தைப் பண்ணிட்டேன்" என்று கோபத்தோடு கேட்டுவிட்டு, தன் கண்களைத் தாழ்த்திக்கொண்டான், யாகோவ். அவள் பதில் பேசவில்லை.

தன் தந்தையோடு அவளுக்கு எந்தவிதமான தொடர்பு இருக்குமென்பதை அவன் ஊகித்து அறிந்துகொண்டான். எனவே, அவனால் அவளோடு தாராளமாக மனம்விட்டுப்

பேசமுடியவில்லை. அவனது சந்தேக எண்ணம் அவளுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. வீட்டை விட்டு வெகு நாளைக்கு வெளியூருக்குப் பிழைப்புக்காகச் செல்லும் மனிதர்களைப்பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறான். மேலும், பாச உணர்ச்சியும் தேகசுகமும் கொண்ட தன் தந்தையைப் போன்ற ஓர் ஆசாமி பெண் சவகாசம் இல்லாமல் ரொம்ப நாள் தனித்திருப்பது கஷ்டமான காரியம்தான் என்பதையும் அவன் உணரவே செய்தான். இதையெல்லாம் யோசிக்கப்போய்த்தான் அவனுக்கு அந்தப் பெண்ணின்முன் இருப்பதே சங்கட உணர்ச்சியைத் தந்தது. அப்பனின் முன்னிலையிலும் கூட அப்படித்தான். அவன் தன் தாயைப் பற்றி நினைத்தான்...ஊரில், கிராமத்தில், ஓய்வென்பதே அறியாமல் அடிமையாக வாழ்ந்து, களைத்து நொந்துபோன அந்தப் பெண்......

"சாப்பாடு தயார்!" என்று குடிசையின் வாசலில் வந்து சொன்னான், வாஸிலி.

"மால்வா, கரண்டிகளைக் கொண்டுவா!"

யாகோப் ஒரு முறை தன் தந்தையைப் பார்த்துவிட்டு மனசுக்குள்ளாக நினைத்துக்கொண்டான்:

'இவள் அடிக்கடி இங்கே வந்து பழக்கம் போலிருக்கு. இல்லேன்னா, கரண்டி எங்கே இருக்கும்னு இவளுக்கு எப்படித்தெரியும்?'

மால்வா கரண்டிகளைக் கொண்டுவந்தாள். தான் போய் அவற்றைக் கழுவிக்கொண்டு வருவதாகச் சொன்னாள். மேலும், படகில் ஒரு பாட்டில் ஓட்கா மதுவும் இருந்தது. அதையும் போய் எடுத்து வருவதாகச் சொல்லிப் புறப்பட்டாள்.

அவள் புறப்பட்டுப் போவதை அப்பனும் மகனும் மௌனமாக இருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரம் கழித்து யாகோவைப் பார்த்து வாஸிலி கேட்டான்,

"நீ இவளை எங்கே சந்திச்சே?"

" நான் ஆபீசுக்குப் போய், உன்னைப் பத்தி விசாரிக்கப் போனேன். இவள் அங்கே இருந்தா...'கடற்கரை மணல் வழியா ஏன் அத்தனை தூரம் நடந்து போகப்போறே? நாம் தோணியிலே போவோம். நானும் அவரிடம் போகவேண்டியிருக்கு' அப்படின்னு அவள் சொன்னு. பிறகு ரெண்டு பேருமா வந்தோம்."

" ஆஹா...ஹா! நானு அடிக்கடி நினைச்சிப் பாத்துக்கிடுவேன். யாகோவ் இப்போ எவ்வளவு உயரமா வளர்ந்திருப்பான்னு..."

பிள்ளை அப்பனின் முகத்தை அன்பு ததும்பும் புன்னகையோடு பார்த்தான்; அந்தப் புன்னகை வாஸிலிக்குக் கொஞ்சம் தைரியம் அளித்தது.

" இவள் செல்லமான பொண்ணு, நல்ல பொம்பிளை. இல்லையா ?..." என்று கேட்டான்.

" பரவாயில்லை " என்று கண்களை இமை தட்டிக் கொண்டு ஏதோ சொன்னுன் யாகோவ்.

" மனுசன் வேறு என்னதான் செய்யறது, தம்பி !" என்று கைகளை ஆட்டிக்கொண்டே பேசினுன் வாஸிலி: " நானும் ஆரம்பத்திலே இந்தக் கஷ்டத்தை எல்லாம் சகிச்சுத்தான் பார்த்தேன். ரொம்ப நாளுக்குத் தாங்கமுடியலே. இது ஒரு பழக்கம்! ......பாரு நான் கல்யாணமானவன்! மேலும் அவள் எனக்குத் துணிமணிகளின் கிழிசலைத் தைத்துக் கொடுக்கிறு; ஒண்ணில்லாட்டி ஒண்ணு, ஏதாவது உதவி செய்துகிட்டிருக்கா. மகனே, அருமை மகனே! ஒண்ணு மட்டும் மனசிலே வச்சிக்கோ. சாவிலேயிருந்து தப்பிச்சாலும் தப்பிக்கலாம்; ஒரு பெண்ணிடமிருந்து தப்பிக்கவே முடியாது!" என்று உணர்ச்சி வசமாகப் பேசி முடித்தான் வாஸிலி.

" அதனுலே, எனக்கென்ன ? அது உன் சொந்த விஷயம். உன்னைச் சீர்தூக்கிப் பேசுகிற ஜோலி எனக்கு வேண்டாம்."

ஆனுல், அவன் தன் மனசுக்குள்ளாகப் பேசிக்கொண்டது வேறு:

'இந்த மாதிரி ஒரு பொம்பிளையை என் பக்கத்திலே உக்காத்தி வச்சிக்கிட்டு, கால்சராயைத் தைக்கச் சொல்லும்படி நீ என்னிடம் சொல்லமுடியாது.'

"மேலும், கேளு. எனக்கு நாற்பத்தஞ்சு வயசுதான் ஆச்சி...நான் ஒண்ணும் அவள் விசயத்திலே அதிகம் செலவழிக்கலே. அவள் என் பொண்சாதி இல்லே, பாரு!" என்றான் வாஸிலி.

"ஆமாம்! இல்லேதான்" என்று ஒப்புக்கொண்டான் யாகோவ். ஆனால் மனசுக்குள்ளாக, 'ஆனால் அவள் உன் பணத்தை மட்டும் காலியாக்கத்தான் செய்கிறாள். அதுக்குப் பந்தயம் வேணுமானாலும் கட்டுவேன்' என்று சொல்லிக் கொண்டான்.

மால்வா ஓட்கா மதுப் பாட்டிலோடும், ஓர் உப்புக்கண்ட மாலையோடும் வந்து சேர்ந்தாள். அவர்கள் கீழே உட்கார்ந்து மீன் கறியைச் சாப்பிட ஆரம்பித்தார்கள். சாப்பிடும்போது ஒருவரும் வாய் பேசவில்லை; மௌனமாக மீன் எலும்புகளை உறிஞ்சினார்கள்; உறிஞ்சும்போதுதான் பெரிய சத்தம் கேட்டது. பிறகு எலும்பை வாசல் பக்கமுள்ள மணல் தரையில் துப்பினார்கள். யாகோவ் நிறையத் தின்றான்; ஆர்வத்தோடு தின்றான். அவன் அப்படிச் சாப்பிடுவது மால்வாவுக்கு பிடித்துப் போயிற்று; ஏனெனில், அவனது ஈரம்படிந்த தடித்த உதடுகள் படபடவென்று வேலை செய்வதையும், மெருகேறிய கன்னங்கள் ஊதிப் புடைப்பதையும் கண்டு அவளது முகம் பிரகாசம் அடைந்தது; உதட்டில் புன்னகையும் பூத்தது. வாஸிலி சாப்பாட்டில் மிகவும் ஈடுபட்டவன் போலத் தோன்றிய போதிலும், தின்றதென்னவோ குறைவாகத்தான். இந்த மாதிரி அவன் நடந்துகொண்டதற்குக் காரணம் யாரேனும் தன்னிடம் குறுக்கிட்டுப் பேசிவிடக் கூடாது என்பதுதான். ஏனெனில், அவன் 'இனி எப்படி நடந்துகொள்வது'? என்ற விஷயத்தை யாகோவும், மால்வாவும் கண்டுகொள்ளாதவாறு மனசில் யோசித்துக்கொண்டு இருந்தான்.

அலைகளின் மெல்லிய நாத சுகத்தை, கடற் பறவைகளின் கோரமான கூச்சல் வகிர்ந்து பிளந்து ஊடு

பாய்ந்தது. உஷ்ணத்தின் கொடுமை தணிந்து, கடலின் மணம் நிறைந்த சீதக் காற்று குடிசையை நோக்கி விட்டு விட்டு வீசிக்கொண்டிருந்தது.

உப்புக் கரிக்கும் மீனையும், ஓட்கா மதுவையும் அருந்திய வுடன் யாகோவின் கண்களில் கனமேறி அழுத்தின. உதடு களில் வரட்டுப் புன்னகை தோன்ற, அவன் செருமிக் கொட்டாவி விட்டான்; அவன் மால்வாவைப் பார்த்த பார்வையைக் கண்டு வாஸிலி பேச ஆரம்பித்தான்:

"போய், கொஞ்ச நேரம் படுத்துக்கோ, யாகோவ்! ஒரு போர்வையும் எடுத்துக்கோ. டீ தயாரானவுடன் உன்னை வந்து எழுப்புறோம்."

"சரி...நான் படுத்துக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே, சாக்கு மூட்டை மீது சாய்ந்தான். "ஆமா, நீங்க ரெண்டு பேரும் எங்கே போகப் போறீங்க? ஹஹ்ஹ!" அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பைக்கண்டு மனம் பேதலித்த வாஸிலி விறுட்டென்று குடிசையை விட்டு வெளியே வந்தான். ஆனால் மால்வா தன் புருவங்களை உயர்த்தி, உதடுகளை பிதுக்கிக்கொண்டே பதில் சொன்னாள்:

"நாங்க எங்கே போகப் போறோம்னு நீ ஒண்ணும் தெரிஞ்சிக்க வேண்டாம். அதுக்கு நீ யாரு? நீ இன்னம் சின்னப் பையன்தானே! இந்த மாதிரி விஷயமெல்லாம் உனக்கு இப்போ புரியாது!"

"நான் யாரா? சரி, சரி. பொறு...நான் யாருன்னு உனக்குக் காட்டுறேன். நீ ரொம்பக் கெட்டிக்காரத்தனமா நடந்துக்கிறேன்னு நினைச்சிருக்கியோ?..." என்று சத்த மாகச் சொன்னான்; அதற்குள் மால்வா குடிசையை விட்டுக் கிளம்பிவிட்டாள்.

சிறிது நேரம் அவன் வாய்க்குள் ஏதேதோ முனகிக் கொண்டிருந்தான்; பிறகு தூங்கிப் போய்விட்டான். போதை நிரம்பி, கன்றிச் சிவந்த முகத்தில் புன்னகை உறைந்து நிற்க உறங்கிவிட்டான்.

வாஸிலி மூன்று கம்புகளைத் தரையில் முக்காலி மாதிரி ஊன்றி, உச்சியில் அவற்றை ஒன்று சேர்த்துக்

கட்டினான். பிறகு அதன் மீது ஒரு பாய்மரச் சாக்குத் துணியை விரித்து மூடினான்; அந்தக் கூடாரத்தின் நிழலில் தலையைக் கைகளில் தாங்கியவாறே படுத்து, வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். மால்வாவும் அவன் பக்கத்தில் வந்து மணலில் படுத்தாள்; அதைக் கண்டவுடன் அவன் தன் முகத்தை அவள் பக்கமாகத் திருப்பினான். அவன் மனசு புண்பட்டு, ஏதோ விரக்தி தோய்ந்திருப்பதை அவள் கண்டு கொண்டாள்.

"என்ன விஷயம்? உன் மகன் வந்தது உனக்குப் பிடிக்கலையா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள். மால்வா.

"அதோ, அவன் என்னைப் பார்த்துச் சிரிக்கிறான். எல்லாம் உன்னாலேதான்..." வாஸிலி ஏதேதோ முனகி உறுமினான்.

"என்னது, என்னாலேயா?" என்று ஆச்சரியப் படுவதுபோல் பாசாங்கு பண்ணினாள், மால்வா.

"நீ என்னதான் நினைச்சிருக்கே?"

"கிழட்டுப் பாவிமகனே! என்னை என்னதான் செய்யச் சொல்றே? உன்னைப் பார்க்க வருவதை நிறுத்திடணும் கிறயா? ரொம்ப சரி, இனிமே வரலே!"

"மாயக்காரியில்லே நீ!" என்று கடுமையாகச் சொன்னான் வாஸிலி: "ஹும்! நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு தான். அவனும் என்னைப் பார்த்துச் சிரித்தான்; நீயும் சிரிக்கிறே!...இருந்தாலும், இப்போ எனக்கு நெருங்கிய சிநேகிதம் நீதான்! இருந்தாலும், நீங்க என்னைப் பார்த்து ஏன் சிரிக்கிறீங்க, பிசாசுகளே!" இத்தனை கடுமையாகப் பேசிவிட்டு, வாஸிலி தன் முகத்தைத் திருப்பி அமைதியில் ஆழ்ந்தான்.

முழங்கால்களைக் கட்டிக்கொண்டும், உடம்பைப் பக்க வாட்டில் அசைத்தாட்டிக் கொண்டும், பொங்கிப் புளகித்து ஒளிசிதறும் சமுத்திர வெள்ளத்தைத் தன் பசிய கண் களால் பார்த்தாள் மால்வா; தங்களது அழகின் செழிப்

யைத் தாமே உணர்ந்த பெருமிதத்தோடு புன்னகைக்கும் பெண்களின் வெற்றிச் சிரிப்பு அவள் உதடுகளில் பூத்திருந்தது.

சாம்பல் நிறச் சிறகோடு செல்லும் ஒரு பெரும் பறவையைப் போல், ஒரு படகு பாய்விரித்து நீரில் மிதந்து சென்றது; கரையிலிருந்து வெகுதொலை வெள்ளத்தில் அந்தப் படகு சென்றது. வான வளையமும் கடல் மட்டமும் ஒன்று கலக்கும் திசையை நோக்கி அது மிதந்து விரைந்துகொண்டிருந்தது.

"நீ ஏன் ஒண்ணும் பதில் சொல்லலே?" என்று கேட்டான் வாஸிலி.

"நான் யோசிச்சிக்கிட்டு இருக்கேன்" என்றாள் மால்வா.

"எதைப் பத்தி?"

"முக்கியமா ஒண்ணும் இல்லே" என்று புருவங்களை நெரித்துக்கொண்டே சொன்னாள் மால்வா. பிறகு ஒரு கணம் கழித்து, "உன் மகன் அழகான வாலிபன்!" என்றாள்.

"அதைப்பத்தி உனக்கென்ன கவலே?" என்று குரோதம் தொனிக்கக் கேட்டான் வாஸிலி.

"நிறைய இருக்கு!"

"ஜாக்கிரதையா இரு" என்று சம்சயமும் கோபமும் தெறிக்கும் பார்வையோடு பேசினான் வாஸிலி: "முட்டாள் தனமா நடந்துக்காதே, நான் பொறுமைசாலிதான்! ஆனா, கோபம் வந்துதோ, பிசாசேதான். வீணா, என்னைக் கிண்டி விடாதே. பிறகு நீதான் கஷ்டப்படுவே!"

தன் இரு கைகளையும் ஒன்றாகச் சேர்த்துப் பிசைந்து கொண்டும், பற்களைக் கடித்துக்கொண்டும் அவன் மேலும் பேசினான்:

"நீ காலையிலே இங்கு வந்ததிலிருந்தே, நீ என்னமோ பண்ணப்போறேன்னு மாத்திரம் எனக்குத் தெரியுது... ஆனா, அது இன்னதுன்னு எனக்குத் தெரியாது. உஷாரா

இரு. நான் மட்டும் அதைக் கண்டு பிடிச்சிட்டேன்னு, அப்புறம் வீணு உனக்குச் சங்கடம்தான்! உன் சிரிப்பு இருக்கே...அது மட்டுமென்ன, உன் நடவடிக்கை யெல்லாம்...உன்னை மாதிரி ஆட்களை எப்படி நடத்தணும்னு எனக்குத் தெரியும். அதைப்பத்திக் கவலைப்படாதே."

*"வாஸ்யா, என்னைப் பயம் காட்டணும்னு நினைக்காதே" என்று வாஸிலியின் முகத்தைக்கூடப் பார்க்காமல் உரத்த குரலில் சொன்னுள் மால்வா.

"அப்படீன்னு, இந்த மாதிரி விளையாடாதே..."

"நீ மட்டும் பயமுறுத்துறியே!"

"உன் குறும்புத்தனத்தை ஏதாவது காட்டினே, உன்னை நொறுக்கித் தள்ளிப்பிடுவேன்!" என்று சீறி விழுந்தான் வாஸிலி.

"என்னது? என்னை அடிச்சிப்பிடுவியா?" என்று உணர்ச்சியால் கனன்றிருந்த வாஸிலியின் முகத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டாள் மால்வா.

"உன்னைப்பத்தி மனசில் என்னன்னுதான் நினைச்சிருக்கே. பெரிய ராசாத்தியோ?...ஆமா, நான் உன்னை நான் அடிப்பேன்!"

"நீ என்னை என்னதான் நினைச்சிருக்கே...உன் பொண்சாதி'ன்னு?" மால்வா அமைதியாகப் பதிலுக்குக் கூடக் காத்திராமல் பேசினுள்: "காரண காரியமில்லாமல், நீ உன் பொண்டாட்டியை அடிச்சிப் பழக்கம் போலிருக்கு! அதனுலே என்னையும் அடிக்கலாம்னு பார்க்கிறே. அப்படித்தானே! ஆனு, நீ நினைச்சது தப்பு. எனக்கு நான்தான் அதிகாரி; யாரைப்பத்தியும் எனக்குப் பயமில்லே. ஆனுல் நீயோ? நீ உன் மகனைப் பார்த்துப் பயப்படுறே! இன்னைக்குக் காலையிலே நீ அவன் முன்னுலே நடுங்கி, நாட்டியம் ஆடினயே, அது உனக்குத்தான் கேவலம். இருந்திருந்து, நீ வந்து என்னைப் பயங் காட்டத் துணிஞ்சிட்டே!"

---

* வாஸ்யா என்பது வாஸிலியைத் தோழமையோடு அழைக்கும் பெயர்.

அவள் தன் தலையை ஏளன பாவத்தோடு ஆட்டிக் கொண்டாள்! பிறகு மௌனமாயிருந்தாள். அவளது கசந்த, ஏளனம் நிறைந்த வார்த்தைகள் வாஸிலியின் கோப நெருப்பை அணைத்தன. அவளை அத்தனை அழகுடன் அவன் இதற்குமுன் பார்த்ததே யில்லை.

"எங்கேயாச்சும் போய்த் தொலை!" என்று முனகினான் வாஸிலி. அவன் அவள் மீது கோபம் கொண்டான்; என்றாலும், அவளைப் பார்த்து வியப்பதை மட்டும் அவனால் தடுக்க முடியவில்லை.

"இன்னொரு விஷயம்" என்று மால்வா குமுறிக் கொண்டே பேச ஆரம்பித்தாள்; "நீ செர்யோஸ்காவிடம் நீதான் எனக்கு உணவு மாதிரின்னும் நீயில்லாட்டி, நான் வாழ முடியாதுன்னும் பீத்திப் பெருமையடிச்சிக் கிட்டி யாமே! நீ நினைச்சது தப்பு!... உன்னைத்தான் நான் ஆசைப்பட்டுக் கிட்டிருக்கேன்னும், உன்னைப் பார்க்கத் தான் இங்கே வாரேன்'னும் நினைச்சிக்கிட்டியா? இல்லவே இல்லை. இந்த இடலைப் பார்க்கத்தான் நான் வாரேன். இந்த இடத்திலே கடலையும் வானத்தையும் தவிர, மனுஷங்க யாரும் இல்லாததாலே...இந்த இடம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு...நீ ஒருத்தன் இங்கே இருக்கிற தாலே எனக்கு ஒண்ணும் கெட்டுப் போகல்லே. இந்த இடத்தைப் பார்க்கத்தான் வாரேன்...செர்யோஸ்கா இங்கே இருந்தா, அவனிடமும் வருவேன். உன் மகன் இங்கே இருந்தா, அவனிடம் வருவேன்...என் அழகாலே எனக்கு இஷ்டம் வந்தபோது எந்த மனுஷனையும் பிடிச்சுக்குவேன்; இஷ்டப்பட்ட மனுஷனையும் தேடிக்குவேன்!"

"அப்படியா?" என்று வாய்க்குள்ளாகச் சொல்லி விட்டு, வாஸிலி திடீரென்று மால்வாவின் குரல்வளையை இறுகப் பிடித்தான்: "இதுதானா உன் அந்தரங்க எண்ணம்?"

அவன் அவளை உலுக்கினான். அவளது கண்கள் சிவந்து முகம் கறுத்துவிட்ட போதிலுங்கூட, அவள் அவனை எதிர்த்துப் போராடவில்லை. தன் கழுத்தை நெரிக்கும் வாஸிலியின் கைகளை மட்டும் பிடித்துக்கொண்டு, அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"நீ இப்படிப்பட்ட பொம்பிளையா?" என்று கரகரத்துக் கேட்டான் வாஸிலி. அவனது கோபம் அவனையே வெற்றி கொண்டது. "இத்தனை நாள் வரைக்கும், நீ இதைச் சொல்லாமத்தானே இருந்தே. பொட்டை நாயே! என் கூடப் படுத்தே...என்னைத் தட்டிக் கொடுத்தே... இரு இரு, நான் யாருன்னு காட்றேன்."

அவன் அவள் தலையைக் கீழே அழுத்தித் தாழ்த்தி, வெறியோடு அவள் கழுத்தை நெரித்து, இறுக மூடிய தன் முஷ்டியால் ஓங்கி இரண்டு குத்துக் குத்தினான். அவளது மென்மையான கழுத்தில், குத்தும்போது, தன் கை அதில் புதைந்து அழுந்தியதைக் கண்டு அவனுக்கு ஆனந்தம் பொங்கியது.

"எடு கையை, ஏ பாம்பே!" என்று அவனைப் பலமாகத் தூரத் தள்ளிவிட்டு, வெற்றியோடு சத்தமிட்டாள் மால்வா.

அவள் மூச்சுக்கூட வாங்காமல் தரையில் மல்லாக்கக் கிடந்தாள். அமைதியாக, மௌனமாக, முகம் சிவந்து, உலைந்துபோய்க் கிடந்தாள்; ஆனால், அழகாகக் கிடந்தாள்! அவளது பசிய கண்கள் இமைகளைப் பிளந்து கொண்டு, அவனைப் பகை உணர்ச்சியோடு பார்த்தன. ஆனால், அவனோ உணர்ச்சிக் கொதிப்பினால் மூச்சு இரைக்க வாங்கிக் கொண்டு, தன் கோபத்தைச் சாந்தி செய்துவிட்ட ஆனந்த திருப்தியோடு, அவளது பார்வையையே கவனிக்காமல் நின்றான். பிறகு அவன் வெற்றிக் களியோடு அவளைப் பார்த்தபோது, அவள் சிரித்தாள்! அவளது உதடுகள் புன்னகை செய்து நெளிந்தன; கண்கள் ஒளி சிதறின; கன்னங்களில் குழி விழுந்தன. வாஸிலி வியப்போடு அவளைப் பார்த்தான்.

"ஏ, பிசாசே! இதென்ன இது?" தன் கையை முரட்டுத்தனமாகத் தூக்கிக்கொண்டே சத்தமிட்டான் வாஸிலி.

"வாஸ்கா!" என்று ரகசியம்போலக் கூப்பிட்டாள் மால்வா! "என்னை அடிச்சது நீதானா?"

"ஆமா, நான்தான். வேறே யாரு?" என்ற ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்துக்கொண்டே சொன்னான் வாஸிலி அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பழைய படியும் அவளை அடிப்பதா? ஆனால், அதற்குள் அவன் கோபம் தணிந்துவிட்டது; அவளுக்கு எதிராக மீண்டும் தன் கையை ஓங்கும் எண்ணத்தையே அவனால் தாங்க முடியவில்லை.

"நீதான் அடிச்சேன்னா, நீ என்னைக் காதலிக்கிறேன்னு தான் அர்த்தம். அப்படித்தானே!" என்று மீண்டும் ரகசியமாகப் பேசினாள் மால்வா. அந்த ரகசியக் குரல் அவன் உடம்பில் உஷ்ணத்தை ஏற்றியது.

"சரி, நீ பண்ணின சேட்டைக்கு இதுவே போரும்" என்று உறுமினான் வாஸிலி.

"நீ இனிமே என்னைக் காதலிக்கமாட்டேன்னு நினைச்சேன். 'மகன் வந்துட்டான்; இனிமே என்னை விரட்டிடுவே'- அப்படீன்னு நினைச்சேன்."

பிறகு அவள் குபுக்கென்று வாய்விட்டுச் சிரித்தாள்; உரத்துக் கேட்டது அந்தச் சிரிப்புக் குரல்.

"சீ, அசடு!" என்றான் வாஸிலி. அவனுக்கும் சிரிப்பை அடக்கமுடியவில்லை: "மகன் வந்தால் என்ன? என்னை அவன் ஒண்ணும் அதிகாரம் பண்ண முடியாது!"

அவனுக்கு வெட்க உணர்ச்சி மேலோங்கியது; அவளை அடித்ததற்காக வருந்தினான். இருந்தாலும் அவள் சொன்ன அந்த வார்த்தைகள் ஞாபகத்துக்கு வரவே, மீண்டும் கடுமையான குரலில் பேசினான்:

"என் மகனுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை. உன்னை நான் அடிச்சேன்'னா அது நீ பண்ணின தப்பு; நீ என்னைச் சீண்டிவிட்டிருக்கக் கூடாது!"

"ஆமா, நான் காரியமாத்தான் அப்படிச் செய்தேன். உன்னைச் சோதிக்கிறதுக்கு!" என்று சொல்லிக்கொண்டே அவனது தோளோடு தோள் உரசிக்கொண்டாள் மால்வா.

"என்னைச் சோதிக்கிறதா? எதுக்காக? சரி, இப்போது நிசத்தைத் தெரிஞ்சிக்கிட்டியா?"

"கவலையில்லே" என்று நம்பிக்கை நிறைந்த குரலில், கண்களைப் பாதி மூடியவாறே சொன்னாள் மால்வா: "உன் மேலே எனக்குக் கோபமில்லே. நீ என்னைக் காதலாலேதான் அடிச்சே. அப்படித்தானே! சரி, நானும் அதுக்குத் திருப்பித் தரத்தான் போறேன்..."

அவள் குரலைத் தாழ்த்திக்கொண்டு, அவன் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்துக்கொண்டு, மீண்டும் பேசினாள்:

"நான் எப்படித் திருப்பித் தருவேன், தெரியுமா?"

இந்த வார்த்தைகள் வாஸிலியின் செவியில் ஒரு வாக்குறுதி போல் மகிழ்ச்சி தந்தது; அவன் உள்ளம் இனிமை கண்டு குறுகுறுத்தது. எனவே சிரித்துக்கொண்டே, வாஸிலி கேட்டான்:

"எப்படி? எப்படித் திருப்பித் தருவே?"

"பொறுத்திருந்து பார்!" என்று அமைதியாகச் சொன்னாள் மால்வா. என்றாலும் அவள் இதழ்கள் ஏனோ பிதுங்கி நெளிந்தன.

"அடி, என் அருமைக் கண்ணு" என்று கூறிக்கொண்டே, ஒரு காதலனின் அன்பு அரவணைப்போடு, அவளைப் பற்றி இறுகத் தழுவினான். மேலும், "உனக்குத் தெரியுமா? உன்னை நான் அடிச்சதாலே, நீ எனக்கு இன்னம் அருமையாயிட்டே! நான் சொல்றது புரிஞ்சிதா? இப்போ நம்ம ரெண்டுபேரும் ஒரே சதையும் ரத்தமுமா ஆயிட்டாப்போலே எனக்குத் தோணுது!" என்றான்.

அவர்களது தலைக்கு மேலாக, கடற்பறவைகள் வட்டமிட்டன. கடற்காற்று அவர்களை வருடிச் சென்றது; அலைகளை அவர்களது பாதம்வரை எழும்பி ஓடிவரச் செய்தது. அடக்கமுடியாத சாகரத்தின் சிரிப்பொலி புரண்டு புரண்டு ஒலித்துக்கொண்டிருந்தது...

"ஆமாம். உலகம் இப்படி இருக்கு!" என்று நிம்மதியோடு பெருமூச்சு விட்டுக்கொண்டான் வாஸிலி. மேலும்,

அவளைத் தன் உடம்போடு அழுத்தி ஆலிங்கனம் செய்து கொண்டே பேசினன்: " இந்த உலகத்திலே ஒவ்வொண் ணும் அமைஞ்சிருக்கிற சீரைப் பார்த்தால், வேடிக்கையா யிருக்கு—எது பாவ காரியமோ, அதுதான் இனிச்சிருக்கு ! உனக்கு ஒண்ணுமே புரியலியா ?...ஆனு, சமயங்களிலே நான் அந்த மனுச வாழ்க்கையைப்பத்தி நினைச்சுப் பார்ப் பேன். அது என்னையே பயங்காட்டுது ! முக்கியமா ராத்திரி யிலேதான்...அதிலும் தூங்கமுடியலேன்னுத்தான்...இதோ நீ உன் முன்னுலே இருக்கிற கடலைப் பார்க்கிறே. தலைக்கு உசர இருக்கிற வானத்தைப் பார்க்கிறே. எங்கே பார்த்தா லும் இருட்டு !—கரி இருட்டு ! இந்த இருட்டிலே நீ தட்டுத் தடவி தடுமாறுறே...நீ மட்டும் தனியா இருக்கே. நீ ரொம்ப ரொம்பச் சிறுசா உன்னையே நினைச்சிக்கிறே. உலகம் உன் காலடியிலிருந்து பெயருது; நடுங்குது. உனக்குத் துணைக்கு யாருமே இல்லே...அந்தமாதிரி ஒரு சந்தர்ப்பத்திலே நான் உனக்குத் துணையா நிக்கணும்னு நினைப்பேன்......குறைந்த பக்ஷம் நம்ம ரெண்டுபேராவது ஒண்ணுச்சேந்து நிக்கணும்."

மால்வா முழங்காலைக் கட்டியவாறே உட்கார்ந்திருந் தாள்; அவள் கண்கள் மூடியிருந்தன. காற்ருலும் வெயிலா லும் பதப்பட்டுப்போன, தன் முரட்டு முகத்தை, ஆனுல் அன்பான முகத்தை வாஸிலி அவள் பக்கமாகக் கொண்டு போனுன். வெளிறிப்போன அவனது பெரிய தாடி அவளது கழுத்தில் பட்டு, கிளுகிளுப்பு ஊட்டியது. அவள் அசையவே இல்லை; அவளது மார்பகம் மட்டும் விம்மி விம்மிப் பொங்கித் தாழ்ந்தது. தன்மீது நெருங்கிச் சாய்ந்த மார்பகத்தைத் தாங்கிக்கொண்டே, அவன் தன் கண்களைக் கடற் பரப்பின் மீது திரியவிட்டான். அவன் ஆத்திரப்படாமல், அமைதி யாகக் குனிந்து அவளது உதடுகளில் முத்தமிட்டான்; தன் உதடுகளைச் சத்தம் எழும்பச் சொட்டிக் கொடுத்தான். அவன் முத்தமிட்டதைப் பார்த்தால், ஏதோ நிறைய வெண் ணெய் சேர்த்த சூடான பலகாரத்தை தின்பது போல் இருந்தது.

சுமார் மூன்று மணி நேரம் இப்படியே கழிந்தது. சூரி யன் கடல் மட்டத்துக்குக் கீழே மறைய ஆரம்பித்ததும், வாஸிலி கம்மிய குரலில் பேசினுன்:

" நான் போய் டீ போட்ட, கெட்டிலே வச்சிட்டு வாரேன். நம்ம விருந்தாளி சீக்கிரம் எழுந்து விடுவான்."

மால்வா இரை தின்ற பூனைபோல் அவனிடமிருந்து மெதுவாக விலகினாள். அவன் விறுட்டென்று எழுந்து குடிசைப் பக்கம் போனான். பாதி மலர்ந்த தன் கண்களால் அவன் போவதை அவள் கவனித்தாள்; ஏதோ பெரிய பாரத்தை விட்டெறிந்த மாதிரி, பெருமூச்சுவிட்டாள். சிறிது நேரம் கழித்து அவர்கள் மூவரும் அடுப்பைச் சுற்றி உட்கார்ந்து தேநீர் அருந்தினர்.

அஸ்தமன சூரியன் கடற்பரப்பின்மீது வர்ணஜாலம் விரித்தது. கடலின் சியாமளத் திரைவெள்ளத்தின்மீது முத்தொளியும், பழுப்பொளியும் பரவிப் பொங்கின.

வாஸிலி தன் கையிலிருந்த வெள்ளைக் கோப்பையிலுள்ள தேநீரை அருந்திக்கொண்டே, தன் மகனைப் பார்த்து ஊர் விவகாரங்களை விசாரித்தான்; அவனும் பதிலுக்குப் பல செய்திகளைச் சொன்னான். மால்வா அவர்களது பேச்சில் குறுக்கிடாமல் அந்த நீண்ட சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

" அப்படீன்னு, நம்ம ஊரிலுள்ள பழைய *மூஜிக்கு களெல்லாம் இன்னம் காலத்தை எப்படியோ ஓட்டுராங் கன்னுசொல்றே ?" என்று கேட்டான் வாஸிலி.

" ஆமா, ஒண்ணில்லாட்டி, இன்னொரு வழியிலே !" என்றான் யாகோவ்.

"நம்ம மாதிரி மூஜிக்குகளுக்கு அதிகப்படியா ஒண்ணும் வேண்டாம். இல்லையா ? குடியிருக்கத் தலைக்குமேலே ஒரு கூரை, திங்கக் கொஞ்சம் ரொட்டி, ஓய்வுநாளிலே ஒரு கிளாஸ் ஓட்கா மது...வேறென்ன வேணும் ? ஆனா, இதுகூட நமக்கு ஒழுங்காகக் கிடைக்கலே. ஊரிலேயே நம்மாலே ஒழுங்கா சிரமமில்லாமல் பிழைக்க முடிஞ்சிருந்தா, நான் வீட்டை விட்டு இங்கே வந்திருப்பேன்னு நீ நினைக்கிறியா ? வீட்டோடு இருந்தா, எனக்கு நான்தான் அதிகாரி. கிராமத்திலே

---

*: மூஜிக்–ருஷ்ய விவசாயி.

அத்தனை பேரையும்போல, நானும் ஒருத்தன்; சமமான நபர்! இங்கே எப்படி இருக்கேன்?...ஒரு வேலைக்காரன்!..."

"ஆனா, இங்கே உனக்கு நிறையத் திங்கக் கிடைக்குது. வேலையும் கஷ்டமில்லையே!..."

"சரி, நான் அதைச் சொல்லலே! சமயங்களிலே இங்கே எலும்பெல்லாம் வலியெடுக்கிற வரைக்கும் உழைக்க வேண்டியிருக்கு. இங்கே உழைக்கிறதிலே, முக்கியமா நினைச்சிப் பார்க்கவேண்டிய விஷயம் என்னன்னா, ஒரு எஜமானுக்காகத்தான் இத்தனை உழைப்பும் நம்ம செய்யவேண்டியிருக்கு. வீட்டோட இருந்தா, நம்ம உழைக்கிறதெல்லாம் நம்ம சொந்தச் சேமத்துக்குத்தான்."

"ஆனா, நீ இங்கே அதிகம் சம்பாதிக்கிறியே!" என்று எதிர்த்துக் கேட்டான் யாகோவ்.

மனசுக்குள்ளாகத் தன் மகன் சொன்னதை வாஸிலி ஒத்துக்கொள்ளவே செய்தான். ஊரில், வீட்டோடு இருந்தால் இங்கு உழைப்பதைவிட, அதிகமாகப் பாடுபட்டுத்தான் உழைக்கவேண்டும். இருந்தாலும், ஏதோ ஒரு காரணத்தினால், அதை யாகோவிடம் தெரிவிக்க அவன் விரும்பவில்லை. எனவே அவன் மீண்டும் தான் சொன்னதையே வற்புறுத்திப் பேசினான்:

"இங்கே நான் எவ்வளவு சம்பாதிக்கிறேன்னு நீ எண்ணிப் பார்த்தியா? இப்போ மட்டும் வீட்டிலே, ஊரிலே— மகனே......"

"ஊரிலே இருந்தா, இருளடைஞ்சுபோன, இடைஞ்சலான படுகுழியிலே இருக்கிறமாதிரிதான் இருக்கும்!" என்று மால்வா புன்னகையோடு குறுக்கிட்டுப் பேசினாள். "அதிலும் முக்கியமா பொம்பிளைகளுக்கோ கண்ணீரைத் தவிர வேறு கதி கிடையாது!"

"பொம்பிளைகள் பாடு எங்கேயும் அப்படித்தான்... எங்கேயும் இதே கதைதான். எல்லா இடத்திலும் ஒரே சூரியன்தானே காயுது!" என்று மால்வாவைப் பார்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டே பதில் சொன்னான் வாஸிலி.

"அதிலேதான் நீ தப்புப்பண்றே" என்று துடுக்காகப் பதில் சொன்னுள் மால்வா. "நான் மட்டும் கிராமத்திலே இருந்தா, நான் இஷ்டப்பட்டாலும் சரி, இஷ்டப்படாவிட்டாலும் சரி, எவனையாவது கல்யாணம் பண்ணியாகணும்; கல்யாணமாயிட்டா, ஒரு பொண்ணு நிரந்தர அடிமைதான். கதிர் அறுக்கிறது, தறி நெய்றது, மாடு கன்றுகளைக் கவனிக்கிறது, புள்ளைகளைப் பெத்துப் போடுகிறது...அவளுக்குன்னு வேறே என்ன மிச்சம் இருக்கு? புருஷனுடைய ஏச்சு பேச்சு, அடி உதையைத் தவிர வேறென்ன மிச்சம்?..."

"உதையோடு போச்சா?" என்று குறுக்கிட்டான் வாஸிலி.

"ஆனு, இங்கே பாரு, இங்கே நான் யாருக்குமே சொந்தமில்லே" என்று பேச ஆரம்பித்தாள் மால்வா. வாஸிலி குறுக்கிட்டுப் பேசியதைக்கூட, அவள் பொருட்படுத்தவில்லை. "இங்கே நான் இதோ இந்தக் கடற் பறவை மாதிரி சுதந்திரமா இருக்கேன். நான் இஷ்டப்பட்டா எங்கேயும் பறந்து போவேன். என் போக்கை யாரும் தடை பண்ணமுடியாது. யாரும் என்னைத் தொடக்கூட முடியாது!"

"அப்படி யாராவது உன்னைத் தொட்டா?" என்று புன்னகையோடு கேட்டான் வாஸிலி. அவன் மனசில் அன்றைக்கு நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது.

"தொட்டா...நான் திருப்பிக் கொடுப்பேன்" என்று இறங்கிய குரலில் சொன்னுள் மால்வா. அவள் கண்களில் இருந்த ஒளி செத்துவிட்டது.

வாஸிலி அடக்க முடியாமல் சிரித்தான். "ஹோ! நீ ஒரு 'மோட்டா' வெருவுப் பூனைதான்; இருந்தாலும் உங்கிட்டே பெலமில்லே! நீ ஒரு பொம்பிளே; பொம்பிளை மாதிரிதான் நீயும் பேசறே. ஊரில், வீட்டோடு இருந்தால், ஆம்பிளைக்குப் பொம்பிளை அவசியமா வேணும். வாழ்க்கையிலே அவள் ஒரு பகுதி மாதிரி.....ஆனு, இங்கே பொம்பிளென்னு, அவளோடு விளையாடுறத்துக்குத்தான்!"

என்றான். ஒரு கணம் கழித்து "—பாவம் செய்றதுக்கு" என்றான்.

அவர்கள் பேசுவதை நிறுத்தினர்கள்...யாகோவ் ஒரு பெருமூச்செறிந்துவிட்டுப் பேசினன்:

"கடலைப் பார்த்தா, அதுக்கு ஒரு முடிவே இல்லாத மாதிரி தோணுது!"

அவர்கள் மூவரும் தங்கள் முன் விரிந்து பரந்து கிடந்த சமுத்திரத்தின் அகண்டாகாரத்தைப் பார்த்தனர்.

"இதெல்லாம் ஓரே நிலப் பரப்பா இருந்தால்?" என்று தன் கைகளை அகல விரித்துக்காட்டிப் பேசினன் யாகோவ். "அதிலும் கரிசல் நிலமாயிருந்தா? அதை நம்மாலே உழுது பயிரிட முடிஞ்சால்?"

"ஓஹோ! அப்படியிருக்கறதுதான் உனக்குப் பிடிக்குமோ...ம்!" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் வாஸிலி. தன் ஆசையை வெளியிட்டதால் முகம் சிவந்து போயிருந்தான் யாகோவ். அவன் கூற்றை ஆமோதிப்பது போல், வாஸிலி அவனைப் பார்த்தான். அந்த இளைஞன் நிலத்தின் மீதுள்ள தன் காதலை வெளியிட்டதைக் கேட்பதற்கே, வாஸிலிக்கு ஆனந்தமாயிருந்தது. ஒருவேளை அந்தக் காதலே இங்கு ஏற்படக்கூடிய ஆத்ம சோதனைகளுக்கு ஆளாகாமல், மீண்டும் அவனைக் கிராமத்துக்குத் திரும்பிப் போகத் தூண்டிவிடலாம் அல்லவா? அப்படி யாகோவ் போய் விட்டால், வாஸிலி தனி மனிதனாக, மால்வாவோடு வாழ முடியும்; பழையபடி எல்லாம் ஓர் ஒழுங்கோடு நடக்கும்...

"ஆமாம், நீ சொன்னது ரொம்ப சரி, யாகோவ்! விவசாயி அப்படித்தான் விரும்புவான். விவசாயி நிலத்தின் மீதுதான் பலம் வாய்ந்தவனு யிருப்பான். நிலத்தோடு இருக்கும் வரை, அவன் உசுரோடிருப்பான்; அந்த ஒட்டுறவு போய்விட்டால், அவனும் தொலைந்தே போவான்! நிலமில்லாத விவசாயி வேரில்லாத மரத்துக்குச் சமமானவன். வேரில்லாத மரம் வேறு காரியங்களுக்குப் பயன் படலாம்; ஆனல், அது ரொம்ப நாளைக்கு உசுரோடு இருக்க முடியாது—அழுகிப் பட்டுப் போகத்தான் செய்யும்.

அது தன். வனுந்திர அழகையெல்லாம் இழந்து, மொட்டை மழுங்கலாய் ஓர் இலைகூட இல்லாமல் பார்க்கறதுக்கே பரிதாபமாய்ப் போய்விடும். நீ சொன்னது ரொம்ப சரி, யாகோவ்!''

கடல் சூரிய கிரணத்தின் அரவணைப்பை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பிரதியாக அந்திமாலை ஒளிக்கிரணத்தின் மூலம் வர்ணஜாலம் பெற்ற அலைகளின் நாத சங்கீதத்தால் வரவேற்பு கூறியது. ஒளியின் தெய்வீக மூலபுருஷனை, வாழ்க்கையின் சிருஷ்டி கர்த்தாவான சூரியன், தன் வர்ண ஜால இங்கிதத்தால் கடற் கன்னியிடம் விடை பெற்றுக் கொண்டிருந்தான். அந்த அஸ்தமனப் பிரவாக ஜோதியைக் கவனித்துக் கொண்டிருக்கும் அம் மூவரிடமிருந்தும் பிரிந்து தூர தொலைவில், துயிலில் ஆழ்ந்த மக்களை எழுப்பவதற்காக, உதய கால ஜோதியின் இன்பக் கரங்களோடு சென்றுகொண் டிருந்தான்.

'' அட கடவுளே! அந்தச் சூரியன் கீழே இறங்குறதைப் பார்த்து, என் மனசு அப்படியே இளகிப் போறதுமாதிரித் தோணுது!'' என்று மால்வாவைப் பார்த்து வாஸிலி சொன்னான்.

மால்வா பதில் பேசவில்லை. தூரத் தொலைக்கடலின் அடிவான விளிம்பில் திரியும் யாகோவின் நீலக் கண்களில் களிப்பு குமிழியிட்டது. பகல் ஒளியின் அந்திம காலம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறுகிச் செல்லும் திசையை வெகு நேரம்வரை வெறித்துப் பார்த்தவாறே மூவரும் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்னால் நெருப்பின் கனல் ஒளி செய்துகொண் டிருந்தது. அவர்களுக்குப் பின்னால் இரவு தன் நிழல் திரைகளை அவிழ்த்துப் பரப்பியது. மஞ்சள் நிறமான மணல் வெளியில் கறுமை பாய்ந்தது. கடற் பறவைகள் கண் மறைந்து போய்விட்டன. சுற்றியுள்ள சூழ்நிலை முழுவதும் அமைதி பெற்றது; சொப்பன சுகம் போல் இருந்தது....அடக்க முடியாத குதூகலத்தோடு கரையை நோக்கிப் பாய்ந்த அலைகள் பகல் நேரத்தைப் போல் சிரிப்பும் கும்மாளியும் போடவில்லை; அதன் ஒலியும் உவகையும் குன்றிப் போயின.

" நான் ஏன் இங்கேயே உட்கார்ந்துக்கிட்டிருக்கேன் ? நான் போறதுக்கு நேரமாச்சு " என்று மால்வா திடீரெனச் சொன்னாள்.

வாஸிலி நடுங்கினான் ; தன் மகனை லேசாகப் பார்த்தான்.

" இப்போ என்ன அவசரம்? நிலா வர்ர வரைக்கும் இரு " என்று முனகினான் வாஸிலி.

" நான் எதுக்கா இருக்கணும்? எனக்கு ஒண்ணும் பயமில்லே. இங்கே இருந்து ராத்திரியிலே போறது எனக்கு ஒண்ணும் புதிசில்லே !"

யாகோவ் மெதுவாகத் தன் தந்தையைப் பார்த்தான் ; தன்னிடம் கிளம்பும் கேலிச் சிரிப்பை மறைப்பதற்காக, உடனே முகத்தைத் தாழ்த்திக் கொண்டான் ; பிறகு மால்வாவைப் பார்த்தான். அவளும் அவனது பார்வையை எதிர்த்துப் பார்த்தாள். அவளது பார்வையை அவனால் தாங்க முடியவில்லை.

" ரொம்ப சரி. அப்படீன்னா போ " என்று வெறுப்போடும் வருத்தத்தோடும் சொன்னான் வாஸிலி.

மால்வா எழுந்து விடைபெற்றுக்கொண்டு கடற்கரை வழியாக மெதுவாக நடந்து சென்றாள். கடலலைகள் அவளோடு விளையாடுவது மாதிரி அவளது காலடியில் புரண்டன. வான மண்டலத்தின் சொர்ண புஷ்பங்களான தாரகைகள் கண் சிமிட்டின. மால்வாவின் பளபளப்பான ரவிக்கையின் நிறம் அவள் தூரமாகச் செல்லச் செல்ல, அவளையே பார்த்துக் கொண்டிருக்கும் வாஸிலி, யாகோவ் — இருவர் கண் பார்வையினின்றும் மங்கி மறைந்துகொண்டிருந்தது.

கண்ணான கண்ணே மச்சான் !
கட்டாயம் ஓடி வாடா !
பொன்னான ஆசை நெஞ்சைப்
பிடிக்கத் துடிக்கிறேண்டா !

மால்வா உரத்த குரலில் பாடினாள். அதைக் கேட்டதும், வாசிலிக்கு அவள் போகாமல் அங்கேயே நின்று, தனக்காகக் காத்திருப்பதுபோல் தோன்றியது. அவன் கோபத்தோடு காறித் துப்பினான்; பிறகு மனசுக்குள்ளாக, "பொட்டைப் பிசாசு! என்னைக் கிண்டி விடுறதுக்குன்னே, அவள் இப்படியெல்லாம் பண்ணுறா!" என்று நினைத்துக்கொண்டான்.

"அவள் பாடுறதைக் கேளு!" என்று யாகோவ் புன்னகையோடு சொன்னான்.

அந்த இருளில் அவளது உருவம் அவர்கள் கண்களுக்கு மங்கிய சாயையாகத்தான் தோன்றியது. அவளது பாட்டுக் குரல் மீண்டும் கடல் வெள்ளத்தில் மோதி ஒலித்தது.

வெள்ளியன்னச் சோடி போலே
விம்முகின்ற ரெட்டை நெஞ்சை
அள்ளி அணைக்க வாடா!
ஆசையுள்ள நேச மச்சான்!

"இதைக் கேட்டியா?" என்று யாகோவ் கூறிக்கொண்டே அந்த ஆசை வார்த்தைகள் வந்த திக்கை நோக்கி கிளம்பப் போனான்.

"அப்படீன்னா, உன்னாலே நம்ம பண்ணையை மேற்பார்க்க முடியலையா?" என்று கடுமையான குரலில் வாசிலி கேட்ட சப்தத்தை யாகோவ் கேட்டான்.

யாகோவ் தன் தந்தையைப் பயந்துபோன கண்களோடு பார்த்தான்; பிறகு அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

கடல் அலைகளின் ஓசை அவளது பாட்டை முழுக அடித்து விடுவதால், வெறியூட்டும் அந்தப் பாடலை அவர்களால் முழுதும் கேட்க முடியவில்லை. ஒன்றிரண்டு வரிகள் தான் விட்டு விட்டுக் கேட்டன.

ஒத்தையொருத்தியாலல்
உறங்க முடியுமோடா!

அத்தை மகன் நீயில்லாமல்
ஆசைக் கண்ணு மூடுமோடா ?......

" ஒரே உஷ்ணமாயிருக்கு " என்று மணலில் புரண்டு கொண்டே மெதுவாகச் சொன்னான் வாஸிலி: " ராத்திரி யாச்சு, இன்னம் சூடு அப்படியேதான் இருக்கு. என்ன மோசமான பூமியடா இது !"

" இது மணலில்லெ......பகல் முச்சூடும் ஒரே சூடாத் தான் இருக்கும் " என்று தட்டுத் தடுமாறிச் சொன்னான் யாகோவ்; சொல்லிவிட்டு மறு பக்கமாகத் திரும்பிக்கொண் டான்.

" உன்னைத்தானே, இங்கே பாரு. எதுக்காகச் சிரிக் கிறே ?" என்று கண்டிக்கும் குரலில் கேட்டான் வாஸிலி.

" நானா ? சிரிக்கிறத்துக்கு என்ன இருக்கு ?" என்று ஒன்றும் அறியாதவன் மாதிரி கேட்டான் யாகோவ்.

" ஆமா ! சிரிக்கிறத்துக்கு ஒண்ணுமில்லேதான்......"

இருவரும் மௌனமாயினர்.

அலையோசையையும் மிஞ்சி அவர்கள் காதில் ஏதோ கேட்டது. அது பெரு மூச்சோ ? அல்லது ஆசையோடு அழைக்கும் குரல்களோ ?.........

# 2

இரண்டு வாரங்கள் கழிந்தன. ஞாயிற்றுக்கிழமை மீண்டும் வந்தது. வாஸிலியும் மீண்டும் தன் குடிசையை யடுத்த மணல் வெளியில் படுத்துக்கொண்டு கடலையே பார்த்துக் கொண்டிருந்தான்; மால்வாவுக்காகக் காத்துக்கொண்டிருந்தான். தோணிகளின் நடமாட்டம் அற்று வெறித்திருந்த கடல் சிரித்துக்கொண்டிருந்தது; சூரிய ஒளியின் பிரதிபலிப்போடு விளையாடி, படைபடையாக அலைகள் பிறந்து கரையை நோக்கி ஓடிவந்தன; கரையில் நுரைத் துகள்களைச் சிதறி, மீண்டும் பின்வாங்கி, கடலோடு ஒன்று கலந்தன. பதினன்கு நாட்களுக்கு முன் எந்த மாதிரிச் சூழ்நிலை இருந்ததோ, அதேமாதிரிதான் அன்றும் இருந்தது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். அன்று வாஸிலி தன் கண்ணுட்டிக்காகப் பூரண அமைதி நிரம்பிய நம்பிக்கையோடு காத்திருந்தான்; இப்போதோ பொறுமையற்றுக் காத்திருந்தான். போன ஞாயிற்றுக்கிழமை யன்றும் அவள் வரவில்லை— இன்று அவள் கட்டாயம் வரத்தான் வேண்டும்! அதைப் பற்றி அவனுக்குச் சந்தேகமே இல்லை; ஆனால், அவளைக் காண்பதற்காக அவன் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தான். யாகோவ் இன்று அவர்களுக்கு மத்தியில் குறுக்கிடமாட்டான். இரண்டு நாட்களுக்கு முன் அவன் சில செம்படவர்களோடு வலைக்காக வந்தான் ; மேலும் தனக்குச் சில சட்டை துணிமணி எடுப்பதற்காக, இந்த ஞாயிற்றுக்கிழமை டவுனுக்குச் செல்வதாகவும் சொன்னன். மாசம் பதினைந்து * ரூபிள் சம்பளத்தில் அவனுக்கு மீன் பிடிக்கும் உத்தியோகம் கிடைத்துவிட்டது. அவன் மீன் பிடிப்பதற்காக, கடல்மேல் பல தடவைபோய்ப் பழக்கப்பட்டுவிட்டான்; இப்போதெல்லாம் அவனும் குதூகலமாகவும், உற்சாகமாகவும் இருந்தான். எல்லாச் செம்படவர்களையும் போலவே அவன் உடம்பிலும் கருவாட்டு நாற்றம் அடித்தது; எல்லோரையும் போலவே அவனும் கந்தலும் அழுக்கும்

* ரூபிள் : ருஷ்ய வெள்ளி நாணயம்.

நிறைந்த உடைகளையே அணிந்திருந்தான். மகனைப்பற்றிய நினைவு எழுந்ததும் வாஸிலி பெருமூச்சு விட்டான்.

"அவன் வந்ததால் ஒரு கெடுதியுமில்லை என்றே நினைக்கிறேன். அவன் கெட்டுச் சீரழிந்து போனால், திரும்ப வீட்டுக்குப் போகவே விரும்பமாட்டான்...அப்படி, அவன் ஊருக்குப் போகவில்லையென்றால், நான்தான் போக வேண்டியிருக்கும்......" வாஸிலி தன் மனத்துள் இப்படி யெல்லாம் யோசித்துக்கொண் டிருந்தான்.

கடல்மீது கடற் பறவைகளைத் தவிர வேறு நடமாட்டமே காணோம். இடையிடையே கடற் கரையை ஒட்டிய தூரதொலைத் தண்ணீரில் சிறு சிறு கறும்புள்ளிகள் தோன்றின ; பிறகு மறைந்தன. ஆனால், ஒரு படகேனும் கண்ணுக்குத் தெளிவாகத் தெரியும்வரை நெருங்கி வர வில்லை. சூரியனோ தன் கதிர்களைச் செங்குத்தாக உயரநின்று எய்ய ஆரம்பித்துவிட்டான். வழக்கமாய், மால்வா இந் நேரத்துக்கு முன்பே வந்துவிடுவாள்.

இரண்டு கடற் பறவைகள் ஆகாயத்தில் மூர்க்கமாகச் சண்டை பிடித்துக்கொண்டன ; அதனால், அதன் சிறகுத் தூவிகள் பிய்ந்து பறந்தன. அகண்ட ஜலப்பரப்பின் மீது சூரிய கிரணங்கள் குதூகலத்தோடு மீட்டிய இசை மயக்கம் போல், கடலலைகளின் உவகை நிறைந்த கீதம் எழும்பியது. ஒளி நிறைந்து மோன வெளியாய்ப் பரவியுள்ள வான மண்டலத்தோடு அந்த நாதகீதம் இங்கித லயத்தோடு முயங்கிக்கொண் டிருந்தது. ஆனால், அந்தக் கடற் பறவை களின் பயங்கரக் கூச்சல், அந்த நாத முயக்கத்தினூடே அசுர கர்ஜனையாக ஒலித்துப் பாழ்படுத்தியது. அந்தப் பறவைகள் இரண்டும் ஜலத்தை நோக்கிக் குப்புறப் பாய்ந் தன ; அப்போதும் அவை ஒன்றையொன்று கொத்தின ; வலியினாலும் கோபத்தினாலும் கத்தின. மீண்டும் ஒன்றை யொன்று துரத்திக்கொண்டு வானில் எழும்பின...அவற் றின் கூட்டாளிகளான பறவைக் கூட்டம் மீன்களைப் பாய்ந்து பாய்ந்து வேட்டையாடின. பொங்கும் பசிய நிற அலை வெள்ளத்தின்மீது கரணங்கள் போட்டன ; அந்த இரு பறவைகளின் சண்டையை அவை கவனித்த தாகவே தெரியவில்லை.

கடல் இன்னும் வெறிச்சோடித்தான் கிடந்தது; வழக்கமாகத் தோன்றும் அந்தக் கறும்புள்ளி தூரத் தொலைக் கரையில் தோன்றவே காணோம்.

"நீ வரலையா? சரி. வரமாட்டாயா? நீ என்னதான் நினைச்சிருக்கே?" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டான் வாஸிலி.

கடற்கரைத் திசையை நோக்கி வெறுப்போடு காறித் துப்பினான்.

கடல் சிரித்தது.

எழுந்து சென்று சாப்பாடு ஏதாவது தயார் பண்ணலாம் என்ற எண்ணத்தோடு வாஸிலி தன் குடிசைக்குப் போனான். அவனுக்குச் சாப்பாட்டின்மீது நாட்டமில்லை; எனவே திரும்பவும் பழைய இடத்துக்கே வந்து படுத்துக் கொண்டான்.

"செர்யோஸ்காவது வந்தானானால்!" என்று மனசுக்குள் நினைத்தான் வாஸிலி. உடனே அவனுக்கு செர்யோஸ்காவைப் பற்றி நினைத்துப் பார்க்கத் தோன்றியது; "அவன்—அந்தப் பயல், ஒரு பயங்கரமான ஆசாமி. யாரைப் பார்த்தாலும் சிரிக்கிறான். எப்போ பார்த்தாலும் சண்டைக்குத்தான் தயாராய் நிற்பான்! ஆளும் நல்ல மாட்டுக் கடா மாதிரி பலமாயிருக்கான். கொஞ்சம் படிச்சிருக்கவும் செய்றான். பல இடங்களுக்குப் போய் வந்திருக்கிறான்... ஆனா, பெரிய குடிகார மட்டை! அவன் நல்ல துணைதான். இருந்தாலும்...எல்லாப் பொம்பிளைகளும் அவனைப் பார்த்து மனசைப் பறிகொடுத்திருக்காங்க. இங்கே அவன் ரொம்ப நாளா இருக்கலே; இருந்தாலும் எல்லாப் பெண்களும் அவனைத் துரத்திக்கிட்டுத் திரியுறாங்க. மால்வா ஒருத்தி தான் அவன் பக்கமே போகலே...அவளும் வரக்காணோம்! அவளுக்கு என்ன திமிர் இருக்கணும்! நான் அவளை அடிச்சதினாலே என்மேலே ஒருவேளை கோபமாயிருக்காளோ என்னவோ? ஆனா, அது என்ன அவளுக்குப் புதுசா?...மத்தவங்களும் அவளை அடிச்சிருக்கத்தான் செய்வாங்க. ஆனா,

எப்படி ?...அவளை இப்போதான் அடிக்கணும்போல எனக்குத் தோணுது...''

இப்படியாக ஒரு கணம் தன் மகனைப்பற்றியும், மறு கணம் செர்யோஸ்காவைப்பற்றியும், ஆனால் மால்வாவைப் பற்றியே முழு நேரமும் யோசித்துக் கொண்டு, அந்த மணல் வெளியில் காத்துக் கிடந்தான் வாஸிலி. அவன் ஆத்திரம் சந்தேகாஸ்பதமான கெட்ட நினைவுகளை யெல்லாம் நினைவுக்கிழுத்தது; இருந்தாலும் அவற்றை விரட்டியடித்துக்கொண் டிருந்தான். எனவே தன்னுள் தோன்றிய சந்தேகத்தைத் தனக்குள்ளாகவே மூடிவைத்து விட்டு, அவன் மணல் வெளியில் அங்குமிங்கும் உலாவுவதும், மீண்டும் படுப்பதுமாக, மாலை நேரம்வரை காத்துக் கிடந்தான். இருள், கடல்மீது ஏற்கெனவே பரவ ஆரம்பித்து விட்டது; இருந்தாலும், அவன் கண்கள் தோணியின் வரவை நோக்கித் தூரதொலைவிலேயே நிலைத்து நின்றன.

மால்வா அன்று வரவேயில்லை.

ஊருக்குள் போக முடியாமற்போன தன் விதியை நொந்துகொண்டே திரும்பினான் வாஸிலி. அவனுக்குத் தூக்கம் கண்ணைக் கிறக்கிய போதும், எங்கோ தூரத்தில் கடல்மீது துடுப்புத் தள்ளும் ஓசை அடிக்கடி கேட்பது மாதிரி இருந்தது. உடனே தலையை உலுப்பிக்கொண்டு துள்ளி எழுந்து குடிசையைவிட்டு வெளியே ஓடிவந்தான். கையை உயர்த்தி கண்ணுக்கு நிழல் கொடுத்துக்கொண்டு, இருளில் சொர்தளிக்கும் கருங்கடலை வெறித்து ஏறிட்டுப் பார்த்தான். கரைமீது, மீன் பண்ணைகளின் பக்கத்தில் இரண்டு இடங்களில் தீ எரிவது தெரிந்தது; கடலோ வெறிச்சோடி நடமாட்டமற்றுக் கிடந்தது.

''இரு இரு, மாயக் கள்ளி!'' என்று வருமத்துடன் முனகிக் கொண்டான்; பிறகு திரும்பிவந்து படுத்தான்; நன்றாகத் தூங்கிவிட்டான்.

ஆனால், அன்று மீன் பிடிக்கும் பண்ணையில் நடந்த கதை இதுதான்......

யாகோவ் அன்று அதிகாலையிலேயே எழுந்து விட்டான். அவன் எழுந்த வேளையில், சூரிய உஷ்ணம் உறைக்க ஆரம்பிக்கவில்லை ; கடலிலிருந்தும் புதிய காற்று வீசிக் கொண்டிருந்தது. அவன் கடலில் குளிக்கப்போனான் ; அப்போது கடற்கரையில் மால்வாவைப் பார்த்தான். அவள் கரைமீது தள்ளப்பட்டிருந்த ஒரு தோணியின் முகப்பில் உட்கார்ந்து, ஈரத் தலை மயிரைச் சீவிச் சிக்கெடுத்துக் கொண்டிருந்தாள். உறைகள் அணியாத அவளது கால்கள் தோணியின் விலாப்புறத்தில் ஊசலாடிக்கொண் டிருந்தன.

யாகோவ் சடக்கென்று நின்று, அவளைக் கூர்ந்து பார்த்தான்.

மால்வாவின் ரவிக்கை, அவளது மார்பாகத்தின் முன் பொத்தான் மாட்டாமல் கழன்று, தோள்பட்டைப் பக்கமாக நழுவிக் கிடந்தது. திறந்து கிடந்த அந்தத் தோள் வெண்மையாக, உணர்ச்சி வெளியூட்டுவதாக இருந்தது.

கடலலைகள் தோணியின் முகப்பில் சாடி மேலோங்கித் தாக்கின. எனவே அதன் முனையிலிருந்த மால்வாவும் கடலுக்கு மேலாக உயர்ந்து போனாள் ; அலை தாழும் போது அவளும் தாழ்ந்தாள். அப்படித் தாழும்போது அவளது பாதங்கள் கடல் நீரைத் தொடுவது மாதிரித் தோன்றியது.

"நீ குளிச்சிட்டியா ?" என்று யாகோவ் அவளைப் பார்த்துச் சத்தமிட்டான்.

அவள் முகத்தைத் திருப்பி அவனைப் பார்த்தாள் ; ஒரே விச்சில் அவனைக் கண்டுகொண்டாள். பிறகு தன் தலையைச் சிக்கெடுத்துக்கொண்டே, அவனுக்குப் பதில் சொன்னாள் :

"ஆமாம்...நீ ஏது காத்தாலேயே வந்திட்டே ?"

"நீ எனக்கும் முன்னாடி வந்திட்டியே !"

"என்னை மாதிரி நீயும் நடந்துக்கணுமா ?"

யாகோவ் பதில் பேசவில்லை.

"நீ என்னையே பின்பத்திச் சுத்தினேயானு, உன் தலையைத்தான் பறி கொடுப்பே!" என்றாள் அவள்.

"ஓஹோ! நீ அத்தனை பயங்கரமானவளா?" என்று பதில் சொல்லிவிட்டுச் சிரித்தான் யாகோவ்; பிறகு கீழே இறங்கி, கால்களைக் கழுவ ஆரம்பித்தான்.

அவன் தன் கைகளில் நீரை முகந்து, முகத்தின்மீது அடித்தான்; நீரின் குளிர்ச்சியினால் ஏற்பட்ட சுகம் தொண்டைக் குழியில் களகளத்தது. தன் சட்டைத் துணியால் முகத்தையும் கைகளையும் துடைத்துக்கொண்டு, அவன் மால்வாவைப் பார்த்துக் கேட்டான்:

"நீ ஏன் என்னைப் பயமுறுத்தணும்னே பாடுபடுறே?"

"நீ ஏன் என்னை முறைச்சி முறைச்சிப்பார்த்துக்கிட்டே இருக்கே?" என்று பதிலுக்குக் கேட்டாள் மால்வா.

மீன் பண்ணையிலுள்ள மற்றப் பெண்களை பார்த்ததை விட, மால்வாவைப் பல தடவை ஏறிட்டுப் பார்த்ததாக யாகோவ் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. இருந்தாலும், உடனே பதில் சொன்னான்: "ஏனென்றால் நீ அத்தனை கவர்ச்சியாயிருக்கே, உன்னை முறைச்சிப் பார்க்காம இருக்க முடியலே!"

"உன் நடவடிக்கையெல்லாம் உன் அப்பாவுக்குத் தெரிஞ்சா, உன் கழுத்தை முறிச்சே போடுவார்!" என்று கூறிக்கொண்டே, பெருமிதமும், கவர்ச்சியும் நிறைந்த பார்வையை ஒரு கணம் அவன்மீது வீசினாள்.

யாகோவ் சிரித்துக்கொண்டே, தோணிக்குள் ஏறினான். தன் 'நடவடிக்கைகள்' என்று மால்வா எதைக் குறிப்பிட்டுப் பேசினாள் என்று அவனுக்குத் தெரியாது; என்றாலும், அவள் அதைச் சொன்னதிலிருந்து அவளை வெறித்துப் பார்ப்பது அவனுக்கு என்னவோ போலிருந்தது. அவன் உள்ளத்தில் முரட்டுத் தைரியம் தலை தூக்கியது.

"எங்கப்பாவைப் பத்தி என்னவாம்?" என்று சொல்லிக்கொண்டே அவள் பக்கத்தில், தோணிப் பலகை

யில் தாவி உட்கார்ந்தான்: "அவர் என்னை விலைக்கு வாங்கியிருக்காரா என்ன? இல்லே கேக்கிறேன்?"

மால்வாவுக்குப் பக்கமாக உட்கார்ந்து, அவளது வெண்மையான தோளை ஓரக் கண்ணால் பார்த்தான். அவளது பாதி திறந்துகிடந்த மார்பகம், புதுமையும், பூரிப்பும், திண்மையும், கடலின் நறுமணமும் தோய்ந்த அவளது உடம்பு—எல்லாவற்றையும் பார்த்தான்.

"அம்மாடி! நீ எவ்வளவு அழகாயிருக்கே!" என்று வியந்து சொன்னான் யாகோவ்.

"ஆனா, உனக்காக இல்லே!" என்று சட்டென்று பதில் சொன்னாள் மால்வா. அவள் அவனைப் பார்க்கவும் இல்லை; உலைந்து கிடந்த தன் உடையைச் சீர்படுத்தவும் சிரத்தை கொள்ளவில்லை.

யாகோவ் நீண்ட பெருமூச்சு விட்டான்.

அவர்களுக்கு முன்னால் கடல் பரந்து கிடந்தது; உதயகால சூரியனின் கிரணங்களால், வர்ணிக்கமுடியாத அழகுபெற்று இலங்கியது. இளங்காற்றின் வருடலால் பிறக்கும் சின்னஞ் சிறிதான பிள்ளை அலைகள் தோணியின் விலாப்புறத்தில் மெதுவாக மோதின. பட்டுப்போன்ற மார்பகத்தில் தோன்றும் மருப்புள்ளிபோல், தூரத்தில் கடலுக்கு மேலாக, அந்தத் திடல் மேடு தெரிந்தது. நீல வானின் மென்மையான பகைப் புலத்தில், அந்தப் பாய் மரத் துணி மெல்லிதாக வரைந்த வரிக்கோடுபோல் தோன்றியது. அதன் உச்சியிலுள்ள சிவப்புக் கந்தைத் துணி காற்றில் படபடப்பதும் தெரிந்தது.

"ஆமாம், பையா!" என்று யாகோவைப் பார்க்காமலே பேச ஆரம்பித்தாள் மால்வா: "நான் கவர்ச்சிகரமாயிருக்கலாம்; ஆனா, நான் உனக்காக இருக்கல்லே... யாரும் என்னை விலைக்கு வாங்கலே. நான் உன் அப்பாவுக்கும் உடைமையில்லே. நான் என் இஷ்டப்படி வாழ்கிறேன்... ஆனா, நீ என்னை வசப்படுத்தணும்னு மட்டும் நினைக்காதே. ஏனென்றால், நான் உனக்கும் வாஸிலிக்கும்

குறுக்கே நிற்க விரும்பலே...சண்டை. சச்சரவு எதுவும் ஏற்படுவதை நான் விரும்பலே...நான் சொல்றது உனக்குப் புரியுதா?''

''இதையெல்லாம் என்னிடம் எதுக்குச் சொல்றே?'' என்று அதிசயித்துப்போய்க் கேட்டான் யாகோவ். மேலும் ''நான் உன்னைத் தொடவா செய்தேன்? தொடலையே!'' என்றான்.

''உனக்கு அதுக்குத் துணிச்சல் கிடையாது!'' என்றாள் மால்வா.

அவள் குரலிலிருந்த ஏளன பாவத்தை உணர்ந்த யாகோவுக்கு தன் ஆண்மை மட்டுமல்லாமல், மனிதத் தன்மையே இழிவு படுவதாகப் பட்டது. எனவே அவன் உடம்பில் குறும்புத்தனமான, பாவகரமான வெறியுணர்ச்சி மேலோங்கியது; அவன் கண்கள் பிரகாசித்தன.

''ஓஹோ, நான் துணியமாட்டேனு. அப்படியா சொல்றே?'' என்று சொல்லிக்கொண்டே அவள் பக்கம் நெருங்கி உட்கார்ந்தான்.

''இல்லே, நீ துணியமாட்டே!''

''துணிஞ்சிட்டேன்னு வச்சிக்கோ!''

''எங்கே, பார்ப்போம்!''

''என்ன நடந்திடும்?''

''நான் உன் கழுத்திலே குடுக்கிற ஒரே குத்திலே, நீ அப்படியே பறந்துபோய்த் தண்ணியிலே விழுவே!''

''எங்கே? குடு, பார்க்கலாம்!''

''என்னைத் தொடுறதுக்கா துணியுறே?''

அவன் தன் கனன்றெரியும் கண்களை அவள்மீது பதித்தான்; மறுகணம் திடீரென்று தன் பலமான கைகளை வீசி அவளை வளைத்தான்; அவள் மார்பும் முதுகும் அழுந்தி நொறுங்கும்படியாக அவளை அணைத்தான். திண்மையும்

வெம்மையும் நிறைந்த அவளது உடம்பின் ஸ்பரிச சுகம் அவன் உடம்பில் நெருப்பைப் பற்ற வைத்தது; உடம்பு குதுகுதுத்தது. குரல்வளை நெரிபடுவதுபோல், தொண்டை அடைத்தது.

"எங்கே உன் சாமர்த்தியத்தைக் காட்டு...ம்...குத்து! குத்துவேன்னு சொன்னியே!" என்று அவன் இரைக்க இரைக்கப் பேசினான்.

"என்னை விட்டுடு, யாஸ்கா!" என்று அமைதியாகச் சொல்லிக்கொண்டே, அவனது நடுங்கும் கரங்களின் அரவணைப்பிலிருந்து விடுபட முயன்றாள், மால்வா.

"ஆமா, நீ என் கழுத்திலே குத்துவேன்னியே! நீ சொல்லலே?"

"என்னை விட்டுடு. பிறகு நீதான் இதற்காக வருத்தப் படப் போறே!"

"என்னை ஒண்ணும் பயம் காட்டாதே... ஆஹா!...நீ இனிமையாயில்லை?"

அவன் அவளை மேலும் இறுகத் தழுவி அணைத்தான்! தன் கனத்த உதடுகளை அவளது செக்கச் சிவந்த கன்னத்தில் பதித்து அழுத்தினான்!

மால்வா குறும்புத்தனமாகச் சிரித்தாள்; யாகோவின் பிடியைப் பலமாக உதறிப் பிடுங்கி, தன் உடம்பு முழுவதை யும் முன்னதாகத் தள்ளி உலுக்கினாள். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் இறுக அணைத்திருந்ததால், தோணி யிலிருந்து நிலை தவறிக் கடலுக்குள் விழுந்தனர்; தண்ணீர் சளப்பென்று உயர்ந்து தெறித்தது. மறுகணம் இருவரும் நீரின் தூவானமும், நுரையும் கலந்த சுழியில் மறைந்தனர். சிறிது நேரம் கழித்து ஓர் அலையுச்சியின் மீது யாகோவின் தலை தோன்றியது; தலை வழியாகத் தண்ணீர் சொட்டியது; முகத்தில் பயமடித்துப் போயிருந்தது. மால்வாவும் அவ னுக்குப் பக்கமாகத் தலைநீட்டி, மேலே வந்தாள். தன் கைகளைப் பலமாக வீசி, தண்ணீரை வாரி இறைத்துக் கொண்டே அவன் கர்ஜித்தான்; ஊளை யிட்டான்.

மால்வாவோ வாய்விட்டுச் சிரித்தாள்; அவன் பக்கமாக நீந்தி வந்து, உப்பு நீரை அவன் முகத்தில் வாரி இறைத்தாள். பிறகு அந்த இடத்திலிருந்து தப்பிப்பதற்காக, கைகளை அகட்டி வீசிப் பாய்ந்து நீந்தினாள்.

"உன்னைத்தானே, ஏ, பொட்டைப் பிசாசே!" என்று தன் வாயிலும் மூக்கிலும் சென்ற நீரைச் செருமி வெளிப்படுத்திக்கொண்டே சத்தமிட்டான் யாகோவ்.

"ஐயையோ! நான் மூழ்கித் திணறுவேன்...போதும், போதும்...கடவுளே! நான் மூச்சு முட்டிப்போவேன்...தண்ணி கரிக்குதுன்னு...ஐயோ, நான் மூழ்கி...றே...ன்!"

ஆனால், மால்வா அதற்குள் அவனை விட்டு விலகிப் பிரிந்து, கரையை நோக்கி, ஓர் ஆண் மகனைப்போல் நீந்திச் சென்றுகொண்டிருந்தாள்.

கரையை அடைந்தவுடன் தோணி மீது லாகவமாகத் தாவி, முகப்பிலே ஏறி நின்றாள்; அவளை அடைவதற்காக, தண்ணீருக்குள் இரைக்க இரைக்க மூழ்கி நீந்திவரும் யாகோவைப் பார்த்துச் சிரித்தாள். அவளது ஈர உடைகள் உடம்போடு ஒட்டிக் கிடந்தன; எனவே உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அவளது உடம்பின் வடிவத்தை வரிக்கோடு போட்டுக் காட்டுவது போலிருந்தது. யாகோவ் ஒரு மட்டும் அவள் பக்கம் நீந்தி வந்து, படகைப் பற்றித் தொங்கிக்கொண்டான். தன்னைப் பார்த்துக் குதூகலமாகச் சிரிக்கும் அந்தப் பெண்ணின் நிர்வாணம் போன்ற கோலத்தைத் தாகம் நிறைந்த கண்களோடு வெறித்துப் பார்த்தான்.

"வா, வா, தண்ணியை விட்டு வெளியே வா, பண்ணிக் குட்டியே!" என்று தன் சிரிப்போடு சிரிப்பாய்ச் சொன்னாள் மால்வா. பிறகு தன் முழங்கால்களை மடக்கியூன்றி, ஒரு கையால் படகைப் பற்றிக்கொண்டு, மறு கையை யாகோவிடம் நீட்டினாள். யாகோவ் அவள் கையைப் பிடித்துக்கொண்டு உத்வேகமாகப் பேசினான்:

"இதோ பாரு, உன்னை மூழ்கடிக்கிறேன்!"

நிலை நீச்சலில் நின்றவாறே, அவன் மால்வாவைத் தன் பக்கமாக இழுத்தான். அவன் தலைக்கு மேலாக அலைகள்

பாய்ந்து, தோணியின் மீது மோதி, மால்வாவின் முகத்தில் சிதறித் தெறித்தன. மால்வா முகத்தைச் சுழித்துக் கொண்டே சிரித்தாள். மறுகணம் அவள் கூச்சலிட்டு, நீருக்குள் நேராகப் பாய்ந்து, அப்படியே யாகோவின் மீது சாடி விழுந்து, அவனை நிலை புரளச் செய்தாள். மீண்டும் அவர்கள் இருவரும் இரண்டு கடற் பன்றிகளைப் போல, அந்தப் பசிய நீரில் விளையாடினர்; ஒருவர் மீது ஒருவர் நீரை வாரி வீசினர்; கூச்சலிட்டனர்; நீரைக் கொப்பளித்தனர்; இரைக்க இரைக்க மூச்செறிந்தனர்.

அவர்கள் விளையாடுவதைக் கண்டு சூரியன் சிரித்தது. சூரிய ஒளி பட்டுப் பிரதிபலிக்கும் மீன் பண்ணைக் குடியிருப்புக்களின் கண்ணாடி ஜன்னல்களும் சிரித்தன. அவர்களது வலிய கரங்களால் பிளந்தெறியப்படும் கடல் நீர் பொங்கிக் கொப்பளித்தது; அவர்கள் இருவரும் நீரில் போராடுவதைக் கண்டு பயந்த கடற் பறவைகள் கீச்சுக் குரலில் கூச்சலிட்டுக் கொண்டு, அவர்களது தலைக்கு மேலாகப் பறந்து பறந்து அலைகளுக்குள் மறைந்து திரிந்தன...

கடைசியாக, அவர்கள் தாங்கள் குடித்த கடல் நீரினால் மூச்சுத் திணறிக் களைத்துப்போய், கரைக்கு ஊர்ந்து வந்து சூரிய ஒளியில் களைப்பாறுவதற்காக உட்கார்ந்தனர்.

"பூ!" என்று யாகோவ் தன் வாய் எச்சிலைக் காறித் துப்பினான்.

"இந்தத் தண்ணி ரொம்ப மோசம்! இது இவ்வளவு ரொம்ப இருக்கது ஒண்ணும் அதிசயமில்லே!"

"உலகத்திலே மோசமான சரக்குகளுக்குக் குறைச்சலே இல்லை! உதாரணமாக, இந்த இளவட்டப் பயல்கள்! அட, கடவுளே! இப்படி எத்தனை வாலிபர்கள் இருக்கிறாங்க!" என்று சிரித்துக்கொண்டும், தன் தலையிலுள்ள தண்ணீரைப் பிழிந்து கொட்டிக்கொண்டும் சொன்னாள், மால்வா.

அவளது தலைமயிர் கறுப்பாக இருந்தது; நீளமாக இல்லாவிட்டாலும் அடர்த்தியாக அலையலையாக இருந்தது.

"அந்தக் கிழவன் உன்மேலே ஆசைப்பட்டது ஒண்ணும் அதிசயமில்லே" என்று குறும்புத்தனமாகச் சிரித்துக் கொண்டே சொன்னான் யாகோவ்; அத்துடன் தன் முழங் கையால் அவளை இடித்துக்கொண்டான்.

"சில சமயங்களில் வாலிபப் பிள்ளையை விட, கிழவன் எவ்வளவோ மேல்!"

"அப்பன் மேலேன்னா, மகன் அதுக்கும் மேலேதான் இருப்பான்!"

"அப்படியா? இப்படிப் பெருமை பீத்திக்க எங்கே கத்துக்கிட்டே?"

"எங்க ஊரிலுள்ள இளம் பெண்டுகளெல்லாம் நான் பார்க்க அழகாயிருக்கேன்னு அடிக்கடி சொல்லியிருக்காங்க."

"இளம் பெண்களுக்கு என்ன தெரியும்? என்னைக் கேளு!"

"நீ இளம் பெண் இல்லையே!"

மால்வா அவனை முறைத்துப் பார்த்து, குறும்புத்தன மாகச் சிரித்தாள். பிறகு சிரிப்பை மாற்றிவிட்டு, மனப் பூர்வமாகப் பேசினாள்:

"ஒரு காலத்திலே எனக்கும் ஒரு பிள்ளை இருந்தது."

"உதவாக்கரை விஷயம்... அப்படித்தானே!" என்று சொல்லிக்கொண்டே கடகடவென்று சிரித்தான் யாகோவ்.

"முட்டாள்தனமாகப் பேசாதே!" என்று அவனிட மிருந்து முகத்தைத் திருப்பிக்கொண்டே கண்டித்தாள், மால்வா.

யாகோவ் அடங்கிப்போனான்; உதடுகளை இறுக மூடி, வாய் பேசாதிருந்தான்.

இருவரும் சுமார் அரை மணி நேரம் மௌனமாகவே இருந்தனர்; அந்தப் பொழுதில் இருவரும் தங்கள் ஈரத் துணிகளைச் சூரிய ஒளியில் உலரவிட்டுக்கொண் டிருந்தனர்.

அசுத்தம் நிறைந்து நீண்டு கிடக்கும் குடிசைகளான தங்கள் குடியிருப்புக்களினின்றும், செம்படவர்கள் தூக்கக் கலக்கம் தெளிந்து எழுந்தனர். தூரத்துப் பார்வைக்கு எல்லோருமே ஒன்றுபோல், கிழிந்த உடைகளும், உறை அணியாத கால்களும், பரட்டைத் தலையுமாகவே தோன்றினர்...அவர்களது கரகரத்த குரல் கடற்கரை வரையிலும் வந்து மோதியது. யாரோ ஒரு காலிப்பீப்பாயைச் சுத்தியல் கொண்டு தட்டுவதால், ஒரு பெரிய கொட்டு மேளத்தை முழக்கிய மாதிரி குமைந்த சப்தம் மிதந்து வந்தது. இரண்டு பெண்கள் கீச்சுக் குரலில் சண்டை பிடித்தனர். ஒரு நாய் குலைத்தது...

"அவங்க விழிச்சிட்டாங்க. நான் இன்னைக்குக் காத்தாலேயே டவுனுக்குப் போகணும்னு நினைச்சேன். ஆனா, அதுக்குப் பதிலா, இங்கே உட்கார்ந்து உன்னை வட்டம்போட்டுக்கிட்டிருக்கேன்!" என்றான் யாகோவ்.

"நீ என்னை வசப்படுத்தணும்னு பார்த்தா, நீதான் சங்கடப்படுவேன்னு, நான் அப்போதே சொல்லலையா?" என்று பாதிக் கேலியாகவும், பாதிக் கடுமையாகவும் சொன்னாள், மால்வா.

"என்னை ஏன் பயம் காட்டிக்கிட்டே இருக்கே?" என்று வியந்துபோய்க் கேட்டான் யாகோவ்.

"என் வார்த்தையைக் கேளு. இதைப்பத்தி உன் அப்பா கேள்விப் பட்டவுடனே........"

தன் தகப்பனின் பேச்சை எடுத்ததும், யாகோவுக்குக் கோபம் பொங்கியது.

"எங்க அப்பாவுக்கு என்னவாம்? அவர் கேட்டா ருன்னே வச்சிக்குவோம்! என்ன நடந்திரும்? நான் ஒண்ணும் சின்னப் புள்ளையில்லே...எனக்கு என்னமோ அவர்தான் எசமானன்னு நினைச்சிக்கிட்டிருக்கார். ஆனா, அவர் என்னை ஒண்ணும் அதிகாரம் பண்ணமுடியாது. நாங்க ரெண்டு பேரும் கிராமத்திலே எங்க வீட்டோட இருக்கலே. எனக்குக் கண் ஒண்ணும் குருடும் இல்லே.

அவர் அப்படி ஒண்ணும் முற்றும் துறந்த முனிவரில் லேன்னு எனக்குத் தெரியும். அவர் இஷ்டப்படி இங்கே நடந்துக்கிருர். என் விஷயத்திலேயும் அவர் தலையிட வேண்டாம்!'' என்று கோபமாகப் பேசினுன் யாகோவ்.

மால்வா அவன் முகத்தைக் கேலி பாவத்தோடு பார்த்து விட்டு, குறுகுறுப்போடு கேட்டாள்:

''உன் விஷயத்திலே தலையிடக் கூடாதா? நீ என்னதான் செய்யணும்னு நினைச்சிருக்கே?''

''நானு?'' என்று கேட்டான் யாகோவ். அவனது கன்னங்கள் புடைத்தன; ஏதோ கனமான பாரத்தைத் தூக்குவதுபோல நெஞ்சு முன்தள்ளி நிமிர்ந்தது. பிறகு, ''நான் என்ன செய்ய நினைச்சிருக்கேன்னுதானே கேட்டே? ரொம்ப ரொம்ப செய்யப் போறேன்!...அட எழவே, இந்தக் காற்று ஊர்க்காட்டு மண்ணையெல்லாம் எம்மேலே வீசியெறியுது! இரு, சொல்றேன்.''

''சீக்கிரம்!'' என்று கிண்டலாகக் கேட்டாள், மால்வா.

''நான் என்ன செய்யப் போறேன்! என் அப்பனிட மிருந்து உன்னை நான் தட்டிப்பிடுங்கப் போறேன். பந்தயம் வேணுமானுலும் கட்றேன்.''

''சரி. எல்லாம் சொல்றதுதானே மிச்சம்?''

''நான் என்ன பயந்தாங்கொள்ளின்னு நினைச்சியா?''

''இ...ல்...லே?''

''இங்கே பாரு'' என்று அழுத்தமாகப் பேச ஆரம்பித்தான் யாகோவ்: ''என்னைக் கிண்டிவிடாதே? விட்டே'ன்னு, அப்புறம் நான்.........''

''என்னது?'' என்று அமைதியாகக் கேட்டாள் மால்வா.

''ஒண்ணுமில்லே!''

அவன் தன் முகத்தை அவளிடமிருந்து திருப்பிக் கொண்டான்; வாய் பேசவில்லை: என்ருலும் தன்னம்பிக்கையும் தைரியமும் நிறைந்து தோன்றினுன்.

"உனக்குத் தைரியம் இருக்கா? இங்கே இருக்கிற ஏஜெண்டிடம் ஒரு கறுப்பு நாய்க்குட்டி இருக்கு. நீ அதைப் பார்த்திருக்கியோ? அதுவும் உன்னைப்போலத்தான். ஆள் தூரத்திலே இருந்தா, அது குலையாக் குலைச்சிக் கடிக்க வர்றது மாதிரி பயமுறுத்தும். பக்கத்திலே போன வுடனே வாலைக் காலுக்குள் இடுக்கிக் கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடிப்போயிடும்!'' என்றாள் மால்வா.

"ரொம்ப சரி. பொறுத்துப் பாரு. நான் எப்படிப் பட்ட ஆளுன்னு உனக்குக் காட்டறேன்'' என்று கோபத் தோடு சொன்னான் யாகோவ்.

மால்வா அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

நெட்டையும் ஒல்லியுமாக வளர்ந்து, பதப்பட்டுப் போன முகமும், பரட்டையாகச் சிலிர்த்து அடர்ந்திருக்கும் செம்பட்டை மயிரும் கொண்ட ஒரு மனிதன், அவர்களை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி வந்தான். பெல்ட் கூட மாட்டாமல் அவன் போட்டிருந்த சிவந்த சட்டைத் துணி முதுகுப் புறத்தில் கழுத்துப்பட்டி வரைக்கும் கிழிந்து போயிருந்தது. சட்டையின் கைகள் நழுவி விழாதபடி அவற்றைத் திரைத்து புஜத்துக்கு மேலாகச் சுருட்டி வைத்திருந்தான். அவன் போட்டிருந்த நிஜாரோ கிழிந்த கந்தைத் துணிகளின் ஒட்டுத் தையல்கள் பலபட நிறைந்த தாகத் தோன்றியது. அவன் கால்களில் எதுவும் அணிய வில்லை. முகம் பூராவும் ஒரே தேமல்; அவனது அகன்ற நீலக் கண்கள் குரூரமாக ஒளிவீசின. அகன்று மேல் நிமிர்ந்த மூக்கு சில்லாரித்தனமான ஒரு தோற்றத்தைத் தந்தது. அங்கு வந்ததும் அவன் நின்றான். அவனது சட் டைத் துணியிலிருந்த கந்தல்களின் வழியாகத் தெரியும் அவன் உடம்பு சூரிய ஒளியில் பளபளத்தது. அவன் பல மாகத் தும்மினான். பிறகு அவர்கள் இருவரையும் கூர்ந்து பார்த்துக் கொண்டான்; அவன் முகத்தில் வேடிக்கை பாவம் குடிகொண்டது.

"செர்யோஸ்கா நேத்து இரண்டு மூன்று தடவை குடித்துவிட்டான்! இன்னைக்கு அவன் பாக்கெட் அடிப்பாக

யில்லாத கூடை மாதிரி ஓட்டை ஆயிட்டுது'' என்றான் அவன். பிறகு, ''எனக்கு ஒரு இருபது *காபெக்குகள் கடன் கொடு. ஆனா, நான் அதைத் திருப்பித் தரப்போற தில்லேன்னு நீ நிச்சயமா தெரிஞ்சிக்கோ......'' என்றான் அவன்.

அவனது பொறுப்பற்ற பேச்சைக் கேட்டு, யாகோவ் வாயாரச் சிரித்தான்; அந்தக் கந்தல் உருவத்தை மால்வா புன்னகைத்துக் கொண்டே பார்த்தாள்.

''ஏ, பிசாசுகளே! நான் சொல்றதைக் கேளுங்கோ! இருபது காபெக்குகள் தந்தால், உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். உங்களுக்குக் கல்யாணம் வேண்டாமா?'' என்று கேட்டான் அவன்.

''ஓஹோ! ஏ, கோமாளி! நீ என்ன பாதிரியோ?'' என்று லேசாகச் சிரித்துக்கொண்டே கேட்டான் யாகோவ்.

''முட்டாள்! யூக்லிச்சிலே நான் ஒரு பாதிரியாரிடம் தர்வான் வேலே பார்த்திருக்கேன் தெரியுமா? சரி, முதல்லே இருபது காபெக்கைக் குடு!''

''எனக்குக் கல்யாணம் வேண்டாம்!'' என்றான் யாகோவ்.

''பரவாயில்லே—பணத்தைக் குடு! நீ உன் அப்பனுடைய வைப்பாட்டியைச் சுத்திக்கிட்டிருக்கேன்னு, உன் அப்பனிடம் சொல்லமாட்டேன்'' என்று சொல்லிவிட்டு, செர்யோஸ்கா தன் உலர்ந்து காய்ந்து வெடித்துபோன உதடுகளை நக்கிக்கொண்டான்.

''நீ போய்ச் சொன்னால், அவர் ஒண்ணும் நம்ப மாட்டார்!''

''நான் சொன்னால், நம்பத்தான் செய்வான்...அப்புறம் உன்னை நொறுக்கித் தள்ளிட மாட்டானா?''

''அதுக்கொண்ணும் நான் அஞ்சலே!''

---

* காபெக்: ருஷ்ய நாணயம். (சுமார் 2 அணா)

"அப்படீன்னு, நானே உன்னை நொறுக்கித் தள்றேன்" என்று தன் கண்களை நெரித்துக்கொண்டே சொன்னான் செர்யோஸ்கா.

யாகோவுக்கு அந்த இருபது காபெக்குகளைக் கொடுப்பதற்கு மனசில்லை; என்றாலும், செர்யோஸ்காவுடன் சண்டை பிடிப்பது தப்பென்றும், அவன் இஷ்டத்துக்குப் பணிந்து போவதுதான் நல்லதென்றும் பிறர் அவனுக்கு எச்சரித்திருந்தார்கள். மேலும் அவன் ஒன்றும் அப்படி அதிகப்படியாய் எதுவும் கேட்டுவிடவில்லை. அதை கொடுக்கவில்லையானால், அவன் ஏதாவது குறும்பு செய்யவே முனைவான்; அல்லது காரண காரியமற்றுத் தன் எதிரியை உதைத்துத் தள்ளிவிடுவான். யாகோவுக்கு அந்த எச்சரிக்கை ஞாபகம் வந்ததும், பாக்கெட்டுக்குள் பெருமூச்சுடன் கைவிட்டான்.

"அதுதான் ரொம்ப சரி" என்று உற்சாகப்படுத்திக்கொண்டே அவன் பக்கத்தில் மணலில் உட்கார்ந்தான் செர்யோஸ்கா. "நான் சொல்றபடியே எப்போதும் கேட்டா, நீ மகா புத்திசாலியாயிடுவே" என்று சொல்லிவிட்டு, மால்வாவின் பக்கம் திரும்பி, "உன்னையும் தான்! நீ சீக்கிரம் என்னைக் கலியாணம் பண்ணிக்கப் போறியா, இல்லையா? சீக்கிரமா முடிவு பண்ணு, நான் ரொம்ப நாள் காத்துக்கிட்டிருக்க விரும்பலே!" என்று சொன்னான்.

"நீ யாரு? வெறும் கந்தல் மூட்டையைத் தவிர, வேறு யாரு நீ? முதலில் உன் துணி மணியிலுள்ள ஓட்டையை யெல்லாம் தச்சிட்டு வா. அப்புறமா கல்யாணத்தைப் பத்திப் பேசலாம்" என்றாள் மால்வா.

செர்யோஸ்கா தன் உடைகளிலுள்ள கிழிசல்களைக் கூர்ந்து கவனித்து, தலையை யாட்டிக்கொண்டே சொன்னான்:

"நீ உன் சட்டைகளிலே ஒண்ணைக் கொடுத்து உதவினால் ரொம்ப நல்லது!"

"என்னது?" என்று கேட்டாள் மால்வா.

"ஆமாம், அதைத்தான் கேட்டேன். உபயோக மில்லாதது, பழைய சட்டை உன்னிடம் இருக்குதா, இல்லையா?"

"நீ ஒரு சோடி நிஜார் வாங்கிக்கோயேன்" என்று உப தேசித்தாள் மால்வா.

"ஆனு அதைவிட, அந்தப் பணத்துக்கு இன்னொரு தடவை குடிக்கலாமே!"

"நீ அதைத்தான் செய்யி!" என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு, நாலு ஐந்து காபெக் நாணயங் களைக் கையில் எடுத்தான் யாகோவ்.

"ஆமாம். ஏன் செய்யக்கூடாது? பாதிரியார் என் னிடம் என்ன சொன்னர் தெரியுமா? ஒரு மனுஷன் தன் ஆத்மாவைத்தான் கவனிக்கணுமே ஒழிய, கேவலம் இந்தச் சடலத்தைக் காப்பாற்றக்கூடாது—அப்படீன்னார். என் ஆத் மாவோ ஓட்கா மதுதான் கேட்கிறது! நிஜார் கேட்கலே! ...இப்போ, நான் நேராகப் போயி குடிக்கத்தான் போறேன். அத்துடன் உன் அப்பனிடமும் போய், உன் சங்கதி எல்லாத்தையும் சொல்லப் போறேன்!" என்முன் செர்யோஸ்கா.

"சொல்லு போ! என்று கையை ஆட்டிக்கொண்டே சொன்னுன் யாகோவ். அத்துடன், மால்வாவைப் பார்த்து கண்ணைச் சிமிட்டி, தோளோடு இடித்துக் கொண்டான். செர்யோஸ்கா இதைக் கவனித்தான். எச்சிலைத் துப்பிவிட்டு, பயமுறுத்தலாகப் பேசினுன்: "இதோ பாரு. உன்னை உதைப்பேன் என்று சொன்னேனே, அதை ஒண்ணும் நான் மறந்திட மாட்டேன்......நேரம் கிடைச்சபோது, உன்னை யைப் புடைக்காமப் போகமாட்டேன்!"

"எதுக்காக?" என்று உள்ளுக்குள் பயந்துபோய்க் கேட்டான் யாகோவ்.

"எதுக்குன்னு எனக்குத் தெரியும்..." என்று சொல்லி விட்டு மால்வாவிடம் திரும்பி, "சரி, என்னைச் சீக்கிரம் கல்யா

ணம் பண்ணிக்கப் போறியா இல்லையா ?'' என்று கேட்டான்.

'' சரி, நம்ம ரெண்டுபேரும் கல்யாணம் பண்ணி, என்ன பண்ணனும்'னு சொல்றே ? நாம் எப்படி வாழ்றது ? முதல்லே அதைச் சொல்லு. அப்புறம் அதைப்பத்தி நான் யோசிக்கிறேன் '' என்று பதில் சொன்னாள் மால்வா.

செர்யோஸ்கா கடலை வெறித்துப் பார்த்தான்; கண்களை நெரித்தான்; உதடுகளை நக்கினான். பிறகு பேசினான் :

''நாம் ஒண்ணுமே செய்யவேண்டாம். குஷாலாக இருந்தாப் போதும் !''

'' அதுக்கு பணச்செலவுக்கு எங்கே போறது ?''

'' அது கிடக்கு !'' என்று தன் கையைக் கசப்புணர்ச்சியோடு வீசிக்கொண்டே பேசினான் செர்யோஸ்கா :

'' நீ என்ன, என் கிழட்டுத் தாய்மாதிரி விவகாரம் பேசுறே ?—என்ன ? எங்கே ? எப்படி ? அப்படீன்னு அதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்?...சரி, நான் போய் குடிச்சிட்டு வாரேன் !''

அவன் அங்கிருந்து எழுந்து சென்றான். தன் உதட்டில் குறுநகை குமிழிட, அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தாள் மால்வா. யாகோவ் அவனை வெறுப்போடு அடிக்கடி பார்த்துக்கொண்டான்.

'' இவன் ஒரு நீங்காத தொல்லை ! இல்லையா ?'' என்று செர்யோஸ்கா குரலெட்டும் தூரத்துக்கு அப்பால் போனதும் சொன்னான் யாகோவ்.

'' இவன் மட்டும் எங்க கிராமத்திலே இருந்தா இவன் சேட்டையை எல்லாம் ஒடுக்கி இருப்பாங்க......இவனுக்கு நல்லா உதை கொடுத்து, இவன் குறும்பையெல்லாம் நிறுத்தி இருப்பாங்க. ஆனா, இங்கே எல்லோரும் இவனைக் கண்டு பயந்து சாகிறாங்க.''

மால்வா அவனை ஏறிட்டுப் பார்த்து, இறுகியிருந்த தன் பற்களைத் திறவாமலே பேசினாள்.

"ஏ, நாய்க்குட்டி! அவன் விஷயம் உனக்குத் தெரியாது!"

"என்னத்தைத் தெரிஞ்சிக்கணுமாம்? இவன் அஞ்சு காபெக்கு பொறுவான். அதிலும் மொத்தமா நூறுக் கிடைச்சிட்டா?"

"நீ பேசத்தானே செய்வே. நீதான் அவ்வளவுக்குச் சமானம்? ஆனு, அவன் எங்கெங்கே யெல்லாம் போயிருக் கான் தெரியுமா? உலகமெல்லாம் சுத்தியிருக்கானே! யாரைக் கண்டும் பயப்படமாட்டானே!" என்ருள் மால்வா.

"நான்மாத்திரம் பயப்படுகிறேனே?" என்று பெருமை யோடு கேட்டான் யாகோவ்.

மால்வா அவனுக்குப் பதில் சொல்லவில்லை. ஆனுல், கடற்கரையை நோக்கிப் பாய்ந்து, தோணிமீது மோதிச் சாடும் அலைகளையே பார்த்துக்கொண் டிருந்தாள். தோணி யின் பாய்மரம் அங்குமிங்கும் ஆடியது; முகப்பு உயர்ந்து உயர்ந்து தாழ்ந்தது. ஏதோ விரக்தியோடு சாய்வதுபோல் தண்ணீர் தெறித்து விழுந்தது. அதைப் பார்த்தால், அந்தத் தோணி, கரையில் கிடக்க விரும்பாமல் அகண்டமான பசிய சமுத்திரப் பிரவாகத்தில் பாய்ந்துவிடத் தயாராயிருப்பது போலவும் இருந்தாலும் தன்னைக் கட்டிப்போட்டிருக்கும் கம்பிக் கயிறு நெகிழ விடாமல் தடுப்பதால், கோபம் கொள் வதுபோலவும் தோன்றியது.

"சரி, நீ ஏன் போகாமலே இருக்கே?" என்று கேட் டாள் மால்வா.

"எங்கே?" என்று பதிலுக்குக் கேட்டான் யாகோவ்.

"நீ டவுனுக்குப் போகணும்னு சொல்லலே?"

"நான் போகமாட்டேன்!"

"அப்படின்னு, உன் அப்பாவிடம் போ!"

"நீ என்ன பண்ணப்போறே?"

"என்னைப்பத்தி உனக்கென்ன?"

'' நீயும் போகப்போறியா ?''

'' இல்லே !''

'' அப்படின்னு நானும் போகலே !''

'' நீ என்ன நாள் முச்சூடும் என் பக்கத்திலே தொத்திக்கிட்டே இருக்கப்போறியா ?'' என்று அமைதியுடன் கேட்டாள் மால்வா.

'' ஆமாம். அப்படித்தான். எனக்கு நீ ரொம்ப ரொம்ப அவசியமில்லே !'' என்று ஏளனத்தோடு சொல்லிக் கொண்டே அவன் எழுந்து கோபத்தோடு புறப்பட்டான்.

அவளை அவன் விரும்பவில்லை என்று சொன்னது உண்மையில் அவனது தவறுதான். அவளில்லாமல் அவனுக்கு எல்லாமே மந்தப்பட்டுத் தோன்றின. அவளோடு அவன் பேசியதிலிருந்து, ஒரு விபரீத உணர்ச்சி அவனுடம்பில் குடியேறி இருந்தது. தன் தந்தைக்கு எதிராக, அவரது பிரியத்துக்கு மாறாக ஒரு மங்கிய வெறுப்புணர்ச்சி தலைதூக்கியது. அன்றுவரை அந்த உணர்ச்சியை அவன் உணரவில்லை. அன்றைய தினத்தில் மால்வாவைச் சந்திப்பதற்கு முன்னால்கூட அவ்வுணர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் இப்போதோ தன் தந்தை எங்கோ தூரந் தொலைவில், ஒரு சிறு நிலப் பிராந்தியத்தில் இருந்தபோதிலும், அவர் தனக்கு ஒரு முட்டுக்கட்டைபோல் இருப்பதாகத் தோன்றியது. மேலும் மால்வாவும் தன் தந்தையைப் பார்த்துப் பயப்படுவதாகத் தோன்றியது. அவள் மட்டும் எதைப்பற்றியும் பயப்படாமலிருந்தால் அவளுக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பே வேறுமாதிரியாயிருக்கும்.

அவன் மீன் பண்ணைமுன் உலாவித் திரிந்து அங்குள்ள மக்களைக் கவனித்துக்கொண்டிருந்தான். செர்யோஸ்கா ஒரு குடிசை நிழலில் கவிழ்த்துப் போட்ட பீப்பாயின்மீது உட்கார்ந்திருந்தான். கையில் ஒரு தந்தி வாத்தியத்தை வைத்து மீட்டிக்கொண்டும், முகத்தைக் கோணல் மாணலாக வலித்துக்கொண்டும் அவன் பாடிக்கொண்டிருந்தான்.

தாளுக்காரா ! தாளுக்காரா !
தயவுசெய்வாய் தாளுக்காரா !
ஆளுனப் போதை யானேன் !
அழைச்சிப் போவாய் டேசனுக்கு !

அவனைச் சுற்றிப் பலபேர் நின்றுகொண் டிருந்தார்கள். அவனைப்போலவே அவர்களும் கந்தலுடைகளையே அணிந் திருந்தார்கள்; எல்லோருடைய உடம்பும் அந்தச் சுற்றுச் சார்பைப்போலவே ஒரே கருவாட்டு நெடி வீசிற்று; அழுக் கும் அவலக்ஷணமும் நிறைந்த நாலுபெண்கள் மணலில் உட்கார்ந்து, பெரிய தகரக் கெட்டிலிலிருந்து தேநீர் ஊற்றி அருந்திக்கொண் டிருந்தார்கள். அதிகாலைப் பொழுது நீங் காத அந்த வேளையிலும் மீன்பிடிக்கும் செம்படவன் ஒருவன் நன்ருகக் குடித்துவிட்டு மணலில் புரண்டுகொண் டிருந்தான்; பிறகு, அவன் காலூன்றி எழுந்திருக்க முயன்றும் முடியா மல் தள்ளாடித் தள்ளாடிக் கீழேயே விழுந்தான். எங்கோ ஒரு பெண் கூச்சலிட்டு அழும் சப்தம் கேட்டது. எங்கேயோ ஓர் உடைந்துபோன ஆர்மோனியத்தின் கர்ண கடூரமான ஸ்வரநாதம் கேட்டது. எங்கு பார்த்தாலும், மீன் செதில் கள் மினுங்கிக்கொண் டிருந்தன.

மத்தியான வேளை வந்ததும், பல காலிப் பீப்பாய்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தில் நிழல் தேடிக்கொண் டான், யாகோவ்; அங்கேயே படுத்து மாலைநேரம்வரை நன் ருகத் தூங்கிவிட்டான். விழிப்புத் தட்டி அவன் எழுந் திருந்தவுடன் மீன் பண்ணையில் அங்குமிங்கும் உலாவினுன். ஏதோ ஒரு சக்தி எங்கேயோயிருந்து தன்னை இழுப்பதாக ஒரு மங்கிய உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

இரண்டுமணி நேரமாகச் சுற்றித் திரிந்துவிட்ட பிறகு, அவன் மால்வாவைக் கண்டு பிடித்தான். மீன் பண்ணைக்கு வெகுதூரத்திலுள்ள ஒரு சிறு மரத்து நிழலில் அவள் படுத் திருந்தாள். அவள் பக்கவாட்டாகப் படுத்து, கையில் ஏதோ ஒரு பழைய கிழிந்துபோன புத்தகத்தை வைத்திருந் தாள். அவன் வருவதைக் கண்டவுடன் அவள் சிரித்தாள்.

“ இங்கேதானு இருக்கே!” என்று சொல்லிக்கொண்டே அவள் பக்கமாக உட்கார்ந்தான் யாகோவ்.

“ நீ என்னை ரொம்ப நேரமாத் தேடித் திரிஞ்சியா ?” என்று கேட்டாள் மால்வா. அவள் சொன்ன மாதிரியைப் பார்த்தால், அவன் இவ்வளவு நேரமும் அவளைத் தேடித் தான் திரிந்திருக்கவேண்டும் என்ற நம்பிக்கையோடு சொல்வதுமாதிரி இருந்தது.

“ நான் ஒண்ணும் உன்னை தேடித் திரியலே ” என்ருன் யாகோவ். ஆனுல், தன் மனத்தில் எழுந்த அந்த மங்கிய உணர்ச்சியை, அவளைப் பார்ப்பதற்காக அவன் துடித்த துடிப்பை உடனே நினைத்துக்கொண்டான்; எனவே வியப்புடன் தலையை மட்டும் ஆட்டினுன்.

“ உனக்கு படிக்கத் தெரியுமா ?” என்று கேட்டாள் மால்வா.

“ தெரியும்...ஆனு, நல்லாத் தெரியாது. மறந்து போச்சி...”

“ எனக்கும் நல்லாப் படிக்க வராது...ம்...நீ பள்ளிக் கூடத்துக்குப் போயிருக்கியோ ?”

“ ஆமா, கிராமப் பள்ளிக்கூடத்துக்கு ”

“ நான் நானுகத்தான் கத்துக்கிட்டேன் ”

“ அப்படியா ?”

“ ஆமா...நான் ஆஸ்ட்ராகானில், ஒரு வக்கீல் வீட்டிலே சமையல் வேலை பார்த்தேன். அவரோடே மகன் எனக்குப் படிக்கக் கத்துக் குடுத்தான்.”

“ அப்படின்னு, நீயா கத்துக்கல்லே, அப்படித்தானே!”

அவள் அவனை முறைத்துப் பார்த்துவிட்டுச் சொன்ஞள் :

“ உனக்குப் படிக்கிறதுக்கு ஏதாவது புஸ்தகம் வேணுமா ?”

“ எனக்கா ? இல்லை...எதுக்கு ?”

"எனக்குப் படிக்கிறதுன்னு ரொம்பப் பிடிச்சிருக்கு. இங்கே பாரு. நான் ஏஜெண்டோடெ பொஞ்சாதியைக் கேட்டு, இந்தப் புத்தகத்தை இரவல் வாங்கிக்கிட்டு வந்தேன்; வந்து படிச்சிக்கிட்டிருக்கேன்."

"இந்தப் புத்தகம் எதைப்பத்தி?"

"இது அலெக்ஸி சாமியாரைப் பத்தி."

பிறகு அவள் ரொம்பவும் கவனத்தோடு அவனுக்குக் கதை சொல்ல ஆரம்பித்துவிட்டாள். எப்படி ஒரு பணக்காரக் குடும்பத்துச் செல்லமான சின்னப்பையன் வீட்டை விட்டு வெளியேறி, வாழ்வின் சொத்துச் சுகத்தையெல்லாம் துறந்து போனான் என்றும், பிறகு ரொம்பநாள் கழித்து, கந்தலும், கிழிசலும் நிறைந்த ஆடைகளோடு திரும்பினான் என்றும், திரும்பி வந்து தன் வீட்டு முற்றத்திலேயே தான் சாகும்வரை, தன் தாய் தந்தையர்கள் தன்னை அடையாளம் காணாதவாறு, அங்கிருந்த நாய்களுடனேயே வாழ்ந்தான் என்றும் அவள் சொல்லி முடித்தாள். பிறகு அவள் யாகோவைப் பார்த்துக் கேட்டாள்:

"சரி, அவன் ஏன் இப்படிச் செய்தான்? சொல்லு!"

"யாருக்குத் தெரியும்?" என்று கொஞ்சம் கூடக் கவலையற்று விறைப்பாகச் சொன்னான் யாகோவ்.

கடற்கரை மணற் குன்றுகள் காற்றினால் எழும்பிப் பறந்தன; அவற்றைச் சுற்றி அலைகள் வளைந்து தாவின. தூரத்திலிருந்து, குழம்பிப்போய் அடையாளம் காணமுடியாத குரல்கள் அவர்கள் பக்கமாக மிதந்து வந்தன. அவையெல்லாம் மீன் பண்ணைகளில் செம்படவர்கள் நடத்தும் கூத்தாட்டக் கூச்சலாகத் தானிருக்கும். சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்தது; அதன் சந்தியா ஒளிக் கிரணங்கள் மணல் வெளிக்குச் சிவந்த மெருகு வண்ணம் ஊட்டின. குத்துக் குத்தாக வளர்ந்திருந்த கடற்கரை மரத்தின் கிளைகளிலுள்ள இலைகள் கடலிலிருந்து வீசிய இளங் காற்றினால் மெதுவாக அசைந்தாடின. மால்வா மௌனமாயிருந்தாள்; அவள் எதையோ கூர்ந்து கேட்டுக்கொண்டிருப்பது மாதிரி இருந்தாள்.

" நீ ஏன் இன்று திடல் மேட்டுக்குப் போகலே?'' என்று மால்வாவைப் பார்த்துத் திடீரெனக் கேட்டான் யாகோவ்.

" அதைப் பத்தி உனக்கென்ன கவலே ?''

தன் கடைக்கண் ஓரத்தால், அவளேத் தாகத்தோடு பார்த்தான் யாகோவ்; தான் சொல்லத் துடிப்பதை எப் படிச் சொல்வது என்று முயன்றுகொண் டிருந்தான் அவன்.

" நான் தன்னந்தனியா இருந்து, சுத்திச் சூழவும் இந்த மாதிரி அமைதியாகவும் இருந்தால்'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள் மால்வா :

" அப்படியிருந்தா, நான் அழணும்னு நினைப்பேன்... இல்லேன்னு பாடணும்னு நினைப்பேன். ஆனு, எனக்கோ நல்ல பாட்டு ஒண்ணுகூடத் தெரியாது. அழணும்னுலும் வெட்கமாயிருக்கு...''

அவள் குரலே யாகோவ் கேட்டான். அந்தக் குரல் மென்மையாகவும், தாழ்ந்தும் இருந்தது. ஆனுல், அவள் பேசிய எதுவும் அவனது இதய யாழின் ஒரு தந்தியைக்கூட மீட்டவில்லே. அதற்குப் பதிலாக, அவள் மீது அவனுக் கேற்பட்டிருந்த ஆசை வெறிதான் கூர்மை பெற்றது.

" இப்போ நான் சொல்றதைக் கேளு '' என்று மெல் லிய குரலில் பேச ஆரம்பித்தான், யாகோவ். அவள் பக்க மாக நெருங்கி உட்கார்ந்தான் ; ஆனுல், அவளே ஏறிட்டுப் பார்க்காமல் மீண்டும் சொன்னுன் :

"நான் சொல்லப்போறதைக் கேளு. நான் இளேஞன்...''

" அத்தோடே முட்டாள் ! படுமுட்டாள் !'' என்று மால்வா குறுக்கிட்டுத் தலேயை ஆட்டிக்கொண்டே பேசினுள்:

" சரி, என்னே முட்டாளென்றே வச்சுக்கோ ? அதனுலே என்ன ?'' என்று மனச் சங்கடத்துடன் எதிர்த்துப் பேசினுன், யாகோவ். " இந்தமாதிரி விஷயத்துக்குக்கூட, ஒருத்தன் புத்திசாலியா யிருக்கணுமா என்ன ? ரொம்ப சரி. என்னே முட்டாள்னுதானே சொல்றே. சொல்லிட்

டுப்போ. ஆறு, நான் சொல்ல வந்தது இதுதான் ; நீ இஷ்டப் பட்டா...''

'' இல்லே, நான் இஷ்டப்படலே.''

'' என்ன ?''

'' ஒண்ணுமில்லே !''

'' இங்கே பாரு, முட்டாள் மாதிரி நடந்துக்காதே '' என்று யாகோவ் கூறிவிட்டு, மெதுவாக மால்வாவின் தோள்களைப் பற்றிப்பிடித்தான் ; '' சொல்றதைப் புரிஞ்சிக்கவாவது...''

'' தூரப்போ, யாஸ்கா !'' என்று கடுமையாகச் சொல்லிக்கொண்டே, அவன் கைகளை உதறியெறிந்தாள்: '' தூரப்போ !''

அவன் எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

'' ரொம்ப சரி, இதுதான் நிலைமையின்னு, அதைப் பத்தி எனக்குக் கவலேயே இல்லே ; உன்னை மாதிரி இங்கே ஆயிரம் பேரு...மத்தவாளை விட, நீ ரொம்ப உசத்தின்னு நினைச்சிக்கிட்டியோ ?''

'' நீ ஒரு நாய்க்குட்டி !'' என்று அமைதியாகச் சொல்லிவிட்டு எழுந்து, தன் உடையில் ஒட்டியிருந்த மணலையெல்லாம் தட்டி விட்டாள், மால்வா.

அவர்கள் இருவரும் ஒருவர் பக்கமாக ஒருவராக நடந்து, மீன் பண்ணையை நோக்கிச் சென்றனர். அவர்கள் மெதுவாகத்தான் நடந்தனர் ; ஏனெனில் அவர்களது பாதங்கள் மணலில் புதைந்துகொண் டிருந்தன.

தன்னுடைய ஆசைக்கு அவளை இணங்க வைத்து விடவேண்டுமென்று யாகோவ் எமப்பிரயத்தனம் செய்தான்; ஆனால், அவளோ அவனைப் பார்த்து நிதானமாகச் சிரித்தாள் ; அவனது வேண்டுகோளை யெல்லாம் கொடுமை நிறைந்த கேலிகள் பேசித் தட்டி முறித்தாள்.

அவர்கள் இருவரும் குடியிருப்பு வட்டாரத்தைச் சமீபிக்கவும், யாகோவ் திடீரென நின்று மால்வாவின் தோள்

களைப் பற்றிப்பிடித்து பற்களைக் கடித்துக்கொண்டே சொன்ஞன்:

"நீ என்னைச் சீண்டி விடுறே... தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறே!...இல்லையா? இப்படி ஏன் பண்றே? ஜாக்கிரதையா நடந்துக்கோ. இல்லேன்னு நீதான் கஷ்டப்படுவே!"

"என்னை விடு, சொல்றேன்" என்று சப்தமிட்டு அவனது கைப்பிடியிலிருந்து திமிறி விடுபட்டு நடக்க ஆரம்பித்தாள் மால்வா.

செர்யோஸ்கா அந்தக் குடியிருப்பின் மூலை திரும்பி வந்துகொண்டிருந்தான்; இருவரையும் கண்டவுடன் அவன் அவர்களை நோக்கி வந்தான். தன் பரட்டைத் தலையைச் சிலுப்பிக்கொண்டு, அசட்டுச் சிரிப்போடு பேசினுன்:

"உலாத்தப் போயிட்டு வர்ரீங்களா? ரொம்ப சரி!"

"நீங்க எல்லாரும் நாசமாப்போங்க! நரகத்துக்குப் போங்க!" என்று கோபத்தோடு கத்திஞள் மால்வா.

யாகோவ் செர்யோஸ்காவின் முன் நின்று அவனை முறைத்துப் பார்த்தான். இருவருக்கும் இடையில் சுமார் பத்துக் காலடி அளவு தூரமிருக்கும்.

செர்யோஸ்காவும் யாகோவை எதிர்த்துப் பார்த்தான். இரண்டு பேரும் ஒரு நிமிஷ நேரம் சண்டைக்குத் தயாராக நிற்கும் காட்டுக் கடாக்களைப்போல ஆடாமல் அசையாமல் முறைத்துப் பார்த்தனர். பிறகு மௌனமாகப் பிரிந்து வெவ்வேறு திசைகளில் பிரிந்து சென்றனர்.

கடல் அமைதியாயிருந்தது. என்ருலும், அந்தி மாலைக் கதிர்களின் செக்கர் பிரவாகத்திஞல் ஒளிபெற்று ஜொலித்தது. குழம்பிப் போன குரல்கள் மீன் பண்ணையில் கலகலத்தன. ஆஞல், அந்தக் கூச்சலையெல்லாம் மிஞ்சி, யாரோ ஒரு பெண் மிதமிஞ்சிய குடிவெறிப் போதையில்

வாய்க்கு வந்தபடியெல்லாம் கூச்சலிடுவதும், பாடுவதும் கடற்கரை வரையில் கேட்டது.

டகரடகா! மகர டகா!
மடனிக்கா! கா! —ஆசை
மடனிக்கா! கா! கா!
குடிச்ச போதைப் புடிச்சித் தள்ளக்
குலைஞ்சி போனேனே ?—நிலை
கலைஞ்சி போனேனே ?—ஆடை
உலைஞ்சி போனேனே ? ...ஓ!...ஓ...

அட்டைப்பூச்சி போன்ற இந்த வார்த்தைகள் கருவாட்டு நாற்றமும் உக்கிரமான நவச்சார நெடியும் வீசும் மீன் பண்ணைகளில் ஒலித்தன ; அதனால் கடலின் நாத சுகம் பாழ்பட்டது.

# 3

உதயகாலத்தின் இளங்கதிரொளியில் அடிவானக் கடல் அமைதியோடு காணப்பட்டது. கடல் மட்டத்தில் முத்தொளி படர்ந்த பஞ்சு மேகங்கள் பிரதிபலித்தன. திடல்மேட்டில் தூங்கு மூஞ்சிச் செம்படவர்கள் மீன் பிடிக்கும் படகில் கயிறு வலைகளை ஏற்றிக்கொண்டிருந்தார்கள்.

மணல்வெளி வழியாக, பழுப்பு நிறமான பெரிய வலையொன்றை இழுத்துச் சென்று படகுக்குள் போட்டனர்; வலை மடிமடியாக மடிந்து படகின் அடியில் விழுந்து கிடந்தது.

செர்யோஸ்கா தலையில் முண்டாசு எதுவும் கட்டாமல் தன் வழக்கமான அரை நிர்வாண உடம்போடு, தோணி முகப்பில் ஏறிநின்று தன் போதை நிறைந்த கரகரத்த குரலில் செம்படவர்களை ஐரூர் படுத்தினான். காற்று அவன் உடையிலுள்ள கிழிசல் துவாரங்களுக்குள் புகுந்து விளையாடியது; செம்பட்டையான பரட்டைத் தலைமயிரைச் சிலுப்பி விட்டது.

"வாஸிலி, அந்தப் பச்சைத் துடுப்புக்கள் எங்கே?" என்று யாரோ கத்தினார்கள்.

வாஸிலி, மூஞ்சியைச் சுழித்துக்கொண்டே, படகுக்குள் வலையைக் குவித்துப் போட்டுக்கொண்டிருந்தான்; செர்யோஸ்கா தன் உதடுகளை நக்கிக்கொண்டே, வாஸிலியின் கூனிய முதுகைக் கவனித்துக்கொண்டிருந்தான். அவன் உதட்டை நக்கிக்கொடுப்பதன் அர்த்தம், இந்தத் தொல்லையையெல்லாம் ஓட்டுவதற்கு ஒருதடவை குடித்துவிட்டு வந்தால் நல்லது என்பதுதான்.

"உன்னிடம் ஓட்கா மது கொஞ்சமாவது இருக்கா?" என்று கேட்டான் அவன்.

"இருக்கு" என்று நிர்விசாரமாய்ச் சொன்னான் வாஸிலி.

“ அப்படின்னு, நான் வேறே எங்கேயும் போகப் போறதில்லே......இங்கேயே இன்னைக்கு முழுதும் தங்கத்தான் போறேன்.”

“ தயார் !” என்று யாரோ கரைமீது நின்று கத்தினார்கள்.

“ அவிழ்த்துவிடு ! நல்ல நேரம் !” செர்யோஸ்கா கட்டலையிட்டு விட்டு, படகை விட்டு வெளியே குதித்தான். “ நீங்க போங்க, நான் இங்கே தங்கப்போறேன். வலையை அகலமாக விரிச்சி வீசுங்க; சிக்கல் விழாமே பாத்துக்கிடுங்க. மடிக்கையிலேயும் ஒழுங்கா மடியுங்க. சுருக்காங்கண்ணியை முடிஞ்சி வைக்காதிங்க ” என்றெல்லாம் அந்தச் செம்படவர்களுக்கு ஆலோசனை சொன்னான்.

படகைத் தண்ணீருக்குள் இழுத்து விட்டு, செம்படவர்கள் அதில் ஏறிக்கொண்டனர். பிறகு துடுப்புகளை எடுத்துக் கைகளில் தாங்கி, புறப்படச் சொல்லும் உத்திரவுக்காகக் காத்திருந்தனர்.

“ ஒண்ணு !”

துடுப்புகள் தண்ணீரில் ஒன்று போல் மோதின. படகு கடலின் அகண்ட பரப்பில் பாய்ந்தது; அப்போது அடிவானத்தில் உதயஒளி மேலே கிளம்பிவிட்டது.

“ இரண்டு !” என்று படகின் தலைவன் உத்தரவிட்டான் ; உடனே மீண்டும் துடுப்புகள் உயர்ந்து படகின் இருபக்கங்களிலும் ஒரு பெரிய ஆமையின் பாதங்களைப் போல் வீசித்தள்ள ஆரம்பித்தன :

“ ஒண்ணு, ரெண்டு !...”

கடற்கரையில் காயப் போட்டிருந்த வலையின் பக்கமாக ஐந்துபேர் நின்று கொண்டிருந்தார்கள். செர்யோஸ்காவையும், வாஸிலியையும் தவிர, வேறு மூவர் நின்றனர். அவர்களில் ஒருவன் மணலில் உட்கார்ந்துகொண்டே பேசினான்.

"எனக்கு இன்னம் கொஞ்ச நேரம் தூங்கி எழுந்திருக்கணும் போலிருக்கு!"

அவனை வேறு இருவர் பின்பற்றினர். மூவரும் அழுக்கடைந்த கந்தல் துணிகளையணிந்து, மணல் வெளியிலே முடங்கிப் படுத்துக் கிடந்தனர்.

"நீ ஏன் ஞாயிற்றுக்கிழமை யன்னிக்கு வரலே?" என்று செர்யோஸ்காவைப் பார்த்துக் கேட்டான் வாஸிலி. இருவரும் அப்போது குடிசைக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

"என்னாலே வர முடியலே!"

"ஏன்? குடிச்சிட்டுக் கிடந்தியா?"

"இல்லே, உன் மகன் மேலே ஓர் கண்ணு வச்சிருந்தேன். அவனோட சித்தி இருக்காளே—அவள் மேலேயும் தான்" என்று அமைதியாகச் சொன்னான் செர்யோஸ்கா.

"இருந்திருந்து உனக்குன்னு ஒரு அருமையான சோலி கண்டு பிடிச்சயே!" என்று கேலியாகப் புன்னகை செய்து கொண்டே கேட்டான் வாஸிலி. "அவர்கள் என்ன சின்னக் குழந்தைகளா?"

"அதைவிட மோசம்...அவர்களில் ஒண்ணு முட்டாள், மற்றது...முனி!"

"என்ன? மால்வா ஒரு முனியா?" என்று தன் கண்களில் கோபம் தெறிக்கக் கேட்டான்: "அவள் அப்படி எத்தினி காலமா இருக்கா?"

"அவள் ஆத்மா உடம்புக்கு ஏற்றதாயில்லே, தம்பி!"

"அவள் ஒரு குறும்புத்தனமான ஜீவன்தான்!"

செர்யோஸ்கா ஓரக்கண்ணால் வாஸிலியைப் பார்த்துக் கொண்டே, ஏளன பாவத்துடன் செருமினான்:

"குறும்புத்தனமா?...நீ ஓர் அசட்டுக் கோமாளி! உனக்கு ஒண்ணுமே தெரியாது...ஒரு பொம்பிளையிடம்

உனக்குத் தேவையான தெல்லாம், அவளுக்கு கொழுத்த மார்பகக் காம்பு இருக்கிறதா என்பதுதான்...அவள் குணத்தைப் பற்றி உனக்குக் கொஞ்சம்கூட அக்கறையில்லை... ஆனா, பொம்பிளையிடம் ரொம்பக் கவர்ச்சியானது அவளது குணம்தான்...நல்ல குணம் இல்லாத பொம்பிளை உப்பில்லாத ரொட்டிக்குத்தான் சமானம்...தந்தியில்லாத பிடிலை வச்சி, என்ன சுகத்தை மீட்ட முடியும்?...அசடு! அசடு!''

''அடே போப்பா! நேத்துக் குடிச்ச வெறியிலே இன்னமும் நீ என்ன அழகாப் பேசுறே?'' என்று சொன்னான் வாஸிலி.

ஆனால், உண்மையில் அவனுக்கு மால்வாவையும் யாகோவையும் செர்யோஸ்கா எங்கே வைத்துப் பார்த்தான்; அப்போது அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்றெல்லாம் கேட்கவே துடித்தான். இருந்தாலும் வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்றது.

குடிசைக்குள் நுழைந்ததும் ஒரு தம்ளர் நிறைய வட்கா மது ஊற்றி செர்யோஸ்காவுக்குக் கொடுத்தான். அந்த மதுவைக் குடித்தால், அவன் நாக்கு பொறுப்பிழந்து அவர்கள் இருவரது விஷயத்தையும் தாராளமாகச் சொல்ல ஆரம்பித்துவிடும் என நம்பினான்.

ஆனால் செர்யோஸ்கா தம்ளரைக் காலி செய்துவிட்டு, முனகினான்; போதை உண்டாயினும், நிதான புத்தியைத் தவற விடாமல் குடிசைத் தரையில் உட்கார்ந்து, கால்களைப் பரப்பி நீட்டிக்கொண்டு கொட்டாவி விட்டான்.

''இந்த மாதிரிக் குடிப்பது நெருப்பை விழுங்குற மாதிரிதான்'' என்றான் அவன்.

''உன்னாலே குடிக்க முடியாது?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் வாஸிலி. செர்யோஸ்கா ஒரே மடக்கில் ஒரு தம்ளர் மதுவையையும் குடித்துத் தீர்த்த வேகத்தைக் கண்டு ஏற்கெனவே அவன் அதிசயித்துப் போயிருந்தான்.

''ஆமா, என்னாலே முடியும்!'' என்று தன் சிவந்த தலையை ஆட்டிக்கொண்டும், உள்ளங் கையால் ஈர மீசை

யைத் துடைத்துக்கொண்டும் சொன்னன், செர்யோஸ்கா: "என்னலே முடியும், தம்பி! நான் எல்லாத்தையும் விரைவாத்தான் செய்வேன். அப்படி இப்படி என்று இழுத்தடிக்காமல், தொட்டவுடனே ஒரே மூச்சிலே முடிச்சிருவேன். நேராக் கதிக்கப்போ—அப்படிங்கிறது தான் என் கொள்கை! எங்கே போறேம் என்பதைப்பத்தி நமக்கென்ன கவலே? நாம் எல்லோரும் ஒரே வழியிலேதான் போயாகணும். மண்ணிலே பிறந்து, மண்ணேடுதான் போகணும். அதிலிருந்து தப்பிக்க முடியுமா? முடியவே முடியாது!"

"நீ காகஸசுக்கு போகணும்னு விரும்பலே: விரும்பினயா, இல்லேயா?" என்று மிகவும் ஜாக்கிரதையாகத் தன் விஷயத்துக்குப் பேச்சைத் திருப்பினன் வாஸிலி.

"எனக்குப் போகணும்னு எப்போ தோணுதோ, அப்போ போவேன். போகணும்னு தோணிட்டுதோ, உடனே நேராப் போயிடுவேன். ஒண்ணு! ரெண்டு! மூணு! அவ்வளவுதான், புறப்பட்டாச்சி! நான் போனலும் போவேன்; இல்லாட்டி என் தலேயிலே ஏதாவது பெரும்பாரமா விழுந்தாலும் விழும்...எல்லாம் ரொம்பச் சாதாரணம்!"

"இதைவிடச் சாதாரணமா எதுவும் இருக்க முடியாது. நீ உன் மூளேயை உபயோகிக்காமலேயே பிழைப்பு நடத்துறியே!" என்ருன் வாஸிலி.

குறும்புக் கண்களால் வாஸிலியைப் பார்த்துக் கொண்டே பேசினன் செர்யோஸ்கா.

"நீ பெரிய புத்திசாலின்னு நினேச்சுக்கிட்டிருக்கே. அப்படித்தானே! நீ எத்தனே தடவை போலீஸ் டேசனிலே உதை பட்டிருக்கே!"

வாஸிலி செர்யோஸ்காவை முறைத்துப் பார்த்தான்; ஆனல் பதில் பேசவில்லே.

"உன் முதுகிலே கொடுக்கிற உதைமூலம் உன் மூளேயிலே போலீசார் புத்தியைச் செலுத்துறது ரொம்ப நல்ல

காரியமோ ?...நீயும் பேசுறியே ! உன் மூளையை வச்சி என்ன பண்ணிடுவே ? அது உன்னை எங்கே கொண்டு போய் விடும்னு நினைச்சிப் பார்த்திருக்கியா ? அதை வச்சி என்னத்தைத்தான் நினைச்சிப்பார்க்கிறது ? நான் சொல்றது சரிதானே ! ஆனா, நானோ மூளையை உபயோகிக்காமலேயே வாழுத்தான் செய்றேன். அதனாலே நான் ஒண்ணும் கெட்டுப்போகலே. உனக்குக் கிடைக்கிறதைவிட எனக்கு ஜாஸ்தியாய்த்தான் சுகம் கிடைக்குது. பந்தயம் வேண்டு மானாலும் கட்றேன் '' என்று பெருமை யடித்துக்கொண் டான் முரடன் செர்யோஸ்கா.

"ஆமாமா, உனக்கு கிடைக்குமின்னு நான் நம்பு றேன். *சைபீரியா வரையிலே உனக்குத்தான் கிடைக் கும் !'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான் வாஸிலி.

செர்யோஸ்கா கடகடவென்று வாய்விட்டுச் சிரித் தான்.

வாஸிலி எதிர்பார்த்ததற்கு மாறாக, ஓட்கா மது செர்யோஸ்காவிடம் எந்த வேகத்தையும் உண்டாக்க வில்லை. எனவே, அவன் கோபமடைந்தான். அவன் இன் னொரு கிளாஸ் நிறைய ஓட்கா கொடுத்திருப்பான் ; இருந் தாலும் ஓட்காவின்மீது அவனுக்கு நம்பிக்கையில்லை. செர்யோஸ்கா தெளிவோடிருக்கும் வரை அவனிடமிருந்து எந்த விஷயத்தையும் கறக்க முடியாது...ஆனால் அந்த முரடனே, வாஸிலியாகத் தூண்டி விடுவதற்கு முன் னாலேயே விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்துவிட்டான் :

"மால்வாவைப் பத்தி நீ எப்படி இன்னம் விசாரிக் காமலே இருக்கே ?'' என்று கேட்டான்.

"எதுக்காக விசாரிக்கணும் ?'' என்று கசப்போடு கேட்டான் வாஸிலி. ஆனால், அந்தக் குரலோ அவன்

---

* சைபீரியா அந்தமான் மாதிரி ; 'நாடு கடத்தப் படுவாய்' என்பதைச் சூசகமாகத் தெரிவித்தான்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னால் அறிய நேர்ந்த செய்தியால் நடுக்கம் கொள்ளத்தான் செய்தது.

"போன ஞாயிற்றுக்கிழமை அவள் இங்கே வரலே. அவள் வந்தாளா? இத்தனை நாளா, அவள் என்னதான் பண்ணிக்கிட்டிருக்காள்'னு நீ ஏன் கேட்கலே?...உனக்கு அவ மேலே பொறுமையாயிருக்கு. ஏன் கிழவா, அப்படித் தானே!"

"அவளை மாதிரி எத்தனையோ பேர்!" என்று வெறுப்போடு கையை ஆட்டிக்கொண்டே சொன்னான் வாஸிலி.

"எத்தனையோ பேரா? அட போப்பா! பட்டிக்காட்டுப் பரங்கிக்காய்! உனக்குத் தேனுக்கும் கிலெண்ணெய்க்கும் வித்தியாசமே தெரியாது!" என்றான் செர்யோஸ்கா.

"நீ அவளை ஏன் இவ்வளவு தூரம் பெருமையாச் சொல்றே? நீ என்ன எங்களை ஜோடி சேர்த்து வைக்க வந்தியா? நீ வந்த நேரம் ரொம்பப் பிந்திப் போச்சு! ஜோடி சேர்ந்து ரொம்ப நாளாச்சப்பா" என்றான் வாஸிலி.

செர்யோஸ்கா, வாஸிலியை ஒரு கணம் வாய் பேசாமல் பார்த்தான்; பிறகு அவன் தோள்மீது தன் கையைப் போட்டுக்கொண்டு மனம் விட்டு அந்தரங்கமாகப் பேசினான்:

"அவ உன்னோடுதான் வாழ்கிறாள் என்கிறதும் எனக்குத் தெரியும். அதிலே நான் ஒண்ணும் குறுக்கிடலே—குறுக்கிட அவசியமும் இல்லே...ஆனா, உன் மகன் யாஸ்கா இருக்கானே, இப்போ அவன்தான் அவளைச் சுத்திக் கிட்டிருக்கான். அவனுக்கு சூடா, உறைக்கிற மாதிரி உதை குடு, நான் சொல்றதைக் கேக்கிறியா? நீ கேட்கலேன்னா—நானா குடுத்திருவேன்...நீ ரொம்ப நல்லவன்... ஆனா, நீ மரக்கட்டை மாதிரி உணர்ச்சியற்றுக் கிடக்கிறே. அதுதான் குறை...நான் உன் விஷயத்திலே தலையிடலே... ஆனா, இதை மட்டும் நினைச்சிப்பாரு. அதைத் தான் சொல்றேன்."

"உலகமே அப்படித்தான். இப்போ, நீ கூடத்தான் அவளைச் சுத்திக்கிட்டு திரியிரே, இல்லையா?" என்று மெல்லிய குரலில் சொன்னான் வாஸிலி.

"நானுமா?...நான் நினைச்சா, அவளிடமே நேராப் போயிருவேன். என் வழியிலே நீங்க எத்தனை பேரு குறுக்கிட்டாலும் தூக்கி யெறிஞ்சிட்டுப் போயிருவேன்... ஆனா, என்னாலே அவளுக்கு என்ன பிரயோசனம்?"

"பின்னே நீ ஏன் இந்த விவகாரத்திலே வந்து தலையிடுறே?" என்று சந்தேகத்துடன் கேட்டான் வாஸிலி.

இந்தச் சின்னக் கேள்வி நிச்சயம் செர்யோஸ்காவை வியப்படையச் செய்திருக்கும்; ஏனெனில், அவன் அகலத் திறந்த கண்களோடு வாஸிலியைப் பார்த்தான்; வாய் விட்டுச் சிரித்தான். பிறகு பேசினான்:

"நான் எதுக்கு இந்த விவகாரத்திலே தலையிடணும்? அது சைத்தானுக்குத்தான் தெரியும்...ஆனா, அவ எப்படிப் பட்ட பொண்ணு தெரியுமா? அவளிடம் நிறைய நல்ல குணமெல்லாம் இருக்கு...அவளை எனக்குப் பிடிச்சிருக்கு. சொல்லப்போனா, அவள் தப்பா நடக்கிறதைக் கண்டு எனக்குத்தான் வருத்தமாயிருக்கு!"

வாஸிலி அவனை நம்பிக்கையற்றுப் பார்த்தான்; எனினும், அவன் உள்ளத்தில் ஏதோ ஓர் உணர்ச்சி செர்யோஸ்கா ஒளிவு மறைவில்லாமல் நேர்மையோடு பேசுவதாகச் சொல்லிற்று.

"அவள் இன்னும் கன்னி கழியாத புதுப் பொண்ணானா, நீ அவளுக்காக வருத்தப்படுறதை நான் புரிஞ்சிக்க முடியும். ஆனா அவளே?...அதை நினைச்சாத்தான், வேடிக்கையாயிருக்கு" என்றான் வாஸிலி.

செர்யோஸ்கா, மௌனமாக உட்கார்ந்து, தூரத்தில் கடல்மீது செல்லும் மீன் பிடிக்கும் படகையே பார்த்தான். அந்த அகன்ற கடலில் அந்தப் படகின் முனை கரையை நோக்கித் திரும்பும்போது, ஒரு பெரிய வட்டம்

போடுவதையும் பார்த்தான். அவன் கண்கள் அகன்று நிர்மலமாயிருந்தன; முகம் தெளிவோடும் பரிவோடும் தோன்றியது.

செர்யோஸ்காவை வாஸிலி பார்த்ததுமே மனம் மாறிவிட்டான்; அவன் மீது அனுதாபம் பிறந்தது.

"ஆமா, நீ சொல்றது ரொம்ப சரி. அவள் ரொம்ப நல்ல பொண்ணு...கொஞ்சம் 'ஷோஸ்' தனம் இருக்கு. அவ்வளவுதான். ஆனா, யாஸ்காவைப் பொறுத்தவரை, அவனை நான் வெளுத்து வாங்குறேன்...நாய்க்குட்டிப் பயல்!"

"எனக்கு அவனைப் பிடிக்கலே" என்றான் செர்யோஸ்கா.

"அந்தப் பயல் அவளை வளைக்கப் பார்க்கிறான்'னு சொல்றே?" என்று பற்களைக் கடித்துக்கொண்டும், தாடியைத் தட்டிவிட்டுக் கொண்டும் கேட்டான் வாஸிலி.

"என் பேச்சைக் கேளு. உனக்கும் அவளுக்கும் இடையில் அந்தப் பயல்தான் தலையிடப் போறான்" என்று அழுத்தமாகச் சொன்னான் செர்யோஸ்கா.

விரித்துப் பிடித்த மடக்கு விசிறி போல், அடிவானக் கடலில் சூரிய கிரணங்கள் சடை பரப்பின. தூரத்திலே செல்லும் படகிலுள்ளவர்களின் ஏலேல ஓசை, அலைச் சப்தத்தையும் மிஞ்சி லேசாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

"அஹோய்!...உள்ளே இழு!"

"எழுந்திருங்க பயல்களா! ஏ, வலைக்குப் போங்கடா" என்று சத்தமிட்டான் செர்யோஸ்கா.

படுத்திருந்த மூன்று மனிதர்களும் துள்ளி எழுந்தனர்; பிறகு ஐவரும் வலையை ஆளுக்கொரு மூலையாகப் பிடித்துத் தூக்கினர். உருக்கு மாதிரி வளைந்து கொடுக்கும் நீளக் கம்பி தண்ணீரிலிருந்து தரைவரை நீண்டு கிடந்தது. செம்படவர்கள் அதைத் தம் உடம்பில் சுருள்

சுருளாகச் சுற்றி, முனகிப் பெருமூச்சு விட்டுக்கொண்டே கரைமீது இழுத்துப் போட்டனர்.

இதற்கிடையில், அந்த மீன் பிடிக்கும் படகு அலைகளுக்கு மேலாக மிதந்து தாவி, வலையின் மறுமுனையோடு ஓட்டி வந்தது.

சூரியன் பிரகாசமாகவும், மகோன்னதமாகவும் கடல்மீது எழும்பி உயர்ந்து வந்தது.

"நீ யாகோவைப் பார்த்தால், அவனை நாளை இங்கு வந்து என்னைப் பார்க்கச் சொல்லு" என்று செர்யோஸ்காவை வேண்டிக்கொண்டான் வாஸிலி.

"ரொம்ப சரி!"

படகு கரைக்கு வந்து சேர்ந்தது. செம்படவர்கள் படகிலிருந்து தாவிக் குதித்து, வலையை ஆளுக்கொரு மூலையாகப் பிடித்து உள்ளே இழுத்தனர். இரண்டு கோடியிலும் நின்று இழுத்தவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் நெருங்கி வந்தனர். வலையின் மிதப்புக் கட்டைகள் தண்ணீருக்குள் மூழ்கியும் மூழ்காமலும் மிதந்து, ஒரு அரை வட்டம் போலக் கிடந்தன.

# 4

அன்று மாலை வெகுநேரம் கழித்து, மீன் பண்ணையிலுள்ள செம்படவர்கள் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருக்கும் வேளையில், மால்வா ஓய்ந்து அயர்ந்துபோய், உடைந்து குப்புறக் கவிழ்த்துப் போடப்பட்டிருந்த படகின் மீது அமர்ந்து, இருள் சூழும் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தாள். தூரத்திலே ஒரு வெளிச்சம் மினுமினுத்தது. அது வாஸிலி ஏற்றிய நெருப்புத்தான் என்று மால்வாவுக்குத் தெரியும். கடலின் இருண்ட அந்தகாரப் பரப்பில் சிக்கிக் கொண்ட தன்னந் தனியான ஆத்மாவைப் போல், அந்த வெளிச்சம் பிரகாசமாக எரிவதும், மறுகணம் கவலையால் குன்றுவது மாதிரி மங்குவதுமாக இருந்தது. இடையறாது பொங்கிப் பொருமும் அலை வெள்ளத்துக்கு அப்பால் வற்றி மெலிந்து எரியும் அந்த அத்துவானப் பிராந்தியத்தின் செஞ்சுடரைக் கண்டதும் மால்வாவின் உள்ளத்தில் துக்கம் தோய்ந்தது. திடீரென்று அவள் தனக்குப் பின்னால் செர்யோஸ்காவின் குரல் ஒலிப்பதைக் கேட்டாள்.

"நீ ஏன் இங்கே வந்து உட்கார்ந்திருக்கே?"

"அதைப்பத்தி உனக்கென்ன?" என்று திரும்பிக் கொண்டே கேட்டாள் மால்வா.

"தெரிஞ்சிக்கலாமேன்னுதான்!"

அவன் மேற்கொண்டு பேசவில்லை. அவளை ஏற இறங்கப்பார்த்தான். ஒரு சிகரெட்டைச் சுற்றி எடுத்து, பற்ற வைத்தான். அந்தப் படகின் மீது அவனும் சாய்ந்து உட்கார்ந்தான், பிறகு சிறிது நேரம் கழித்து, அவன் நட்புரிமை தோய்ந்த குரலோடு பேசினான் :

"நீ ஒரு வேடிக்கையான மனுஷி! நீ எல்லோரிடமிருந்தும் ஒரே நிமிஷத்திலே மறைஞ்சும் போறை, மறு நிமிஷம் அத்தனை பேரு கழுத்தையும் கட்டித் தொங்குறே!"

“நான் ஒண்ணும் உன் கழுத்தை கட்டிக்கிட்டுத் தொங்கலே. தொங்கினேனு என்ன?” என்று நிர்விசாரமாகச் சொன்னுள் மால்வா.

“இல்லே, என் கழுத்தைக் கட்டலே. ஆனு, யாஸ்காவோடே கழுத்தைத்தான்!”

“உனக்குப் பொருமையாயிருக்கா?”

“ஹூம்!...நம்ம ரெண்டு பேரும் நேருக்கு நேரா, மனம்விட்டுப் பேசுவோம். சரிதானே!” என்று சொல்லிக் கொண்டே மால்வாவின் தோளில் தட்டிக் கொடுத்தான். அவள் அவனுக்கு, பக்கவாட்டாக அமர்ந்திருந்தாள். எனவே, அவள் கண்டிப்பாகப் பேசியபோது, அவள் முகத்தில் தோன்றிய உணர்ச்சியை அவனுல் கவனிக்க முடியவில்லை.

“ரொம்ப சரி!”

“நீ என்ன வாஸிலியைக் கையைக் கழுவிட்டியா? அதைச் சொல்லு.”

“எனக்குத் தெரியாது” என்ருள் மால்வா. கொஞ்ச நேரம் கழித்து, “அதை நீ ஏன் கேக்கிறே?” என்று கேட்டாள்.

“சும்மாத்தான்.”

“அவன் மேலே எனக்குக் கோபம்!”

“ஏன்?”

“என்னை அடிச்சான்!”

“அதை ஏன் சொல்லலே. அவனு அடிச்சான்? நீ அடிக்கவிட்டியா? ஐயையோ!”

செர்யோஸ்கா அதிசயித்தான். அவளைப் பக்கவாட்டில் பார்த்து, நாக்கைக் கிண்டலாகச் சொட்டிக் கொடுத்துக் கொண்டான்.

“நானு விட்டுக் கொடுக்கலேன்னு, அவனு என்னை அடிக்க விட்டிருக்கமாட்டேன்!” என்று கோபத்தோடு சொன்னுள் மால்வா.

"நீ ஏன் அவனைத் தடுத்து நிறுத்தலே?"

"நான் தடுக்க விரும்பலே!"

"அப்படீன்னு, நீ தலைகால் தெரியாமே, அந்தக் கிழட்டுப் பூனைமீது காதலாயிருக்கேன்னுதான் அர்த்தம்!" என்று கிண்டலாகச் சொல்லிவிட்டு, சிகரெட்டுப் புகையை அவள் முகத்தின் மீது ஊதினான். "எனக்கே ஆச்சரியமாயிருக்கு. நீ இந்த மாதிரி இருப்பேன்னு நான் நினைக்கவே இல்லே!"

"நான் உங்களில் யாரையுமே காதலிக்கலே!" என்று நிர்விசாரமாகக் கூறிக்கொண்டே, கையினால் புகையை விலக்கினாள் மால்வா.

"இது பொய்!"

"நான் எதுக்காகப் பொய் சொல்லணும்?" என்று கேட்டாள், அவள். அவள் குரலின் தொனியைப் பார்த்தால், நிச்சயமாய் அவள் பொய் சொல்லவில்லை என்றே செர்யோஸ்காவின் மனசில் பட்டது.

"அவனை நீ காதலிக்கலேன்னு, உன்னை ஏன் அடிக்க விட்டே?" என்று ஆர்வத்தோடு கேட்டான்.

"எனக்கு எப்படித் தெரியும்?...நீ ஏன் என் உசுரை வாங்கறே?"

"வேடிக்கைதான்!" என்று சொல்லிவிட்டுச் செர்யோஸ்கா தலையை ஆட்டினான்.

இருவரும் கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தனர்.

இரவு சூழ்ந்தது; வானத்தில் மெதுவாக மிதந்து செல்லும் மேகப் படலங்கள் கடல்மீது நிழல்களைப் பரப்பின. அலைகள் முணுமுணுத்துக்கொண்டிருந்தன.

திடல் மேட்டில் எரிந்து கொண்டிருந்த, வாஸிலி மூட்டிய நெருப்பு அணைந்துபோயிற்று. என்றாலும், மால்வா அந்தத் திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்;

செர்யோஸ்காவோ அவளையே பார்த்துக்கொண் டிருந்தான்.

"என்னிடம் சொல்லு பார்ப்போம்! உனக்கு என்ன தான் வேணும்னு உனக்குத் தெரியுமோ?" என்று கேட்டான் அவன்.

"அது மட்டும் எனக்குத் தெரிஞ்சா...!" என்று தணிந்த குரலில் சொல்லிவிட்டு ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள் மால்வா.

"அப்படீன்னு உனக்குத் தெரியாது. இது ரொம்ப மோசம்!" என்று அழுத்தமாகச் சொன்னான் செர்யோஸ்கா; "எனக்கு வேண்டியது எப்போதும் எனக்குத் தெரியும்!" என்று சொல்லிவிட்டு, வருத்தம் தொனிக்கும் குரலில், "இதில் தொல்லை என்னன்னு, எனக்கு எதுவுமே வேண்டியதாயிருப்பதில்லை!" என்று கூறி முடித்தான்.

"ஆனா, எப்போதும் எனக்கு ஏதாவது வேண்டியிருக்கு!" என்று மங்கிய குரலில் பேசினாள் மால்வா: "ஆனால், என்ன வேணும்? அதுதான் எனக்குத் தெரியலே... சமயத்திலே எனக்கு ஒரு படகிலே, இப்படியே கடல்மேலே போகணும்னு தோணும். ரொம்ப ரொம்பத் தூரம் போய், யாரையுமே கண்ணாலே பார்க்க முடியாமப் போயிடணும்னு தோணும்...சில வேளை ஒவ்வொரு மனுசனின் தலையையும் புடிச்சி, அவங்களை என் முன்னால் பம்பரமா ஆட்டி விடணும்னும் தோணும்...அதைப் பார்த்துச் சிரிக்கணும்னு எண்ணுவேன்...சமயங்களிலே அவங்க மேலே எனக்கு அனுதாபம் உண்டாகிவிடும். சமயத்திலே என் மீதே அனுதாபம் உண்டாகும். சில வேளை அவங்க எல்லாரையும் கொன்னு குவிச்சிட்டு, நானும் பயங்கரமாகச் செத்துப்போகணும்னு நினைப்பேன்...சிலவேளை எனக்குத் துக்கமாயிருக்கும். சில வேளை சந்தோசமாயிருக்கும். ஆனா, ஒண்ணு. என்னைச் சுத்தி இருக்கிறவங்க எல்லாம் உணர்ச்சியே இல்லாத வெறும் மரக்கட்டை சென்மங்களாத்தான் தோணுது!"

"நீ சொல்றது ரொம்ப சரி. இந்த சனங்கள் எல்லாம் வெறும் உதவாக்கரை!" என்று ஆமோதித்தான் செர்யோஸ்கா: "எத்தனையோ தடவை உன்னைப் பார்த்து நான் நினைச்சுக்குவேன் தெரியுமா? நீ எதிலேயும் சேர்த்தியில்லாத பிறவி—அப்படின்னு நினைச்சிருக்கேன். ஆனா, இதெல்லாம் போகட்டும், உன்னிடம் ஏதோ ஒரு நல்ல குணம் இருக்கு...நீ மத்தப் பொம்பிளைகளை மாதிரி இல்லே!"

"அதுக்குக் கடவுளுக்கு நன்றி சொல்லு!" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் மால்வா.

அவர்களுக்கு இடது புறத்திலிருந்த மணல் மேட்டுக்கு மேலாகச் சந்திரன் உதயமாகி, தன் வெள்ளிமய நிலாக் கதிர்களைக் கடலில் பொழிந்து கொண்டிருந்தது. வான மண்டலத்தின் நீல விதானத்தில் இங்கிதமும் அகலமும் நிறைந்த நிலாவட்டம் மெதுவாக மிதந்து சென்றது; தாரகைகளின் பிரகாசச் சுடரொளியும் வெளிறி மங்கி, நிலவின் கனவுச் சுகக் கதிரொளி மூட்டத்தில் மறைந்து போயிற்று.

மால்வா புன்னகை புரிந்துகொண்டே சொன்னாள்:

"நீ என்னத்தைத் தெரிஞ்சிகிட்டே?...சமயங்களிலே இந்தக் குடிசைகளில் ஒன்றில் நெருப்பு மூட்டிவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டும் என்று தோணும். அப்படி நடந்தால், எத்தனை குழறுபடியாயிருக்கும்!"

"ஆமாம், இருக்கும்!" என்று வியந்துபோய்ச் சொன்னான். பிறகு மால்வாவின் தோளில் திடீரெனத் தட்டி விட்டுப் பேசினான்: "நீ தான் என்னத்தைத் தெரிஞ்சிகிட்டே? உனக்கு நான் ஓர் அருமையான விளையாட்டுச் சொல்லித்தாரேன். அப்புறம் நம்ம ரெண்டுபேருமா விளையாடலாம். உனக்கு இஷ்டந்தானே!"

"இஷ்டமேதான்!" என்று பரபரப்புடன் சொன்னாள் மால்வா.

"நீ யாஸ்காவின் நெஞ்சிலே நெருப்பு மூட்டினே! இல்லியா?"

"அது காளவாய் மாதிரி பத்திக்கிட்டு எரியுது!" என்று களுக்கென்று சொல்லிச் சிரித்தாள் மால்வா.

"அவனை அப்பனுக்கு எதிரா நெருப்பு மூட்டிவிடு! ரொம்ப வேடிக்கையாய் இருக்கும்! அப்புறம் ரெண்டு பேரும் ஒருத்தனுக் கொருத்தன் கரடி மாதிரிதான் முறைச்சிக் கிடுவாங்க...நீ அந்தக் கிழவனையும் தூண்டிவிடு; இந்த வாண்டுப் பயலையும் சீண்டிவிடு...அப்புறம் அவுங்க ரெண்டுபேரும் ஒருத்தனுக் கொருத்தன் அடிச்சுக்குவாங்க. இதைப்பத்தி நீ என்ன நினைக்கிறே? ம்!"

மால்வா திரும்பினாள்; திரும்பி, செம்மையும் குதூகலமும் நிறைந்த செர்யோஸ்காவின் முகத்தைப் பார்த்தாள். சந்திர ஒளியில் அவனது முகத்திலுள்ள தேமல் பட்டப் பகலில் தெரிவதை விடக் குறைவாகத் தெரிந்தது. அந்த முகத்தில் கோபத்தின் அறிகுறி இல்லை. அதற்குப் பதிலாக சுமுகமான பார்வையும், ஓரளவு குறும்பு நிறைந்த புன்னகையும்தான் தெரிந்தன.

"நீ ஏன் அவர்களை இப்படி வெறுக்கிறே?" என்று சந்தேகாஸ்பதமாகக் கேட்டாள் மால்வா.

"நானா?..வாஸிலி ஒழுங்காய்த்தான் இருக்கான். அவன் ரொம்ப நல்லவனாச்சே! ஆனா, யாஷா இருக்கானே... அவன் ஒன்னுக்கும் உதவாத பயல். பாரு, எனக்கு இந்த மூஜிக்குகள் யாரையுமே பிடிக்காது...எல்லாம் அழுகின சென்மங்கள்! என்னமோ ரொம்பவும் ஏழைப்பட்டு, அனாதையாப் போனமாதிரி பாசாங்கு பண்ணுறாங்க...ஆனா, நல்லா திங்கிறாங்க. அவங்களுக்கு எல்லாம் கிடைக்குது! அவர்கள் ஜெம்ஸ்ட்வோ வச்சிருக்காங்க, தெரியுமா? ஜெம்ஸ்ட்வோவே அவர்களுக்கு எல்லாக் காரியமும் செய்யுது...அவர்களிடம் பண்ணைகள் இருக்கு, நிலங்கள் இருக்கு, கால்நடை ஆடுமாடு இருக்குது! நான் ஒரு தடவை ஒரு ஜெம்ஸ்ட்வோ டாக்டரிடம் கோச்சுவண்டிக் காரனாக வேலை பார்த்தேன். அப்போ அவங்களைப் பத்திப் போதுமான அளவுக்குத் தெரிஞ்சிகிட்டேன்!... பின்னாலே நான் ரொம்ப நாளைக்கு நடுத்தெருவிலே நாதியத்து நிக்க

வேண்டியதாப் போச்சு... அபபோது சமயங்களிலே கிராமத்துக்குள்ளே போய் ஒரு துண்டு ரொட்டிக்காக, பிச்சை கேட்டிருக்கேன். ஆனா, உடனே அவங்க என்னைப் புடிச்சிக்கிட்டு, நீ யாரு, உனக்கென்ன வேலே, உன் பாஸ் போர்ட் எங்கே, அப்படி யிப்படின்னு உசுரை வாங்கிடு வாங்க. இதுமாதிரி எத்தனையோ தடவை நான் ஆப்பிட் டிருக்கேன். சமயங்களிலே, நீ குதிரையைத் திருட வந்த வன்தான் அப்படீன்னு சொல்லி ஒரு கல்லுக் குதிருக் குள்ளே போட்டு அடைச்சி வச்சிருவாங்க. எப்போ பார்த் தாலும் ஒரே பஞ்சப்பாட்டு பாடிப் பசப்புவாங்க; சிணுங்குவாங்க! ஆனா, வாழ்க்கையை ஓட்றது எப்படின்னு மட்டும் அவர்களுக்கு ரொம்ப நல்லாத் தெரியும்! அவங் களுக்கு ஒரு நல்ல பிடிப்பாவது இருக்கு—நிலங்கரை தான்! அவங்களோடே ஒத்துப்பார்த்தா, நான் எல்லாம் எந்த மூலே?''

''அப்படீன்னா, நீ ஒரு மூஜிக் இல்லையா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டாள் மால்வா.

''இல்லே!'' என்ற பெருமித உணர்ச்சியோடு சொன் ஞன் செர்யோஸ்கா: ''நான் ஒரு பட்டணக்கரைப் பிறவி! யூக்விச் நகரத்துக்குப் பிரஜையாக்கும் நான்!''

''நான் பாவ்லிஷ் ஊர்க்காரி'' என்று கவலையோடு சொல்லிக்கொண்டாள் மால்வா.

''இங்கே எனக்கு ஆதரவா ஒருத்தன்கூடக் கிடை யாது. ஆனா, இந்த மூஜிக்குகள் இருக்கிறாங்களே—இந்தப் பிசாசுகள், எப்படியாவது வாழ்ந்து விடுவாங்க! அவங்க ளிடம் ஜெம்ஸ்ட்வோ இருக்கு; அதே மாதிரி வேறே எல்லா எழவும் இருக்கு!'' என்று தொடர்ந்து பேசி ஞன் செர்யோஸ்கா.

''ஜெம்ஸ்ட்வோ'ன்னா என்ன?'' என்று கேட்டாள் மால்வா!

''ஜெம்ஸ்ட்வோ'ன்னா என்னவா? அது சைத்தானுக் குத் தான் தெரியும்! அது இந்த மூஜிக்குகளுக்காக ஏற்

படுத்தினது ; அது அவங்களுடைய நிர்வாக முறை...நாச மாப் போக! அந்தப் பேச்சை விடு. நாம், நம்ம சொந்த விஷயத்தைப் பேசலாம்—என்ன, நாம் சொன்ன குறும்பு வேலையைச் செய்வமா? அதனாலே யாருக்கும் கெடுதி இல்லே. அவங்க ரெண்டு பேரும் கொஞ்சம் சண்டை போடுவாங்க. அவ்வளவுதான். வாஸிலி உன்னை அடிச் சான், இல்லையா? அதுக்குப் பதிலா, அவனுடைய மகனே அவனை திருப்பியடிக்கட்டும்! ம்?''

''இது ரொம்ப மோசமான யோசனை'' என்று சிரித் துக் கொண்டே சொன்னாள் மால்வா.

''கொஞ்சம் நினைச்சிப்பாரு. உனக்காக யாரோ ரெண்டு பேரு ஒத்தனுக்கொருத்தன் உதை கொடுக்கிற துன்னு, கண்கொண்டு பார்க்கவே நல்லாயிருக்கும். இல் லையா? நீ ஒரு வார்த்தை சொன்னால் போதும். நீ உன் நாக்கை ஒண்ணு ரெண்டு தடவை அப்படிச் சுழட்டிப் பேசினாப் போதும்...அவங்க ரெண்டு பேரும் நாயும் பூனை யுமா மோதிக்கிடுவாங்க.''

பாதி கேலியாகவும், பாதி மனப்பூர்வமாகவும், மால்வா எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை உற்சாகத் தோடு விரித்துரைத்தான் செர்யோஸ்கா.

''கண்ணுக்குக் குளிர்ச்சியான ஒரு பொம்பளையா மட்டும் நான் பிறந்திருந்தா, இந்த உலகத்தையே ஒரு கலக்குக் கலக்கிட மாட்டேனா?'' என்று முத்தாய்ப்பாகச் சொல்லிவிட்டு, தன் கைகளைத் தலைமீது வைத்து கண்களை ஆனந்த மயக்கம் போல் இறுக மூடிக் காட்டினான்.

அவர்கள் பிரிந்து செல்லும்போது, நிலா மிகவும் உயரத்துக்கு வந்துவிட்டது. மேலும் இரவின் மோகனம் அப்போதுதான் அதிகரித்துக்கொண்டிருந்தது. அவர்கள் சென்றவுடன் எல்லையற்றுப் பரந்த அமைதியான கடலும், வெள்ளி மயமான சந்திரனும், தாரகைகள் சிதறிய நீல வானமுமே மிஞ்சி நின்றன. இவற்றோடு மணற் குன்று களும், கடற்கரைப் புதர்ச் செடிகளும், கரடு முரடாகச்

செய்யப்பட்ட சவப் பெட்டிகளைப் போலத் தோன்றும் இரண்டு பாழடைந்த கட்டிடங்களும்தான் மணல் வெளியில் மிஞ்சி நின்றன. ஆனால் இவற்றையெல்லாம் அந்தச் சமுத்திர வெள்ளத்தோடு எண்ணிப் பார்க்கும்போது பொருளற்றதாகவும், அற்பமானதாகவுமே தோன்றின. இந்தப் பொருள்களை வானத்து நட்சத்திரங்கள் மங்கிய ஒளியோடு பார்த்துக்கொண்டிருந்தன.

# 5

தந்தையும் பிள்ளையும் குடிசைக்குள் எதிரெதிராக உட்கார்ந்து ஓட்கா மது அருந்திக்கொண்டிருந்தனர். தன் தந்தையைச் சந்திக்கும்போது மந்தமாக இருக்கக்கூடாது என்பதற்காகவும், தன்மீது தந்தை கோபப் படாமல் சாந்தமாக இருக்கவேண்டும் என்பதற்காகவும், தான் போகும்போது கையோடு ஓட்கா மதுவையும் கொண்டுபோயிருந்தான், பிள்ளையாண்டான். மால்வா விஷயமாகத் தந்தை மகன்மீது கோபமாயிருப்பதாகவும், மால்வாவைச் சாகும் வரை அடித்துக் கொல்லுவதாகப் பயமுறுத்தியதாகவும், இதை மால்வா அறிந்துகொண்டதாலேயே யாகோவின் இஷ்டத்துக்கு இணங்கவில்லை என்பதாகவும் செர்யோஸ்கா யாகோவிடம் சொல்லியிருந்தான். மேலும் அவன் கிண்டலாகவும் சில வார்த்தைகள் பேசியிருந்தான் :

“உன் குறும்புச் சேட்டைக்கெல்லாம் அவன் நல்லா உதை குடுக்கப் போறான். உன் காதைப் புடிச்சுத் திருகிற திருகிலே அது ஒரு கஜத்துக்கு நீளப் போவுது. நீ அவன் கண்ணிலே படாமப் போனதுதான் பிழைச்சே!”

அந்தச் செம்பட்டைத் தலையன் சொன்ன கிண்டல் வார்த்தையைக் கேட்டு, யாகோவுக்கு தன் தந்தைமீது மனசுக்குள் கோபம் பொங்கி யெரிந்தது. இதையெல்லாம் விட, மால்வாவின் நடத்தை மீதுதான் அவனுக்கு அசாத்யக் கோபம். அவள் ஒரு கணம் அவனை வசியம் பண்ணுவது போலப் பார்ப்பதும், மறுகணம் அவளையடைய வேண்டும் என்ற ஆசைத் தீயை அவன் நெஞ்சில் மூட்டி, தாங்க முடியாத வேதனையை உண்டாக்குவதும் அவனுக்கு அவள் மீது கோபத்தை உண்டாக்கியது.

எனவே அவன் தன் தந்தையிடம் போகும்போது, தன் தந்தை தன் பாதையில் ஒரு முட்டுக்கட்டை மாதிரி தான் குறுக்கே கிடக்கிறார் என்றும், அந்த முட்டுக்கட்டை மீது ஏறி அப்புறம் செல்லவோ, அல்லது அதைச் சுற்றி வளைத்து

வருவதோ இயலாத காரியம் என்றும் கருதினன். என்ருலும்,அவன் மனத்தில் தன் தந்தையைப் பற்றிக் கொஞ்சம்கூடப் பயம் ஏற்படவில்லை. எனவே, அவன் தந்தைக்கு எதிராக உட்கார்ந்து அவனைக் குறுகுறுக்கும் கோபப் பார்வையோடு பார்த்துக்கொண்டு 'நீ என்னைத் தொட்டு அடிச்சிடுவியோ?' என்று சொல்லக் கூடிய துணிவாற்றலோடு உட்கார்ந்திருந்தான்.

அவர்கள் இரண்டு தடவை குடித்து விட்டார்கள்; என்ருலும் ஒருவருக்கொருவர் வாயே திறக்கவில்லை. அப்படியே பேசினுலும், மீன் பண்ணையைப்பற்றி வேண்டாத விஷயங்களைத்தான் ஒன்றிரண்டு தடவை சொல்லிக் கொண்டார்கள். அந்தக் கடலுக்கு மத்தியில் அமைந்த திடலில் ஒருவருக்கொருவர் எதிராக உட்கார்ந்திருந்தனர். இருவர் மனத்திலும் கோபம் அதிகரித்துக்கொண்டே யிருந்தது. இந்தக் கோபம் சீக்கிரத்திலேயே பொங்கிப் பொழிந்து, அவர்கள் இருவரையும் பொசுக்கப் போகிறது என்பது இருவருக்குமே தெரியும்.

குடிசையின் கூரைமேல் கிடந்த பாய்மரத்துணி காற்றில் படபடத்தது. கூரையிலுள்ள கோரைப்புல் ஒன்றுக் கொன்று உரசின; உச்சியில் நின்ற சிவப்புக்கந்தை படபடத்து ஆடியது. ஆனால், இந்தச் சப்தங்களெல்லாம் ஒழுங்கற்று, திராணியற்று எதையோ இரந்து கேட்கும் மங்கிய தூரக்குரல்களைப் போலவே அமிழ்ந்து ஒலித்தன.

"செர்யோஸ்கா இன்னும் குடிச்சிக்கிட்டுத்தான் கிடக்காஞ?" என்று மங்கிய குரலில் கேட்டான் வாஸிலி.

"ஆமா, அவன் ராத்திரியிலே நித்தம் குடிக்கத்தான் செய்ருன்" என்று சொல்லிவிட்டு, இன்னும் கொஞ்சம் ஓட்காவை ஊற்றிக்கொண்டான் யாகோவ்.

"அதனுலேதான் அவனுக்கு சாக்காலம் வரப்போவுது... அதனுலேதான் அவன் அப்படித் தாராளமாக, சுதந்திரமாக, பயமில்லாமே வாழ்ருன்! நீயும் கூட அப்படி இருக்க..."

யாகோவ் முறித்தாற்போல் பதில் சொன்னான்:

"இல்லை, நான் மாட்டேன்."

"நீ மாட்டாயா?" என்று முகத்தைச் சுழித்துக் கொண்டே பேச ஆரம்பித்தான் வாஸிலி: "நான் என்ன பேசுறேன்னு எனக்கு நல்லாத் தெரியும்...நீ இங்கே வந்து எவ்வளவு நாளாச்சு? இது மூணாவது மாசம். நீ ஊருக்கு போறதுக்கு நாள் நெருங்கிட்டுது. அப்படிப் போறதுன்னா, கையோடே கொண்டுபோறதுக்கு வேண்டிய பணம் சேர்த்து வச்சிருக்கியா?" வாஸிலி தன் கோப்பையைக் கோபத்தோடு எடுத்து, ஓட்காவை ஒரே மடக்கில் உள்ளே தள்ளினான்; தன் தாடியைக் கையில் பிடித்தான்; அதைப் பலமாகப் பிடித்து இழுத்த இழுப்பில், அவன் தலையே கீழே தாழ்ந்தது.

"இங்கே இருந்ததே கொஞ்சகாலம்; அதுக்குள்ளே, எப்படி அதிகமாகப் பணம் மிச்சம் பிடிக்க முடியும். பிடிக்கலே!" என்றான் யாகோவ்.

"அப்படீன்னா, நீ இங்கே சுத்திக்கிட்டு வர்ரதிலே பிரயோசனமில்லை. ஊருக்குத் திரும்பிப் போ!"

யாகோவ் குறுநகை புரிந்தான்; ஆனால் பேசவில்லை.

"இதுக்கு ஏன் முகத்தைச் சுழிக்கிறே?" என்று கோபத்தோடு கேட்டான் வாஸிலி. அந்தக் கேள்வி மகனின் அமைதியைக் குலைத்துவிட்டது. மேலும், "உன் அப்பன் உன்னிடம் பேசறதைக் கண்டு, சிரிக்கவா செய்யறே? ஜாக்கிரதையா இரு. நீ உன் இஷ்டம் போலே, இப்போதே சுதந்திரமாத் திரியப் பார்க்கிறே. அதுக்குக் காலம் கிடக்கு. உன்னைக் கொஞ்சம் அடக்கித்தான் வைக்கப் போறேன்!"

யாகோவ் இன்னும் கொஞ்சம் ஓட்காவை ஊற்றிக் குடித்தான். தந்தையின் கண்டிப்பு அவனது கோபத்தைக் கிளறிவிட்டது; என்றாலும் அதை அடக்கினான். தன் தந்தையை இன்னும் கோபம் மூளச் செய்யக்கூடாது என்

பதற்காக எதையும் வாய்விட்டுச் சொல்லாமல் கோபத்தை உள்ளே அடக்கிப் பார்த்தான். சொல்லப்போனால், உண்மையில் அவன் தன் தந்தையின் கண்களில் தோன்றும் கடூரமான கடுமையான பார்வையைக் கண்டு கொஞ்சம் அஞ்சவே செய்தான்.

தனக்கு ஊற்றுமல், அவன் மட்டும் ஓட்காவை ஊற்றிக் குடிப்பதைக் கண்டு அப்பனின் கோபம் மீண்டும் சீறியது.

"பெத்த அப்பன் சொல்றுன், ஊருக்குப் போன்'ளு! நீ என்னைப் பார்த்துச் சிரிக்கவா செய்றே?...படுவா?" என்று உறுமினன். அத்துடன், "சனிக்கிழமையன்னிக்கு நீ வேலையை விட்டுட்டு...சீக்கிரமா ஊருக்கு ஓடு! நான் சொல்றதைக் கேக்கிறியா, என்ன?" என்றுன்.

"நான் போகமாட்டேன்!" என்று தலையைப் பலமாக ஆட்டிக்கொண்டு உறுதியாகச் சொன்னன் யாகோவ்.

"நீ போகமாட்டாயா? ம்?" என்று கர்ஜித்தான் வாஸிலி. தன் கைகளைப் பீப்பாயின் மீது ஊன்றி, எழுந்திருந்தான்; "நீ யாரோடு பேசிக்கிட்டிருக்கே, தெரியுமா? தகப்பனைப் பார்த்து ஏன் நாய் மாதிரி குலைக்கிறே? நான் என்ன செய்யமுடியும்'கிறதை மறந்துட்டியா? இல்லே கேக்கிறேன். மறந்துட்டியா, என்ன?"

அவன் உதடுகள் நடுங்கின; முகம் கோரமாக வலித்துக் கோணியது. நெற்றிப் பொருத்துக்களில் ரத்தக் கால்கள் புடைத்து நின்றன.

"நான் எதையும் மறக்கலே!" என்று தணிந்த குரலில், தன் தந்தையைப் பார்க்காமலேயே பேசினன் யாகோவ்: "நீ மட்டும் எல்லாத்தையும் நினைவிலே வச்சிருக்கியோ? நீயே யோசிச்சிப்பாரு!" என்று மேலும் கேட்டான்.

"எனக்கே பாடம் கத்துக்குடுக்க வந்துட்டியா? உன்னைக் கூழா நொறுக்கிப் பிழிஞ்சிருவேன், பிழிஞ்சி!"

தன் தலை மீது தாக்கவந்த தந்தையின் கரத்தைத் தடுத்து, பற்களைக் கடித்துக்கொண்டு பேசினான் யாகோவ் :

" என்னைத் தொடத் துணியாதே ! நீ ஊரிலே, கிராமத்திலே, நம்ம வீட்டிலே இல்லே—ஞாபகம் வச்சிக்கோ !"

" மூடுடா வாயை ! நான் உன் அப்பன்! நீயும் நானும் எங்கே யிருந்தா என்னடா ?"

" நீ என்னை ஒண்ணும் போலீஸ் டேசன்லே கொண்டு போயி, உதைக்க முடியாது ! இங்கே அதுக்குப் போலீஸ் டேசனே கிடையாது !" என்று தந்தையைப் பார்த்துச் கொண்டே சொல்லிவிட்டு, தன் இடத்தைவிட்டு எழுந்தான், யாகோவ்.

வாஸிலி கண்களிலே ரத்தம் பாய்ந்து சிவுசிவுக்க, தலையை முன்னால் தள்ளி நீட்டி, முஷ்டிகளை இறுகப் பற்றி, உஷ்ணமும் ஓட்கா வாடையும் கலந்த மூச்சு தன் மகனின் முகத்தில் தாக்கக் குமுறிக்கொண்டு நின்றான். யாகோவ் ஓரடி பின் வாங்கி, நெற்றியைத் தாழ்த்தி, தன் தந்தையின் ஒவ்வொரு அசைவையும் கவனித்து, அடிக்க வந்தால், தப்பிப்பதற்குத் தயாராக நின்றான். வெளிக்கு அமைதியோடிருப்பதாகத் தோன்றினாலும், அவன் உடம்பு முழுவதும் உஷ்ணமாக வியர்வை வியர்த்து வழிந்தது. இருவருக்கும் மத்தியில் மேஜை மாதிரி அந்தப் பீப்பாய் குறுக்கே கிடந்தது.

" உன்னை நான் அடிக்க முடியாதுன்னு, சொல்றே !" என்று முரட்டுத்தனமாகக் கேட்டுக்கொண்டே, பதிபோடும் பூனையைப்போல் முதுகை வளைத்து நின்றான் வாஸிலி.

" இங்கே எல்லோரும் ஒண்ணுதான்... நீயும் ஒரு தொழிலாளி; நானும் ஒரு தொழிலாளி !"

" அப்படியா சொல்றே ?"

" நீ என்ன நினைச்சிக்கிட்டிருக்கே ! என்மேலே ஏன் இப்படிப் பைத்தியம் மாதிரிச் சீறுதே ? எனக்குத் தெரியாதுன்னு நினைச்சிக்கிட்டியா? நீதான் அதற்குக் காரணம்!"

வாஸிலி உறுமினான். தன் கைகளைப் பலமாக வீசிக்கொண்டே யாகோவை தாக்கினான்; யாகோவினால் அதைத் தடுக்கமுடியவில்லை. அந்த அடி அவனது தலைமீது விழுந்தது. தடுமாறிக்கொண்டே, தன் தந்தையின் கோபம் பொங்கும் முகத்தைப் பீதியுடன் பார்த்தான்.

வாஸிலி மீண்டும் கையை ஓங்கியபோது, யாகோவும் தன் முஷ்டியை உயர்த்திக்கொண்டு, "பத்திரமா இரு!" என்று எச்சரித்தான்.

"பத்திரமா இருக்க உனக்குக் காட்றேன்!"

"நில்லு, நான் சொல்லிக்கிட்டிருக்கேன்!"

"ஆஹா...நீ உன் அப்பனையே பயங் காட்டுறியா? உன் அப்பண்டா அப்பன்! அப்பன்!"

அந்தக் குடிசை அவர்களது சண்டையை எதிரொலித்தது; நடுங்கியது. அவர்கள் இருவரும் உப்பு மூட்டை மீதும், கவிழ்த்துப் போட்ட பீப்பாய் மீதும், மரக்கட்டை மீதும் தடுமாறி உருண்டு விழுந்தனர்.

தன் முஷ்டியால் அடிகளைத் தாங்கிக்கொண்டு, முகம் வெளுத்து, வியர்வை பொழிய, பற்களைக் கடித்து, கண்கள் ஓநாயைப்போல் கனன்றெரிய, தன் தந்தையிடமிருந்து மெதுவாகப் பின்வாங்கினான் யாகோவ். தந்தையும் கண்மூடித்தனமான வெறியோடு முஷ்டிகளை உயர்த்தி ஆட்டிக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்தான்; சிலிர்த்துக்கொண்டு நிற்கும் காட்டுப்பன்றியைப்போல் தலைமயிரெல்லாம் உலைந்து குத்திட்டு நிற்கப் பாய்ந்தான்.

"விடு என்னை! போதும், நிறுத்து!" என்று அமைதியும், அலங்கோலமும் நிறைந்த குரலில் சொல்லிவிட்டு, வாசலைக் கடந்து குடிசைக்கு வெளியே வந்தான் யாகோவ்.

அப்பனும் இன்னும் கோரமாகக் கர்ஜித்துக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்தான்; ஆனால், அவன் கொடுத்த அடியெல்லாம் யாகோவின் முஷ்டிகளை மட்டுமே தாக்கின.

“உனக்குப் பைத்தியமா? கிறுக்கா?” என்று கண்டித்துக் கேட்டான், யாகோவ். தன் தந்தையைவிட, தான் விறுவிறுப்போடிருப்பதை உணர்ந்தே சொன்னான்.

“பொறு... நீ பொறுத்துப்பாரு!”

ஆனால், யாகோவ் லாகவமாய்த் தப்பித்துக் தாவி, கடலை நோக்கி ஓடினான்.

அகல விரித்த கண்களோடும், குனிந்த தலையோடும் வாஸிலியும் அவனைப் பின்தொடர்ந்தான்; ஆனால், ஏதோ காலில் தட்டிவிட, தடுமாறித் தரையிலே மல்லாக்க விழுந்துவிட்டான். எனினும், அவன் உடனே எழுந்து மணலில் உட்கார்ந்து, தன் உடம்பு சாய்ந்து விழுந்துவிடாதபடிக் கைகளை ஊன்றிக்கொண்டான். இந்தக் கலவரத்தால், அவன் களைத்துப் போனான்; மேலும் ‘பழிவாங்க முடியாமற் போயிற்றே’ என்ற ஆத்திரமும், தன் பலவீனத்தைப் புரிந்துகொண்ட கசப்புணர்ச்சியும் சேரவே, அவன் உறுமிக்கொண்டிருந்தான்.

“நீ நாசமாப் போக!” என்று முரட்டுத்தனமாகச் சத்தமிட்டான்; சத்தமிடும்போது, யாகோவ் சென்ற திசையைப் பார்த்து கழுத்து நீண்டது; நடுநடுங்கும் உதடுகளிலிருந்து வெறியினால் வெளிவந்த நுரையைத் துப்பினான்.

யாகோவ் ஒரு படகின்மீது சாய்ந்து, அடிபட்ட தலையைத் தடவிக்கொண்டே தன் தந்தையைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான். அவனது சட்டைக் கைகளில் ஒன்று கிழிந்து, ஓர் இழையில் தொங்கிக்கொண்டிருந்தது. சட்டைக் காலரும் கிழிந்துபோயிற்று. வியர்த்துப் பொழியும் அவனது வெண்மையான மார்பு எண்ணெய் தடவிவிட்டதுபோல் சூரிய ஒளியில் பளபளத்தது. இப்போது அவனுக்குத் தன் தந்தை மீது கசப்புணர்ச்சிதான் ஏற்பட்டது. தன் தந்தை தன்னைவிடப் பலசாலி என்றுதான் இதுவரை அவன் நினைத்திருந்தான்; ஆனால், இப்போது அவனது தந்தை மணல் வெளியில் நிலைகுலைந்து பரிதாபகரமாய் உட்கார்ந்து, முஷ்டியை உயர்த்திப் பத்திரம் காட்டுவதைக் கண்டு, அவன்

சிரித்தான்; அந்தச் சிரிப்பு மெலியவனைப் பார்த்து வலியவன் சிரிக்கும் ஏளனச் சிரிப்பு !

"நீ நாசமாப் போ... என்றென்றைக்கும் நாசமாப் போ !"

வாஸிலி எவ்வளவோ சத்தமிட்டு வைதான்; என்றாலும் வாஸிலி தன்னையுமறியாமல், கடலையும், கடற்கரை மீன் பண்ணையையும் பார்த்தான்; தன் தந்தையின் ஆண்மையற்ற குரலை அங்குள்ளவர்கள் யாரேனும் கேட்டுவிடப்போகிறார்கள் என்று அவனுக்குப் பயம். ஆனால், அங்கோ சூரியனையும் கடலையும் தவிர வேறு யாருமில்லை. எனவே காறித் துப்பிவிட்டுச் சொன்னான் :

"போடு போடு. நல்லாச் சத்தம் போடு ! அதனாலே யாருக்குக் கஷ்டமின்னு நினைச்சே ? உனக்குத்தான்...நமக்குள்ளே இப்படி நடந்துபோனதாலே, நான் நினைச்சிருக்கிறதை உங்ககிட்ட சொல்லிடறேன்."

"மூடு வாயை... என் முன் நில்லாதே... போ, தொலைஞ்சிபோ" என்று கர்ஜித்தான் வாஸிலி.

"நான் ஊருக்கு ஒண்ணும் போகமுடியாது" என்று கூறினான் யாகோவ். அவன் தன் தந்தையின் ஒவ்வொரு அசைவையும் கவனித்துக்கொண்டிருந்தான். மேலும், "நான் இங்கே மழைக்காலம் வரையிலே தங்கப்போறேன். இங்கே இருக்கிறதுதான் எனக்கு ரொம்ப நல்லது. நான் ஒண்ணும் முட்டாளில்லே! எனக்கு அது தெரியும். இங்கே வாழ்க்கை சௌகரியமாயிருக்கு. வீட்டிலேன்னா, நீ என்னை உன் இஷ்டம் போல நடத்துவே. ஆனால், இங்கே...நீயே பாரு" என்று கூறினான்.

இதைச் சொல்லிவிட்டு, அவன் தன் கைகளை இரண்டையும் சேர்த்து தன் தந்தையை வக்கணை காட்டிச் சிரித்தான்; ஆனால், பலமாகச் சிரிக்கவில்லை. என்றாலும் அந்தச் சிரிப்பைக் கேட்டு வாஸிலி கோபத்தோடு துள்ளி யெழுந்தான். அவன் தன் கையில் ஒரு துடுப்பை எடுத்துக்கொண்டு யாகோவைத் தாக்க விரும்பிப் பாய்ந்தான்; கூச்சலிட்டான்:

“ உன் அப்பனிடமா ? உன் அப்பனிடமா இப்படி வக்கணை செய்றே? உன்னைக் கொன்னு போடுவேன் !”

அவன் கண்மூடித்தனமான வெறியோடு படகை நெருங்குவதற்குள், யாகோவ் தன் கிழிந்த சட்டையின் கை காற்றில் பறந்தாட அங்கிருந்து வெகுதூரம் ஓடிப்போய் விட்டான்.

வாஸிலி அந்தத் துடுப்பை யாகோவை நோக்கிச் சுழற்றி வீசினன்; ஆனால், அதுவோ பக்கத்திலேயே விழுந்து விட்டது. வயோதிகனன வாஸிலி மீண்டும் களைப்புற்று, படகின்மீது தன் நெஞ்சைச் சாய்த்தான்; இன்னும் வெறி தணியாமல். தன் மகனைப் பார்க்கும்போதெல்லாம் படகின் மரக் கட்டைகளைப் பிருண்டினன்.

யாகோவோ தூரத்தில் இருந்தவாறே சத்தமிட்டான்:

“ உன்னைப் பார்த்து நீயேதான் வெட்கப்படணும் ! உனக்குத் தலையிலே நரைகூட விழுந்தாச்சி. இன்னும் அந்தப் பொம்பிளை பின்னலே பைத்தியம் கொண்டு திரியிறயே ! நீதான்!...நான் ஒண்ணும் ஊருக்குப் போகப் போறதில்லை... நீதான் போ...உனக்கு இங்கே ஒரு வேலையுமில்லே !”

“ யாஸ்கா! மூடு வாயை !” என்று யாகோவின் குரலையும் மிஞ்சிக் கர்ஜித்தான் வாஸிலி : “ யாஸ்கா, உன்னைக் கொன்னுடுவேன்...மரியாதையா, இங்கேயிருந்து போயிடு!”

யாகோவ் சாவதானமாக உலாவிச் சென்றன்.

சுவாதீனமிழந்து மங்கிப்போன கண்களால் அவன் போவதைப் பார்த்தான், வாஸிலி. ஏற்கெனவே அவன் குட்டையாகத் தோன்றினன்... அதோ அவன் கால்கள் மணலில் புதைகின்றன...இடுப்புவரை புதைந்துபோனன்... தோள் வரை... கழுத்துவரை... போயே போனன்!... ஒரு கணம் கழித்து அவன் மறைந்துபோன இடத்தில் மீண்டும் அவன் தலை, பிறகு தோள், பிறகு உடம்பு முழுவதுமே உயர்ந்து வெளிவந்து மீண்டும் குட்டையாகத் தெரிந்தான் ! யாகோவ் திரும்பி வாஸிலி இருந்த திசையைப் பார்த்து ஏதோ சத்தமிட்டான்.

"நாசமாப்போ! நாசமாப்போ! நாசமாப்போ!" என்று மும்முறை வாஸிலி பதிலுக்குக் கத்தினன்.

யாகோவோ உடம்பை குலுக்கிக்கொண்டு, திரும்பி நடந்தான்...மீண்டும் அவன் மணற் குன்றுகளுக்குப் பின்னால் மறைந்து போனன்.

வாஸிலி வெகுநேரம் வரை, தன் மகன் சென்ற திசையையே பார்த்துக்கொண்டிருந்தான். படகின் மீது கூனிச் சாய்ந்திருந்ததால் தன் முதுகு கடுப்பெடுக்கும் வரையிலும் பார்த்தான். பிறகு அவன் நிமிர்ந்துநின்ருன்; தன் ஒவ்வொரு அவயவத்திலும் வலியெடுப்பதை உணர்ந்து தள்ளாடினன். அவன் மாட்டிவிட்டிருந்த தோள் பெல்ட் கழன்று, அக்குளுக்குள் நழுவிக் கிடந்தது. மரத்துப்போன விரல்களால் அதைக் கழற்றி, தன் கண்ணருகே கொண்டுபோய்ப் பார்த்தான்; பிறகு அதை மணலில் வீசியெறிந்தான். அதன்பின் அவன் குடிசைக்குப் போய், மணலில் இருந்த ஒரு குழிக்குமுன் நின்ருன். அந்தக் குழியில்தான் முன்னல் தடுமாறி விழுந்தான்; அதை நினைவு கூர்ந்தான்; அப்படி விழாமல் மட்டும் இருந்திருந்தால், தன் மகனைப் பிடித்திருக்க முடியும் என்றும் எண்ணினன். குடிசைக்குள் எல்லாமே ஒரே அலங்கோலமாய்க் கிடந்தன. வாஸிலி ஓட்கா மதுப் பாட்டிலைத் தேடிப் பார்த்தான். அது சாக்குகளோடு கிடப்பதைக் கண்டு கையில் எடுத்தான். பாட்டிலின் 'கார்க்' மூடி இறுகலாகவே இருந்தது; எனவே, மது சிந்திப்போகவில்லை. வாஸிலி மெதுவாகப் பாட்டிலின் கார்க்கை எடுத்து பாட்டிலைத் தன் உதடுகளில் வைத்து குடிக்க விரும்பினன்; ஆனல் பாட்டில் அவனுடைய பற்களில் மோதிக் கலகலத்தது; ஓட்கா வாய்க்கடை வழியாக வழிந்தோடி, மார்பையும் தாடியையும் நனைத்தது.

வாஸிலியின் காதில் ஏதோ இரைந்தது; நெஞ்சு வெகு வேகமாகத் துடிதுடித்தது; முதுகு தாங்க முடியாதபடி குத்தல் எடுத்தது.

"என்ன இருந்தாலும், நான் ஒரு கிழவன்!" என்று சத்தமிட்டுக்கொண்டே குடிசை வாசலில் பரந்திருந்த மணலில் தொப்பென்று உட்கார்ந்தான்.

அவனுக்கு முன்னுல் கடல் விரிந்து கிடந்தது. எப்போதும் போலவே அலைகள் சிரித்துக் கும்மாளமிட்டுக் கூத்தாடின. வாஸிலி நீர்ப் பரப்பையே நெடுநேரம் பார்த்துக்கொண் டிருந்தான்; தன் மகன் சொன்ன அந்த ஆசை வார்த்தைகளே அவன் மனசில் வட்டமிட்டன.

"இந்தக் கடலெல்லாம் ஒரே நிலமாயிருந்தால்! கரிசல் நிலமாயிருந்தால்! அதை முழுதும் நாம் உழுது பயிரிட முடியுமானுல்!"

மூஜிக்கான வாஸிலியின் மனத்தில் ஏதோ கசப்புணர்ச்சி தட்டியது. அவன் தன் மார்பைப் பரபரவென்று தேய்த்துச் சுற்றும் முற்றும் பார்த்தான்; நீண்ட பெருமூச்சு விட்டான். அவன் தலை கவிழ்ந்து கிடந்தது; கனமான பளுவைச் சுமப்பதுபோல் முதுகு கூனிப்போய் முன் வளைந்திருந்தது. அவன் குரல்வளை திணறித் தவிப்பதுபோல் மேலும் கீழும் ஏறி இறங்கியது. தொண்டையின் அடைப்பைப் போக்குவதற்காக, அவன் கஷ்டப்பட்டு இருமினுன். முழங்காலைக் கட்டிக்கொண்டே வானத்தைப் பார்த்தான். மங்கிய சிந்தனைகள் அவன் மனத்தில் உருவாயின.

—ஓர் ஒழுக்கம் கெட்ட பெண்ணுக்காக, அவன் தன் மனைவியை—பதினைந்துவருஷ காலத்துக்கு மேலாக, நேர்மையாக உழைத்து, அவனோடு வாழ்க்கை நடத்திய மனைவியைப் புறக்கணித்து விட்டான்...இந்தப் பாவத்துக்குத் தண்டனையாக, கடவுளே பெற்ற மகனை அப்பனுக்கே எதிராகத் தூண்டிவிட்டார். அது கடவுள் சித்தம்!

—அவனுடைய மகன் அவனைக் கேலி செய்துவிட்டான்! அவனது இதயத்தையே கிழித்தெறிந்து விட்டான்! தன் தந்தையின் ஆத்மாவை இப்படி வருத்தியதற்கு வெறும் சாவுகூட அவனுக்குத் தண்டனையாகாது. எதற்காகச் சாகவேண்டும்? பாவ கிரியையில் ஈடுபட்ட ஓர் ஒழுக்கங் கெட்டவளுக்காகவா அவன் சாகவேண்டும்?... இல்லை...கிழவனுன வாஸிலி தன் மனைவியையும் மறந்து, இந்தப் பெண்ணோடு தொடர்பு கொண்டதுதான் பாவம்!...

—எனவேதான் ஆண்டவன் தன் நியாயமான கோபத்தால், அவனுக்கு அவனது கடமையை நினைப்பூட்டினுர்!

அவனது மகனின் மூலம் அந்தத் தண்டனை அவனது இருதயத்தில் தாக்கும்படி செய்துவிட்டார்!...அது கடவுள் சித்தம்!...

இன்னும் மணலின்மீது முழங்காலைக் கட்டியவாறே கிடந்தான் வாலிலி. அவன் கண் பார்வையை மறைத்துக் கண்களில் பொங்கி நிற்கும் கண்ணீரை இமைகள் மூடி மூடி வெளியே பிழிந்து தள்ளின.

சூரியன் கடலுள் மூழ்கியது. அந்தி மாலைச் சூரியனின் ஜோதிச் செக்கர் மெள்ள மெள்ள மறைந்து போயிற்று. தூரத்திலிருந்து வீசும் வெப்பக் காற்று கண்ணீரால் நனைந்திருந்த அவன் முகத்தில் வீசிற்று. தன் செயலுக்காக வருந்தும் சிந்தனைகளிலே மூழ்கிப் போய், தன்னை அறியாமல் தூங்கி விழும்வரை, அங்கேயேதான் இருந்தான் வாலிலி.

# 6

தான் தந்தையுடன் சண்டை பிடித்த பின் இரண்டு தினங்கள் கழித்து, யாகோவ் வேறு சில செம்படவர்களுடன் ஒரு பெரிய படகில் ஏறிச் சென்றான்; அந்தப் படகு நீராவியினால் செலுத்தப்படுவது. அதிலேறி, மீன் பண்ணையிலிருந்து முப்பது *வெர்ஸ்ட் தூரத்திலுள்ள ஓர் இடத்துக்குச் சென்று வஞ்சிரம் மீன்களைப் பிடிக்கச் சென்றனர். ஐந்து நாள் கழித்து யாகோவ் மட்டும் தன்னந்தனியாக ஒரு சிறு படகில் திரும்பி வந்தான்; தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெற்றுவருமாறு மற்ற செம்படவர்கள் யாகோவை அனுப்பி யிருந்தனர். அவன் வந்துசேர்ந்த நேரம் உச்சிப் பகல்; பண்ணையிலுள்ள செம்படவர்களெல்லாம் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். உஷ்ணமோ தாங்க முடியாதவாறு இருந்தது; மணலின் சூடு நடந்துசெல்லும் யாகோவின் காலைப் பொசுக்கியது; மேலும், மீன் செதில்களும் முள்ளும் காலைக் குத்தின. யாகோவ் காலில் ஜோடு அணியாததற்குத் தன்னைத்தானே நொந்துகொண்டான்; மிகவும் பதனமாக நடந்து, குடியிருப்புக்களை நோக்கி நடந்தான். படகிலுள்ள தன் ஜோடுகளைத் திரும்பிப்போய் எடுத்துவரச் சோம்பேறித்தனப்பட்டான். மேலும் ஏதாவது வயிறார தின்றாக வேண்டும் என்று அவனுக்கு ஆத்திரம்; அத்துடன் மால்வாவைப் பார்க்கவேண்டும் என்ற ஆத்திரம். அவன் கடலிற் கழித்த நாட்களில் எப்போதாவது வேலையற்ற நேரங்களில் அவளைப் பற்றி அடிக்கடி நினைத்துப் பார்த்தான்; இப்போதோ, அவனது தந்தையை அவள் பார்த்தாளா, அவர் அவளிடம் என்ன சொன்னார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினான்....ஒருவேளை அப்பன் அவளை அடித்திருக்கலாம். அடித்ததனால் ஒன்றும் மோசம் போய் விடாது—அதனால், அவள் உடம்பிலுள்ள திமிர்க்கொழுப்பு கொஞ்சம் குறையத்தான் செய்யும்! ஏற்கெனவே அவள்

* வெர்ஸ்ட்: ருஷ்ய தூர அளவை; 3501 அடி நீளம்.

கொஞ்சம் நிமிர்ந்தாற் போலவும், மரியாதையற்றும்தான் நடந்துகொண்டாள்!

மீன் பண்ணை அமைதியாயிருந்தது; ஆள் நடமாட்டமே காணோம். குடிசைகளின் திட்டிச் சன்னல்கள் அகலத் திறந்து கிடந்தன; அங்குள்ள மரப்பெட்டிகள் கூட உஷ்ணத்தைத் தாங்க முடியாது வாயைப் பிளந்து மூச்சு விடுவதாகத் தோன்றியது. குடிசைகளுக்கு மத்தியில் மறைவாகவுள்ள பண்ணை ஏஜெண்டின் ஆபீசில், ஒரு சிறு குழந்தை தன் பலத்தையெல்லாம் காட்டிக் கூச்சலிட்டு அழுதது. ஒரு பீப்பாய் அடுக்குக்குப் பின்னால் மெல்லிய குரலில் சிலர் பேசுவது கேட்டது.

யாகோவ் தைரியமாக அந்தப் பீப்பாய் வரிசைக்குப் போனான்; அந்தக் குரல் மால்வாவினுடையது என்று நினைத்தான். அதன் பக்கம் சென்று அவற்றுக்குப் பின்னால் அவன் பார்வை சென்றதுமே மறுகணம் பின்வாங்கி முகத்தைச் சுளித்தவாறே நின்றுவிட்டான்.

அந்தப் பீப்பாய்களுக்குப் பின்னால், அதன் நிழலில் செர்யோஸ்கா தன் இரண்டு கைகளையும் தலைக்கு அணை கொடுத்து மல்லாக்கப் படுத்திருந்தான். அவனுக்கு ஒரு பக்கத்தில் யாகோவின் தந்தை இருந்தான்; மறுபக்கம் மால்வா இருந்தாள்.

'இவர் இங்கே என்ன செய்றார்?' என்று தன் தந்தையைப் பற்றி மனசுக்குள் நினைத்துக்கொண்டான், யாகோவ்: 'இவர் என்ன, தன் அமைதியான வேலையை விட்டுட்டு, இங்கே வந்து மால்வா பக்கத்திலே உக்காந்திருக்காரே! எதுக்கு? என்னை நெருங்கவிடாமல் பார்க்கிறதுக்கா? நாசமாப் போச்சு? இவருடைய நடவடிக்கைகளை எல்லாம் அம்மா கேள்விப்பட்டாள்னா என்ன ஆகிறது?... நான் கிட்டே போறதா, வேண்டாமா?'

" சரி, அப்படின்னா, நீ போகப்போறேன்னு சொல்றே, அப்படித்தானே! ரொம்ப சரி, மகராசனாப் போ. போயி நிலத்தை உழு!" என்று செர்யோஸ்கா சொல்லுவது யாகோவின் காதில் விழுந்தது.

யாகோவ் சந்தோஷத்தால் கண்களை மூடிமூடித் திறந்தான்.

"ஆமா, நான் போகப்போறேன்" என்று சொன்னான் அவனது தந்தை.

இதைக் கேட்டவுடன் யாகோவ் தைரியமாக அவர்கள் முன் வந்து குதூகலத்தோடு பேசினான் :

"உங்களை யெல்லாம் ஒண்ணாப் பார்த்ததே—பெரிய சந்தோஷம் !"

அவனது தந்தை அவனைச் சடக்கென்று ஒரு பார்வை பார்த்துவிட்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டான். மால்வா தன் கண்ணிமையைக் கூடத் திருப்பவில்லை. செர்யோஸ்கா மட்டும் காலையாட்டிக்கொண்டு, ஏளனம் நிறைந்த குரலில் பேசினான் :

"அட ! உன் அருமையான புத்திரச் செல்வம் தூரந் தொலையிலிருந்து திரும்பி வந்துவிட்டதே !" என்று கூறிவிட்டு, தன் வழக்கமான குரலில், "இவன் முதுகுத் தோலை ஆட்டை உரிக்கிறமாதிரி உரிச்சி எடுத்து, மேளக் கொட்டுக்குத் தோலாப் போட்டாலும் தகும் !" என்றான்.

மால்வா மெதுவாகச் சிரித்தாள்.

"ஒரே உஷ்ணமாயிருக்கு !" என்று சொல்லிக்கொண்டே கீழே உட்கார்ந்தான், யாகோவ்.

வாஸிலி அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சொன்னான் :

"உனக்காகக் காத்துக்கொண்டிருந்தேன், யாகோவ் !"

தன் தந்தையின் குரல் வழக்கத்துக்கு மாறாக, சாந்தமடைந்திருப்பதாகவும், முகத்தில் இளமைக்களை தட்டியிருப்பதாகவும் உணர்ந்தான்.

"நான் சாமான்கள் கொண்டுபோவதற்காக வந்தேன்," என்று சொன்னான், யாகோவ். பிறகு செர்யோஸ்காவைப் பார்த்து, சிகரெட்டுப் பிடிக்கக் கொஞ்சம் புகையிலை கேட்டான்.

"எங்கிட்டே இருந்து உனக்கு இத்தினிப் பொகையிலே கூடக் கிடைக்காது, மூட்டாள் பயலே!" என்று உடம்பை அசைக்காமல் பதில் சொன்னான் செர்யோஸ்கா.

"நான் ஊருக்குப் போறேன், யாகோவ்!" என்று உணர்ச்சி பூர்வமாகப் பேசினான், வாஸிலி; அவன் விரல்கள் மணலில் கோடுகள் கிழித்துக்கொண்டிருந்தன.

"அப்படியா?" என்று தன் தந்தையைப் பார்த்து அறியாத பாவனையில் கேட்டான் யாகோவ்.

"நீ என்ன?... நீ இங்கேயே தங்கப்போறியா?"

"ஆமா, தங்கிடப் போறேன்...ஊரிலே நம்ம ரெண்டு பேருக்குப் போதுமான வேலை இல்லே!"

"சரி...நான் ஒண்ணும் சொல்லலே... உன் இஷ்டம் போலச் செய்யி. நீ இன்னம் சின்னக் குழந்தை யில்லே. ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சிக்கோ-என் உடம்பு, இன்னம் ரொம்ப நாளைக்குத் தாங்கப் போறதில்லே...ஒருவேளை நான் உசுரோடிருக்கலாம்...ஆனா, வேலை எதுவும் செய்ய, சக்தி இருக்குமோ, இல்லையோ — எனக்கும் அதுவும் நிச்சய மில்லே...நிலத்திலே வேலை செய்யும் பழக்கமே விட்டுப் போச்சி...அதனாலே ஒண்ணு மறந்துடாதே— ஊரிலே உனக்கு 'அம்மா'ன்னு ஒருத்தி இருக்கா. அதை மறந்திராதே!"

அவனுக்கு பேசுவதற்கே சங்கடமாயிருந்திருக்க வேண்டும்; வார்த்தைகள் பல்லோடு ஒட்டிச் சிக்கி வருவதைப் போலிருந்தன. அவன் தன் தாடியைத் தட்டிக் கொடுக்கும் போது, அவன் கை நடுங்கியது.

மால்வா அவனை வெறித்துப் பார்த்தாள்; செர்யோஸ்கா ஒரு கண்ணைச் சுழித்து மூடி, மறு கண்ணை அகலத் திறந்து யாகோவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். யாகோவின் மனசில் மகிழ்ச்சி குமிழிட்டது; என்றாலும் அதை வெளிக் காட்டப் பயந்து, தன் பாதங்களையே கூர்ந்து பார்த்தவாறு மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

"அதனாலே, உன் தாயை மறந்துடாதே—நீதான் அவ ளுக்கு ஒத்தைக்கு ஒரு மகன்! அதை ஞாபகம் வச்சுக் கோ" என்றான் வாஸிலி.

"அதை நீ எனக்குச் சொல்ல வேண்டியதில்லே, எனக்குத் தெரியும்" என்று குன்றிக் குறுகிச் சொன்னான் யாகோவ்.

"ரொம்ப சரி. உனக்குத் தெரியறதிலலே" என்று அவன் தந்தை ஆரம்பித்தான். அவன் யாகோவை நம்பிக்கையற்றுப் பார்த்தான். பிறகு, "நான் சொல்றதெல்லாம் இது ஒண்ணுதான்—அவளை மறந்திராதே!" என்றான்.

வாஸிலி ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். சிறிது நேரம் அவர்கள் நால்வருமே மௌனமாயிருந்தனர். பிறகு மால்வா தான் பேசினாள்:

"சீக்கிரம் மணி அடிச்சிரும்!"

"சரி. நான் போகிறேன்!" என்று சொல்லிவிட்டு எழுந்தான் வாஸிலி. மற்ற மூவரும் அவனோடு எழுந்திருந்தனர்.

"போய் வருகிறேன், செர்ஜி!...நீ எப்போதாவது ஓல்கா நதிக்கரைக்கு வந்தால், என்னைப் பார்த்துட்டுப் போவேன்னு நம்புறேன். விலாசம் இதுதான்: ஸிம்பிர்ஸ்க் யூஜெட், மாஜ்லோ கிராமம், நிக்கோலா லேக்கோவ் ஸ்க்யாவோ போஸ்ட்."

"ரொம்ப சரி" என்று செர்யோஸ்கா சொன்னான். செம்பட்டை மயிர் நிறைந்த தன் முரட்டுக் கையால், வாஸிலியின் கையை இறுகப்பற்றிக் குலுக்கினான்; வாஸிலியின் துக்கம் தோய்ந்த முகத்தைப் பார்த்து லேசாக புன்னகை புரிந்தான்.

"லேக்கோவா நிக்கோல்ஸ்கயா கொஞ்சம் பெரிய இடம்தான்...அதைப்பத்தி நாட்டில் எல்லோருக்கும் தெரியும். அதிலிருந்து நாலு வெர்ஸ்ட் தூரத்திலே தான் நாங்க குடியிருக்கோம்" என்று விளக்கினான் வாஸிலி.

"சரி சரி. ரொம்ப சரி...அந்தப் பக்கமா வந்தா நிச்சயம் வருகிறேன்."

"போய் வருகிறேன்."

"போயிட்டு வா, பெரிய மனுஷா! போய் வா."

"போய் வாரேன் மால்வா" என்று அவளைப் பார்க்காமலேயே சொன்னான் வாஸிலி. அவன் குரல் அடைபட்டது.

மால்வா நிதானமாக, தன் சட்டைக் கையால், தன் உதடுகளைத் துடைத்துக்கொண்டு தன் வெள்ளிய கரங்களை வாஸிலியின் தோள்மீது போட்டாள்; அவனது கன்னத்தையும் உதடுகளையும் மூன்று முறை முத்தமிட்டாள்.

வாஸிலி மனம் குழம்பி, தெளிவற்று ஏதோ முனகினான். யாகோவ் தன்னிடம் தோன்றும் கேலிச் சிரிப்பை மறைப்பதற்காக, தலையைத் தாழ்த்திக் கொண்டான். செர்யோஸ்கா வானத்தை அண்ணாந்து பார்த்து, கொட்டாவி விட்டான்.

"நடந்து போறதுன்னு, ஒரே சூடாயிருக்கும்" என்றான் அவன்.

"பரவாயில்லை...சரி, நான் வருகிறேன், யாகோவ்."

"சரி, போய்வா."

அவர்கள் அனைவரும் என்ன செய்வதென்று தெரியாமல் ஒருவருக்கொருவர் எதிராக நின்றுகொண்டிருந்தனர். 'போய் வருகிறேன்' என்ற துக்க மயமான சொல் அத்தனை சிறு பொழுதுக்குள் எத்தனையோ தடவை ஒலித்துவிட்டது. அதனால் யாகோவின் மனசில் தன் தந்தையின் மீது ஒரு பரிவுணர்ச்சி ஏற்பட்டது. அதை எப்படி வெளியிடுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. மால்வா மாதிரி அவரைக் கட்டித் தழுவுவதா? செர்யோஸ்கா செய்த மாதிரி அவரோடு கை குலுக்குவதா? தன் மகனின் முகத்திலும், நின்ற நிலையிலும் தோன்றிய தவிப்பைக் கண்டு வாஸிலி கலக்கமடைந்தான்; மேலும், யாகோவின் முன்னிலையில் நிற்பதற்கே ஒரு மாதிரியான வெட்க உணர்ச்சி தோன்றியது. திடலில் நடந்த சம்பவத்தையும், மால்வா தந்த முத்தங்களையும் நினைத்துப் பார்த்தபோது இந்த வெட்க உணர்ச்சி இன்னும் மேலோங்கியது.

“சரி...உன் தாயை மட்டும் மறந்துடாதே ?” என்று முடிவாகச் சொன்னான்.

“ரொம்ப சரி, ரொம்ப சரி” என்று அன்பான புன்னகையோடு பதிலளித்தான் யாகோவ்.

“அதைப்பத்திக் கவலைப் படாதே...நான் நல்லதைத் தான் செய்வேன் !”

அவன் தலையை ஆட்டினான்.

“சரி...அது சரிதான். வருகிறேன். கடவுள் உங்கள் எல்லாருக்கும் நல்லதைச் செய்யட்டும்!...என்னை நினைச்சிக்கோ...செர்யோஸ்கா !...நான் பச்சைப் படகுக்கடியிலே என் தேநீர்க் குவளையைப் புதைச்சி வச்சிருக்கேன் !”

“இவனுக்கு அந்தக் குவளை எதுக்கு ?” என்று ஆத்திரப்பட்டுக் கேட்டான் யாகோவ்.

“என் வேலையை அவன் ஏத்துக்கிட்டான்...ஆமா செர்யோஸ்கா திடலில் வேலை பார்க்கப் போறான்” என்று விளக்கினான் வாஸிலி.

யாகோவ் செர்யோஸ்காவைப் பார்த்தான்; மால்வாவைப் பார்த்தான்; பிறகு தன் கண்ணில் தோன்றும் பிரகாசத்தை மறைப்பதற்காக, தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

“சரி, தோழர்களே ! நான் வருகிறேன்...போய் வருகிறேன்.”

வாஸிலி சுற்றும்முற்றும் வணங்கிவிட்டுப் புறப்பட்டுச் சென்றான்; மால்வா அவனோடு போனாள்.

செர்யோஸ்கா மணலில் உட்கார்ந்து, மால்வாவைத் தொடர்ந்து செல்ல முனைந்த யாகோவின் காலைப் பற்றிப் பிடித்தான்.

“என்ன இது ? எங்கே போகப் போறே ?”

“பொறு. என்னைப் போக விடு” என்று கத்திக் கொண்டே தன் கால்களை விடுவிக்க முயன்றான் யாகோவ்.

செர்யோஸ்கா அடுத்த காலையும் பிடித்துக்கொண்டு சொன்னான் :

“ இங்கே, என் பக்கத்திலே கொஞ்சநேரம் உக்காரு!”

“ ஹூம். சும்மா விளையாடாதே !”

“ நான் ஒண்ணும் விளையாடலே...ஆனா, நீ உக்காரு!”

யாகோவ் உட்கார்ந்தான்.

“ உனக்கு என்ன வேணும்?” என்று பற்களைக் கடித்துக் கொண்டு கேட்டான்.

“ பொறு. ஒரு நிமிஷம் வாயை மூடிக்கிட்டிரு. நான் யோசித்துப் பாத்து, அப்புறம் சொல்றேன் !”

செர்யோஸ்கா யாகோவைத் தன் கொடிய கண்களால் பயமுறுத்திப் பார்த்தான்; அந்தப் பார்வைக்கு யாகோவ் பணிந்துவிட்டான்.

மால்வாவும் வாஸிலியும் சிறிது நேரம் வாய் பேசாமலேயே நடந்து சென்றனர். அவள் மட்டும் அவனை அடிக்கடி கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டாள்; அப்போது அவள் கண்கள் விநோதமாகப் பிரகாசித்தன. வாஸிலி முகத்தைச் சுழித்தான்; எதுவும் பேசவில்லை. அவர்களது பாதங்கள் அந்த மணல் வெளியில் புதைந்து புதைந்து எழுந்தன; எனவே, அவர்கள் மிகவும் மெதுவாகத்தான் நடந்துசென்றனர்.

“ வாஸ்யா !”

“ என்ன ?”

அவள் அவனை ஓரக்கண்ணால் பார்த்தாள்; அவனோ கண்களைத் திருப்பிக்கொண்டான்.

“ நான் உன்னை யாஸ்காவோடு காரியமாகத்தான் சண்டை மூட்டி விட்டேன்...ஆனா, நீங்க ரெண்டு பேரும் சண்டை பிடிச்சிக்காமலே இங்கே குடி வாழ்ந்திருக்கலாம்” என்று அமைதியும் நிதானமும் கொண்ட குரலில் அவள் பேசினாள்.

“ நீ ஏன் அப்படிச் செய்தே?” என்று ஒரு கணம் கழித்துக் கேட்டான் வாஸிலி.

"எனக்குத் தெரியாது...என்னமோ அப்படி!"

அவள் தன் தோள்களைச் சிலுப்பிக் கொண்டு சிரித்தாள்.

"ரொம்ப நல்ல காரியம் பண்ணினே! ஹ்ஹி!" என்று கோபக் குரலில் கண்டித்தான் அவன்.

அவள் மௌனமாயிருந்தாள்.

"நீ என் மகனைக் கெடுக்கத்தான் போறே! கெடுத்துக் குட்டிச்சுவராக்கத்தான் போறே! ஹூம்! நீ ஒரு மாயக்காரி, மாயக்காரி! உனக்குக் கடவுளைப் பத்திக்கூட, நெஞ்சிலே பயம் இல்லே! வெட்கம், மானம் எதுவுமே இல்லே? நீ என்னதான் செய்யமாட்டே?"

"நான் என்னதான் செய்யணும்?" என்று திருப்பிக் கேட்டாள் மால்வா. அந்தக் குரலில் ஆர்வம் இருந்ததா, அல்லது கலக்கம் இருந்ததா என்று தெளிவுபடுத்திச் சொல்லுவது கடினமான காரியம்.

"என்ன செய்யணுமா? நீயா?" என்று சொன்னான் வாஸிலி. அவன் உள்ளத்தில் அவள்மீது கோபாவேசம் பொங்கிக்கொண்டிருந்தது.

அவளை மனசார அடிக்கவேண்டும், அவளைத் தன் காலடியில் பிடித்துத் தள்ளவேண்டும், தள்ளி, அந்த மணலில் போட்டு அவளை மிதிக்கவேண்டும், அவள் மார்பிலும் முகத்திலும் தன் கனத்த பூட்சுகளால் உதைத்து நசுக்க வேண்டும் என்று அவன் ஆத்திரப்பட்டான். அவன் தன் முஷ்டியை இறுகப் பிடித்துக்கொண்டு, சுற்றும்முற்றும் பார்த்தான்.

பீப்பாய் வரிசையின் பக்கம் யாகோவும், செர்யோஸ்காவும் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை வாஸிலி கண்டான்.

"போ, போ தூர! உன்னை நான் நொறுக்கித் தள்ளிப் போடுவேன். உன்னை..."

அவன் அந்த வசை மொழியை அவள் முகத்துக்கு நேராகவே சொன்னான். அவன் கண்கள் ரத்தம் பாய்ந்

திருந்தன; தாடி நடுங்கியது; கைகள் தன்னையுமறியாமல், கழுத்துக் குட்டைக்கு வெளியில் வந்து புரண்டு கொடுக்கும் அவளது தலை மயிரைப் பற்றுவதற்காக நீண்டன.

என்றாலும், அவள் தன் பசிய நிறக் கண்களால் அவனையே பார்த்துக்கொண் டிருந்தாள்.

"நான் உன்னைக் கொண்ணிருக்கத்தான் வேணும், ஒழுக்கம் கெட்டவளே! பொறு...உனக்கு வரப்போற விதியை நீ அனுபவிக்காமல் போகமாட்டே! யாராச்சும் உன் கழுத்தை முறிச்சித் தள்ளத்தான் போறான்!"

அவள் புன்னகை புரிந்தாள்; பதில் பேசவில்லை. பிறகு நெடிய பெருமூச்செறிந்து விட்டு, கண்டிக்கும் குரலில் சொன்னாள்:

"போதும், நிறுத்து. சரி. போயிட்டு வா."

உடனே அவள் திரும்பி நடக்க ஆரம்பித்துவிட்டாள்.

வாஸிலி அவளுக்குப் பின்னால் கர்ஜித்தான். பற்களை நறநறவென்று கடித்தான். ஆனால், மால்வாவோ திரும்பிப் பார்க்காமல் நேராக நடந்தாள். போகும்போது, வழியில் வாஸிலி நடந்துவந்த காலடித் தடங்களைக் காண முயன்று கொண்டே சென்றாள். அப்படி ஏதாவது ஒன்றிரண்டு தடங்கள் அவள் கண்ணில் பட்டால், உடனே தன் காலால் அவற்றை அழித்துவிட்டுச் சென்றாள். எனவே அவளால் மெதுவாகத்தான் நடக்க முடிந்தது. அவள் அந்தப் பீப்பாய் வரிசைகளை நெருங்கியவுடன் செர்யோஸ்கா அவளைப் பார்த்துக் கேட்டான்:

"சரி, அவனை வழியனுப்பிவிட்டு வந்திட்டியா?"

மால்வா அதை ஆமோதித்துத் தலையை ஆட்டிக் கொண்டே அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள். யாகோவ் அவளைப் பார்த்தான்; பார்த்து லேசாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பினால், அவன் உதடுகள் அசைவதைப் பார்த்தால், அவன் தனக்கு மட்டுமே கேட்கும் ஏதோ ஒரு ரகசியத்தை முணுமுணுப்பது போலிருந்தது.

' அவனை வழியனுப்பிவிட்டு வந்து, அவன் போயிட்டானேன்னு இப்போ வருத்தப்பட்டுக் கிட்டிருக்கே, அப்படித்தானே !'' என்று கேட்டுவிட்டு, 'பிரிவாற்றுமை'யைப் பற்றி ஒரு பாடலையும் சொன்னான், செர்யோஸ்கா.

''சரி. நீ அங்கே, திடலுக்கு எப்போ போகப்போறே?'' என்று கடலை நோக்கி, தலையை அசைத்துக்கொண்டே செர்யோஸ்காவிடம் பதிலுக்குக் கேட்டாள் மால்வா.

'' இன்னைக்கி சாயந்திரம் !''

'' நானும் உன்னோடே வாரேன் !''

'' நீயும் வர்ரியா ? இப்பத்தான் எனக்கு உன்னைப் புடிச்சிருக்கு !''

'' நானும் வர்ரேன் !'' என்று அழுத்தமாகச் சொன்னான், யாகோவ்.

'' உன்னை யாரு அழைக்கிறு ?'' என்று தன் கண்களைச் சுருக்கிச் சுழித்துக்கொண்டே கேட்டான் செர்யோஸ்கா.

உடைந்துபோன மணியின் ஓசை மனிதர்களை வேலைக்கு வரும்படி அழைத்தது; அதன் ஒவ்வொரு நாத டங்காரமும், ஒன்றன்பின் ஒன்ருகத் தொடர்ந்து வந்து, பூரிக்கும் கடலலைகளோடு முயங்கி மடிந்தது.

'' நீ இருக்கிறியே ?'' என்று சொல்லிவிட்டு, மால்வாவைப் பெருமிதத்தோடு பார்த்தான், யாகோவ்.

'' நானு ?'' என்று வியந்துபோய்க் கேட்டாள் மால்வா: '' நீ எதுக்கு வேணும் எனக்கு ?''

'' நாம் நேரடியாகப் பேசுவோம், யாஸ்கா !'' என்று கடுமையாகச் சொல்லிவிட்டு எழுந்து நின்றுன் செர்யோஸ்கா : ''நீ இவளை ஏதாவது தொந்தரவு பண்ணினே, அப்புறம், உன்னை வெறும் கூழு மாதிரி நசுக்கிப் போட்டிருவேன் ! இவமேலே நீ கையை எதுவும் வச்சே, அப்புறம், உன்னை ஓர் ஈயைக் கொல்ற மாதிரி உன்னைக் கொன்னு தீர்த்துப் போடுவேன் ! மண்டை மேலே ஒரே அடி—

அப்புறம் நீ ஒரேயடியாத் திரும்பாப் பயணம் போயிடுவே! அதெல்லாம் எனக்கு ஒண்ணும் கஷ்டமில்லே!''

அவன் முகம், உடம்பு, முறுக்கேறிய கைகள் எல்லாம் யாகோவின் குரல்வளையை நோக்கி நீண்டன; அதைப் பார்க்கும்போது, அவன் சொன்னமாதிரி, அது ஒன்றும் அவனுக்குக் கஷ்டமில்லாத காரியம் போலவே தோன்றியது.

யாகோவ் ஓரடி பின்வாங்கி, அடைத்துப்போன குரலில் பேசினான் :

"கொஞ்சம் பொறு. ஏன்? அவளாகவே...''

"போதும் நிறுத்து. நீ உன்னைப்பத்தி என்னதான் நினைச்சிக்கிட்டிருக்கே? ஆட்டுக்கறி நீ திங்கறதுக்கு இல்லேடா, நாயே! கடிச்சிப் பாக்கிறதுக்கு ஓர் எலும்பு கிடைச்சா, அந்த நன்றியோடு பிழைச்சிப்போ... சரி. நீ இன்னம் என்னத்தைப் பார்த்துக்கிட்டிருக்கே?''

யாகோவ் மால்வாவைப் பார்த்தான். அவளது பசிய கண்கள் அவனது முகத்துக்கு நேராகச் சிரித்தன; அது கொல்லும் சிரிப்பு; பொல்லாத கேலிச் சிரிப்பு! மேலும், அவள் செர்யோஸ்காவின் மீது சொகுசாகச் சாய்ந்தும் கொண்டாள்! இதையெல்லாம கண்டவுடன் யாகோவுக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

அவர்கள் இருவரும், ஒருவர் பக்கம் ஒருவராக அங்கிருந்து நடந்து சென்றனர்; சிறிது தூரம் சென்றதும், அவர்கள் இருவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். யாகோவ் தன் வலது காலால் மணலைக் கிளறித் தோண்டிக்கொண்டே, திக்பிரமை பிடித்ததுபோல், மூச்சு வாங்க நின்றான்.

தூரத்தில் வெட்டவெளியாகப் பரந்து கிடக்கும் மஞ்சள் நிற மணல் வெளியில், ஒரு சிறு கரிய மனித உருவம் நடந்து சென்றது. அதற்கு அப்பால், பிரம்மாண்டமான சமுத்திரம் குதூகலத்தோடு சூரிய ஒளியில் பளபளத்தது; அதற்கு இந்தப்புறம் அடிவானம் வரையிலும், ஒரே மணல் வெளி; பயங்கரமான, நிர்மானுஷ்யமான மணல் வெளி.

யாகோவ் அந்தத் தன்னந்தனியான உருவத்தைப் பார்த்தான். கலக்கமும் பிரமையும் நிறைந்து நின்ற தன் கண்களைப் பலமுறை இமை தட்டிக்கொண்டான்; தன் இரு கைகளாலும் நெஞ்சைப் பரபரவென்று தேய்த்துவிட்டுக் கொண்டான்.

மீன் பண்ணை முழுவதும் செம்படவர்களின் நடமாட்டம் ரீங்காரித்துக்கொண்டிருந்தது.

மால்வா கணீரென்ற குரலில் சத்தம்போட்டுப் பேசுவதை யாகோவ் கேட்டான்.

"என் கத்தியை யார் எடுத்தா ?"

அலைகள் சத்தமாக மோதிச் சிதறின; சூரியன் பிரகாசித்தது; கடல் சிரித்துக்கொண்டிருந்தது......

முற்றும்.